# தர்கா நகரின் பொக்கிஷங்கள்

**வெளியீடு:**

**நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம்**

**தர்கா நகர்**

**தர்கா நகரின் பொக்கிஷங்கள்**
(தர்கா நகரின் சமய, சமூக மற்றும் கல்விசார் நிறுவனங்கள் பற்றிய சுருக்கமான வரலாற்றுக் குறிப்புக்கள்)

Dharga Nagarin Pokkishangal (Tamil)
(Brief historical information on the Religious, Social and Educational Institutions of Dharga Town)

Compiling of Information:
M.T.M. Imthiaz

Cover Design by:
Nawal Yoosuf Ali

ISBN: 978-624-6182-00-7

Year of Publication: 2022

Typesetting & Layout by:
Everest Enterprises
70, Main Street, Dharga Town.

Published by:
Najeeb Hajiar Education Center
97, Lotus Road, Dharga Town - 12090
Sri Lanka

Printed by:
Millennium Graphics, Maharagama

For Free distribution

# பொருளடக்கம்


மதிப்புரை 05

ஆக்கியோன் உரை 07

01. தர்கா நகர் பற்றிய ஒரு சிறு அறிமுகம் 09

02. தர்கா நகர் முஹியித்தீன் மஸ்ஜித் - பெரிய பள்ளி 11

03. அல் ஹிழ்ரியா ஜும்மா மஸ்ஜித் 14

04. தெருவுப் பள்ளி எனப்படும் மீரா ஜும்மா மஸ்ஜித் 15

05. அதிகாரிகொடை மஸ்ஜிதுர் ரஹ்மான் 23

06. ஷெய்க் மதார் மஸ்ஜித் - வெலிப்பிட்டிய 26

07. மீரிப்பண்ணை மஸ்ஜிதுல் குர்பதுஸ்ஸாகிரீன் 28

08. மஸ்ஜிதுல் தாருல் ஹுதா 29

09. அல் மஸ்ஜிதுல் பதாஹ் 30

10. மஸ்ஜிதுன் நூர் 34

11. மஸ்ஜிதுல் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் 35

12. மஸ்ஜிதுல் பலாஹ் 37

13. சொபலன்கந்த பலாஹ் மஸ்ஜித் 39

14. மஸ்ஜிதுத் தக்வா 40

15. மஸ்ஜித் ஸகரிய்யா 41

16. ஹாஜி லேன் மஸ்ஜிதுல் பிலால் 42

17. மஸ்ஜிதுல் ஜபல் 44

18. மஸ்ஜிதுல் அஷ்ரபிய்யா 45

19. மஸ்ஜிதுல் அபூபக்கர் 46

20. தர்கா நகர் ஆலிம் ஸாஹிப் அப்பா தக்கியா 47

21. பாஸியத்துல் ஷாதுலிய்யா ஸாவியா 50

22. மஸ்ஜித் முஹியத்தீன் காதிரிய்யா தக்கியா 52
23. காதியார் அப்பா தக்கியா 55
24. ஸியாத் மரிக்கார் தக்கியா 56
25.அலக்கந்துபிட்டிய ஷெய்கு தாவூத் தக்கியா 57
26. முஅய்யிதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி 59
27. மத்ரஸத்துல் இழ்ஹாருல் இஸ்லாம் 67
28. தாருல் மூஃமினாத் பெண்கள் அரபிக் கல்லூரி 70
29. அல் ஹம்றா மகா வித்தியாலயம் 73
30. அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் மத்திய கல்லூரி 77
31. ஸாஹிராக் கல்லூரி 82
32. தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி 89
33. நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் 91
34. இஷா அத்துல் இஸ்லாம் சிறுவர் நிலையம் 99
35. தர்கா நகர் ஜமாஅத் கவுன்ஸில் 102
36. தர்கா நகர் பிரதேச வைத்தியசாலை 104
37. தர்கா நகர் உள்ளூர் நிர்வாகம் 106
38. நஜீப் ஹாஜியார் சிறுவர் பூங்கா 109
39. தர்கா நகரின் விளையாட்டுத்துறை 111
40. Aid Foundation Sri Lanka 114
41. Aluthgama Development Foundation (ADF) 117
தேவையான தகவல்களை வழங்கி உதவியோரார் 119
குறிப்புக்கள் 120

# மதிப்புரை

“வரலாறு என்பது மனிதர்களின் நினைவுகளில் காலத்தால் வரையப்படும் வட்டமாய்ச் சுழல்கின்ற கவிதையாகும்”

ஒரு நகரத்தின் வரலாறானது அங்குள்ள வரலாற்றுரீதியான வழிபாட்டுத் தலங்கள், கல்விக்கூடங்கள் என்பவற்றோடும் நாட்டின் பௌதீக வரைபடத்தில் அந்த நகரின் பெயரைப் பதித்து விடுவதற்காக முயற்சி செய்த முன்னோடித் தலைவர்களோடும் இரண்டறக் கலந்திருக்கிறது. தமது நெடுங்காலச் சேவைகள் மூலமாக அவர்கள் காலத்தால் அழியாத அடையாளச் சின்னங்களை உருவாக்கி விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அல்ஹாஜ் முஹமத் நஜீப் பின் அமீர் ஆலிம் அவர்கள் எங்கள் நகரிலுள்ள சமய நிறுவனங்களை விருத்தி செய்வதில் உண்மையான ஆர்வம் காட்டி வருகிறார். மீரா ஜும்மா மஸ்ஜித் மற்றும் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி என்பவற்றை புதுப்பித்து, புனர் நிர்மாணம் செய்வதில் அவர் ஆற்றியுள்ள குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் இந்த நகரின் வரலாற்றிலே ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டியவை. மேலும் லோட்டஸ் வீதியில் தனது சொந்த காணியில் தனது சொந்த முயற்சியினால் அவர் நிறுவிய நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் (NEC) மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். எமது இளம் பரம்பரையினர் மத்தியில் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் போதிப்பதில் இந்த நிறுவனம் பெருமளவு பங்களிக்கப் போகின்றது. இந்நிறுவனத்தின் கம்பீரமான கட்டடம் இந்நகர மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது.

எமது பிரதேச ஜனாஸாக்களை வைத்தியசாலைகளில் இருந்து உரிய வீடுகளை நோக்கி எடுத்துச் செல்வதற்காக வாகன வசதி செய்து கொடுப்பதற்கு நஜீப் ஹாஜியார் அவர்கள் அப்பழுக்கற்ற ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். இளம் சிறார்கள் உடற் பயிற்சி பெறுவதற்காக அல் ஹம்றா மகா வித்தியாலய வாளாகத்தினுள் சிறுவர் பூங்காவொன்றையும் அவர் அமைத்துக் கொடுத்துள்ளார்.

அதிகாரிகொடையில் அமைந்திருக்கும் மஸ்ஜிதுல் ரஹ்மான் பள்ளி வாசலின் கட்டட நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி

செய்து கொடுப்பதில் நஜீப் ஹாஜியார் அவர்கள் கணிசமான பங்களிப்பொன்றைச் செய்துள்ளார். அவருடைய சிறப்பான உதவி வெலிப்பிட்டிய தக்வா பள்ளி வாசலுக்கும் கிடைத்திருக்கிறது.

மீரா ஜும்மா மஸ்ஜிதைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு நிதி உதவி வழங்கிய கொடைவள்ளல் அஷ்ஷெய்க் அஹமத் கலிஃபா அல் ஸுவைய்தி அவர்களுக்கு நன்றி கூறுவதற்காகவும், மீரா ஜும்மா மஸ்ஜித் புதிய கட்டிடத்தின் திறப்பு விழாவுக்கு ஷெய்க் அவர்களுக்கு அழைப்பு விடுப்பதற்காகவும் அல்ஹாஜ் ஸஃப்வத் அவர்களும் நானும் ஐக்கிய அரபு எமிரேட்டில் இருக்கும் அல் ஐனுக்கு விஜயம் செய்தபோது, அல்ஹாஜ் நஜீப் அவர்கள் அபுதாபியில் உள்ள ஷெய்க்மாருடன் நல்ல தொடர்பை வைத்திருப்பதையும் அவர் மீது அந்த ஷெய்க்மார்கள் சகோதர வாஞ்சையுடன் மரியாதையும் அன்பும் செலுத்துவதையும் காணக்கூடியதாக இருந்தது.

எமது சமூகத்திற்கு நஜீப் ஹாஜியார் அவர்கள் ஆற்றியுள்ள அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை எண்ணிப் பார்க்கும்போது, தர்கா நகர் ஹாஜி லேனில் ஆற்றங்கரை அருகில் அமைந்துள்ள பிலால் மஸ்ஜித், காலி மாவட்டத்தில் உள்ள பனாபிட்டியவில் உள்ள மஸ்ஜிதுன் நபவி, களுத்துறையில் அமைந்துள்ள ஸாவியா, காலியில் இருக்கும் மதரஸத்துல் முஸ்தபவியா, வவுனியாவில் இருக்கும் அனாதை இல்லக் கட்டடம் என்பன கண்முன்னே வருகின்றன. இவையாவும் அவரது பரோபகார தன்மை பற்றி பறைசாற்றிக் கொண்டிருக்கின்ற நினைவுச் சின்னங்களாகும்.

அல்ஹாஜ் நஜீப் பின் அமீர் ஆலிம் அவர்கள் தமது பிறந்த ஊர் மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருக்கிறார். எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா அவருக்கும் அவரது குடும்பத்தவர் களுக்கும் நீண்ட ஆயுளையும் நல்ல ஆரோக்கியத்தையும் நிலையான சந்தோஷத்தையும் அருள் புரிவானாக.

**எம். எம். நிஸாம் மஷ்ஹூர் B.A.**

Najeeb Hajiar Education Center (NEC) مركز الحاج نجيب للتعليم
Registration No. : WKK9487 رقم التسجيل_WKK9487

# ஆக்கியோன் உரை

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

சர்வ புகழும் பெருமையும் உலகத்தாரையெல்லாம் படைத்து இரட்சிக்கும் அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலாவுக்கே உரியன. அவனது இறுதித் தூதர் ரஸூலே கரீம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

முதல் மனிதரான நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதல் அவரைத் தொடர்ந்து வந்த பிரதான இறைதூதர்கள் பலரின் வரலாறுகளை மனிதர்கள் படிப்பினை பெறும் முகமாக அல்லாஹுதஆலா குர்ஆனிலே பல இடங்களில் விவரித்துக் கூறியுள்ளான். அதே போன்று எமது பேரன்புக்குரிய இறுதித் தூதர் ரஸூலே கரீம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களினதும் அன்னாரைப் பின்பற்றி வாழ்ந்த அன்புத் தோழர்களினதும் வாழ்க்கை வரலாறுகளை நாம் ஹதீஸ்கள் மூலமாக அறிந்து கொண்டு எமக்குத் தேவையான பல படிப்பினைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இதே அடிப்படையில் நான் பிறந்து வளர்ந்த, எனக்கு அறிவும் அனுபவமும் தந்து வளமூட்டிய எனது ஊரான தர்கா நகர் பற்றியும் இங்கு அமைந்து நெடுங்காலமாக சமய, சமூகப் பணிகளை ஆற்றிவரும் நிறுவனங்கள் பற்றியும் அவற்றுக்குப் பின்னணியில் நின்று அயராது உழைத்த, உழைத்துக்கொண்டிருக்கின்ற உத்தம மனிதர்கள் பற்றியும் வரலாற்று ரீதியான தகவல்களைச் சேகரித்து நூலுருவில் சமர்ப்பிக்க வேண்டுமென்ற ஆவல் என் மனதில் உதித்தது. அதன் விளைவே இப்போது உங்கள் கைகளில் தவழும் தர்கா நகரின் பொக்கிஷங்கள் எனும் இந்நூல். தேசிய ரீதியில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க சமய, சமூக நிறுவனங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள எமது ஊரின்

பொக்கிஷங்கள் பற்றிய வரலாற்று விபரங்கள் இதுவரை ஒழுங்காக ஆவணப்படுத்தப்படவில்லையே என்ற குறையை நீக்குவதும் எனது இந்த முயற்சியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

இந்த நூலில் உள்ளடக்குவதற்குத் தேவையான தகவல்களையெல்லாம் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் திரட்டிச் சேகரித்து ஒழுங்குபடுத்தி எழுதித்தந்த நூலாசிரியரும் அனுபவமிக்க எழுத்தாளருமான அல்ஹாஜ் முஹம்மத் தாஸிம் முஹம்மத் இம்தியாஸ் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள். இங்கு தரப்பட்டுள்ள தகவல்களில் குறைபாடுகள் இருக்கக்கூடும். அவ்வாறு ஏதும் தகவல்கள் விடுபட்டோ பூரணமின்றியோ இருப்பின் அதுபற்றி இதனை வெளியிடுகின்ற நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்திற்கோ அல்லது எதிர்கால நூலாசிரியர்களுக்கோ அறிவிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம். பிற்காலத்தில் இந்த விடயங்கள் பற்றி எழுதுபவர்கள் தகவல்களைத் திருத்தமாகப் பதிவு செய்வதற்கு இது உறுதுணையாக அமையும்.

இந்நூலைத் தயாரித்து வெளியிடும் பணியில் எனக்குத் தேவையான ஆலோசனைகளைத் தந்து, வழிகாட்டி, பல்வேறு முறைகளிலும் உதவி ஒத்தாசை வழங்கிய அல்ஹாஜ் எம்.எம். நிஸாம் மஷ்ஹூர், அல்ஹாஜ் மௌலவி எம். ஆர். எம். ஸில்மி, அல்ஹாஜ் ரீ. எம். ஸபா, அலஹாஜ் வை. ஜ. எம். ஹாபிஸ் ஆகியோர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலா எமது நல்லெண்ணத்தையும் பணிகளையும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்வானாக!

நன்றி

முஹம்மத் நஜீப் பின் அமீர் ஆலிம்
*நிறுவனர்*
*நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம்*

*1*

# தர்கா நகர் பற்றிய ஒரு சிறு அறிமுகம்

*தர்கா நகர் முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஓர் அழகான ஊர். மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் பேருவளைத் தொகுதியில் அமைந்துள்ள இவ்வூர் குறிப்பிடத்தக்க அளவு வரலாற்றுப் புகழ் மிக்கது. பேருவளைத் தொகுதியின் முஸ்லிம் சனத்தொகையில் சுமார் 40 சதவீதத்தைக் கொண்டதாக உள்ள இவ்வூரைப் பற்றிய தகவல்களைஅடுக்கடுக்காய்க் கூறிக் கொண்டே போகலாம்.*

*தர்கா நகர், பெந்தோட்டை நதியைத் தெற்கு எல்லையாகக் கொண்டு கடல் மட்டத்தை அண்மியதாக இருக்கிறது. இவ்வூரில் மீரிப்பண்ணை, அதிகாரிகொடை, மீரச்சிகந்தை போன்ற இடங்களில் கண்ணுக்கு அழகாய்க் காட்சியளிக்கும் அழகிய மலைக் குன்றுகளையும் காணக் கூடியதாக இருப்பது ஊருக்கு அழகு சேர்ப்பதாகும்.*

*பல நூற்றாண்டுகால வரலாற்றுப் புகழ்மிக்க பெரிய பள்ளி, சீனாவத்தைப் பள்ளி, மீரா பள்ளி, வெலிப்பிட்டிய பள்ளி, அதிகாரி கொடைப் பள்ளி, மீரிபண்ணைப் பள்ளி ஆகிய பள்ளிவாயில்களை காணும்போதெல்லாம் ஒரு பக்திப் பரவசம் ஏற்படுகின்றது.*

*தர்கா நகரின் வரலாறு, அதன் ஆதிக்குடிகளாக 7ம் 8ம் நூற்றாண்டுகளில் அரபு நாடுகளிலிருந்து வந்து கடலோரப் பகுதிகளில் குடியேறிய அராபியர்களிலிருந்து ஆரம்பிக்கிறது.*

*ஆரம்பகட்டத்தில் இங்கு சில குடும்பங்களே வாழ்ந்து வந்த போதிலும் இன்னும் சில முஸ்லிம் குடும்பங்கள் தர்கா நகரை அண்டிய பகுதிகளான அளுத்கம, மொரகல்ல, கொட்டப்பிட்டிய போன்ற பிரதேசங்களில் சிங்கள மக்களுடன் நெருக்கமாகவும் இணக்கமாகவும் வாழ்ந்து வந்தனர். பள்ளிவாயில்கள் தர்கா நகரில் தோற்றமளித்த பின்னர் எமது முஸ்லிம் மக்கள் ஊரின் மத்திய பகுதியில் குடியேறியதாக வரலாறு கூறுகின்றது.*

ஒரு கிராமமாக விளங்கிய தர்கா நகரில் சுதந்திரத்திற்கு முன்னைய காலகட்டத்தில் சுமார் ஐயாயிரத்துக்கு உட்பட்ட மக்களே வாழ்ந்து வந்தனர். அங்கு பெரிய பெரிய தோட்டங்களுடன் சில வீடுகள் உருவாகின. தென்னை, பலா, ஈரப்பலா, மா, பப்பாளி போன்ற மரங்களும் பச்சை பசேலெனக் காட்சி அளித்தன. இவ்வூர்மக்களுக்கு ஆற்றங்கரையோரம் ஒரு பிரதான இடமாக விளங்கியது. இப்பகுதிப் பெண்கள் கயிறு திரித்தல், ஓலை இழைத்தல் போன்ற தொழில்களைச் செய்து தமது வாழ்க்கை வண்டியை ஓட்டினர். ஆண்கள் சிலர் மீன்பிடித் தொழிலைச் செய்து வந்தனர். இன்னும் சிலர் சிங்களக் கிராமங்களுக்குச் சென்று துணி வியாபாரம் செய்தனர். மேலும் சிலர் இலங்கையின் பல பகுதிகளுக்கும் சென்று புடவைக் கடை வைத்து தொழிலில் முன்னேற்றத்தைக் கண்டனர். படிப்படியாக கல்வித்துறை யிலும் முன்னேறி கல்விமான்களும் பல்வேறு துறைசார் நிபுணர்களும் சில வைத்தியர்களும் உருவாகினர்.

1896ஆம் ஆண்டில் தர்கா நகரில் முதன் முறையாகக் கல்விக்கூடம் ஒன்று உருவானது. அந்தக் கல்விக்கூடம் தான் அல்ஹம்றா கல்வி நிலையம். இற்றைக்கு 125 வருடங்களுக்கு முன் மஸ்ஜித்களையும் ஸாவியாக்களையும் தக்கியாக்களையும் தவிர தர்கா நகரில் முஸ்லிம் சமூகத்திற்கு கல்வி கற்க பாடசாலைகள் எதுவும் இருக்கவில்லை. இருந்தபோதிலும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கிய ஒரு சமூகம் பூப்போல மலர்ந்து இங்கு மணம் பரப்பிக் கொண்டிருப்பது வரலாற்று உண்மையாகும்.

அன்று போலன்றி இன்று இங்கு பல மாற்றங்கள் ஏற்பட்டு இன்றைய ஊர்ச் சூழல் வித்தியாசமாகக் காணப்படுகின்றது. மக்கள் தொகை பல மடங்காக அதிகரித்ததனால் தர்கா நகர் ஒரு நெருக்கடி மிகு நகரமாக மாறியுள்ளது. அன்று போலில்லாமல் இன்றைய வளர்ச்சி எம் சமூகம் முன்னேற்றம் கண்டுள்ளதற்கு அடையாளமாகும். கடந்து சென்ற பல நூற்றாண்டு கால வரலாற்றில் ஊரின் இன்றைய நிலையைத் தோற்றுவிக்க உதவிய அரும் பொக்கிஷங்களே இந்நூலில் சித்தரிக்கப்படுகின்றன.

## 2

# தர்கா நகர் முஹியித்தீன் மஸ்ஜித் -

## பெரிய பள்ளி

*அழகும் ஆற்றலும் நிறைந்த தர்கா நகரின் வரலாற்றை உயர்த்திக் கொண்டிருக்கும் பழைமைவாய்ந்த முஹியித்தீன் மஸ்ஜித் என்னும் பெரிய பள்ளி, முஸ்லிம்களின் இதயத்தைக் கவர்ந்திழுக்கும் ஒரு புனித இடமாகும். கொழும்பு, காலி போன்ற பகுதிகளிலிருந்து அளுத்கமை நகரின் ஊடாக தர்கா நகர் நோக்கி வரும் மக்களுக்கு ஊரின் ஆரம்பமாகவும் வருக வருக என வரவேற்கும் மனம் நிறைந்த பசுமையான காட்சியுள்ள இடமாகவும் இது திகழ்கிறது.*

*தர்கா நகரின் பிரதான வீதியில் கம்பீரமாகக் காட்சி அளிக்கும் இப்பள்ளிவாசலானது பலரால் கட்டப்பட்டது என்பதற்கு எழுத்துமூல சான்றுகள் இல்லாவிடினும் அதன் தோற்றத்தை வைத்து நீண்டகால வரலாறு கொண்ட ஒன்றினால்தான் இவ்வாறு காட்சியளிக்க முடியும் என்பதை எவராலும் ஊகிக்க முடியும். இதுபற்றிய மூல வரலாறு தமது மூதாதையர்கள் சொன்னதாக அதிகமான ஊர் வாசிகளின் வாய்களில் வலம்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரபு நாடுகளிலிருந்து வந்து பேருவளையில் குடியேறிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஷேக் ஜமால்தீன் என்பவர்தான் இப்பள்ளியைக் கட்டுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என இவ்வரலாறுகள் கூறுகின்றன.*

*ஓய்வு பெற்ற அதிபர் மர்ஹூம் அல்ஹாஜ் ஐ. எல். எம். சுஐப் அவர்கள் 2005 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட தர்கா நகர் என்ற நூலில் பெரிய பள்ளியின் வரலாறு பற்றிக் குறிப்பிடும் போது, தர்கா நகரில் கதீபாக பலவருடங்கள் கடமையாற்றிய உமர் லெப்பை என்பவர் தாம் எழுதி வைத்துள்ள ஒரு குறிப்பில் இது பற்றிய வரலாறு மிக நீண்டது எனக்கூறி அதற்குச் சான்றாக அங்கு கதீப்களாகப் பணியாற்றியவர்களின் பெயர்களை வரிசைப்படுத்தி எழுதிவைத்துள்ளார் என்பதை யும் குறிப்பிட்டுள்ளார்.*

அல்காமம் எனப் பலராலும் பொதுவாக அழைக்கப்பட்ட தர்கா நகரின் முதல் கதீபாக முன்னா அப்துல் கர்ணைன் பக்தாதி இருந்துள்ளார் என்றும் அவருடன் இன்னும் சிலர் பெரிய பள்ளியில் குத்பா பிரசங்கம் செய்துள்ளார்கள் என்றும் தெரியவருகிறது. அபூபக்கர் ஸித்தீக் (ரழி) அவர்களின் பரம்பரையில் உதித்த பக்தாதி ஹிஜ்ரி 556 ஆம் ஆண்டு (கிபி 1188ஆம் ஆண்டு) இங்கு வந்துள்ளார். இவரது மகன் கதீப் பதுர்தீன் பக்தாதி, அவருக்குப் பின் அவரது மகன் கதீப் சம்சுதீன் பக்தாதி, அதன்பின்னர் அவர் மகன் கதீப் முன்னா ஹஸன், அதன் பின்னர் அவரது மகன் கதீப் முன்னா ஹுஸைன், பின்னர் அவரது மகன் கதீப் கோஜா முஹம்மது, அதன் பின்னர் அவரின் மகன் கதீப் ஹஸன் லெப்பை ஆகியோர் இங்கு குத்பா பிரசங்கம் நிகழ்த்தியிருக்கிறார்கள். கதீப் ஹஸன் லெப்பை என்பவர் காலி கோட்டையில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் அந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவருக்கு நான்கு ஆண் மக்கள்.

அவர்களுள் கதீப் ஆகப் பணிபுரிந்தவர் மீரா ஹஸன் லெப்பை. அவரைத் தொடர்ந்து கதீப் உமர் லெப்பை, ஹஸன் மீராலெப்பை ஆகியவர்கள் மாறி மாறி கதீப்களாக பணிபுரிந்தனர். உமர் லெப்பையின் காலத்தில் லெப்பை குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மாறி மாறி குத்பா ஓதி வந்தனர். அவர்களுள் கதீப் மஹல்லம் முஹம்மது லெப்பையின் மகன் வதூத் ஆலிம் அவர்களும் அவரைத் தொடர்ந்து, செய்யது அஹ்மது ஆலிம், அப்துல் ரஸ்ஸாக் ஆலிம், உமர் லெப்பையின் மகன் அப்துல் அஸீஸ் லெப்பை ஆகியோரும் அவர்களைத் தொடர்ந்து செய்யது அஹ்மது ஆலிம் அவர்களின் மகன் மஸா ஆலிம் அவர்களும் பெரிய பள்ளியில் குத்பா பிரசங்கம் செய்பவர்களாக இருந்தனர்.

இத்தகவல்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது தர்கா நகர் என்ற நூலில் அதன் ஆசிரியர் அல்ஹாஜ் ஐ. எல். எம். சுஐப் அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல் பெரிய பள்ளிவாயலின் ஆரம்பம் 14ஆம் 15ஆம் நூற்றாண்டுகளுக்கு உட்பட்டது என இருந்தபோதிலும் அவர் ஏனைய இடங்களில் குறிப்பிட்டுள்ள சில தகவல்களை வைத்துப் பார்க்கும்போது பெரிய பள்ளியின் வரலாறு 800 வருடங்களைத் தாண்டியிருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு.

முஹியத்தீன் மஸ்ஜித், தர்கா நகரின் ஆரம்பப்பள்ளிவாயல் என்ற வகையில் முதல் அரபு மத்ரஸாவையும் ஜனாஸா மையவாடியையும் தன்னோடு இணைத்துக் கொண்டிருந்தது.

தெருவுப் பள்ளி உருவானதன் பின்னர் இதன் நிர்வாகம் தெருவுப் பள்ளியையும் இணைத்துக்கொண்டது. இன்று வரையும் இரு மஸ்ஜித்களினதும் நிர்வாகத்தினர் ஒரே குழுவினராக இருப்பது சந்தோஷத்துக்குரிய விடயமாகும்.

சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் பெரிய பள்ளிவாயலின் பழைய கட்டடத்தின் வலப்புற சிறகும் இடதுபுறக் கட்டிடமும் சீனாவத்தையைச் சேர்ந்த கருவக்காட்டு முதலாளி என அழைக்கப்பட்ட முஹம்மது லெப்பை என்பவரால் கட்டப்பட்டுள்ளன. மேற்சொன்ன இடதுபுற கட்டிடத்திலேயே பெரிய பள்ளியின் மேல்மாடி கட்டப்படும் வரை, முஅய்யிதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1972ஆம் ஆண்டு பெரிய பள்ளிவாயல் புது கட்டடமாக உருவாக்கப்பட முன்பு அது எவ்வளவு பழமை வாய்ந்ததாக இருந்தது என்பது தற்போதுள்ள 60 வயதைத் தாண்டிய முதியவர்களுக்கு நன்கு நினைவிருக்கும். பல பொருளாதாரச் சிக்கல்களுக்கு மத்தியில் ஏற்பட்ட தாமதங்களின் பின்னர் அது 1972ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது பெரிய சாதனையே.

மர்ஹூம்களான ஏ. ஆர். முஹம்மது, அல்ஹாஜ் எம். ஏ. பத்தாஹ், ஜமால்தீன் மரிக்கார் ஆகியோரின் நிர்வாகக் காலத்தில் ஊர் மக்களில் நல்லெண்ணம் படைத்தவர்களின் பங்களிப்புடன் மாடிக் கட்டடமாக அழகிய தோற்றத்துடன் பள்ளிவாயல் நிர்மாணிக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டில் ஊர் மக்கள், உலமாக்கள், நிர்வாகத்தினர் கலந்துகொண்ட ஒரு வைபவத்தின்போது வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு முன் மர்ஹூம் அல்ஹாஜ் எம். ஐ. எம். நளீம் அவர்களால் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

இப் பள்ளிவாயலின் கட்டட நிதிக்கு அல்ஹாஜ் எம். ஐ. எம். நளீம், டாக்டர் எம். இஸட். எம். ஷாபி, அல்ஹாஜ் ஏ. எச். எம். ஸித்தீக் ஆகியோர் பெரும் பங்களிப்புச் செய்தனர்.

அவர்களோடு ஊரில் உள்ள வசதி வாய்ப்பு உள்ளவர்கள் பலரும் இந்நிதிக்குப் பங்களிப்புச் செய்தது பெருமைக்குரிய விடயமாகும்.

இப் பள்ளிவாயலில் முஹ்யித்தீன் மௌலூத் உட்பட ரஜப் மாதம் மிஹ்ராஜ் மௌலூதும் ஓதப்பட்டு கந்தூரிகளும் நடைபெற்று வருகின்றன. பள்ளிவாயலின் தோட்டம் மற்றும் மையவாடி என்பன வை.எம்.எஸ். ஸி. விளையாட்டுக் கழகத்தினால் மிக அழகான முறையில் பேணப்பட்டு வருகிறது.

1974ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தப் பள்ளிவாயலின் அமைப்பில் எவ்விதமான மாற்றமும் ஏற்படவில்லை. இந் நிலையில் 2016ஆம் ஆண்டு நஜீப் ஹாஜியார் அவர்கள் அதன் குறை நிறைகளைக் கண்டு பள்ளிவாயல் நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து மலசலகூடங்கள் வுழூ செய்யும் இடம் என்பவற்றை அழகிய முறையில் புனர்நிர்மாணம் செய்து கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## 3

## அல் ஹிழ்ரியா ஜும்மா மஸ்ஜித்

அளுத்கமை சீனாவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள அல் ஹிழ்ரியா ஜும்மா மஸ்ஜித் தர்கா நகருடன் மிக நெருங்கியதொரு பள்ளிவாசலாகும். ஒரு காலத்தில் வெட்டாறு எனும் கால்வாய் இல்லாமல் இருந்த போது தர்கா நகருடன் இணைந்திருந்த இப்பள்ளிவாசல் வெட்டாறு கால்வாய் உருவாகியதனால் பிரிந்ததாக வரலாறு கூறுகிறது. இலங்கையில் மிகப் பழமைவாய்ந்த பள்ளிவாசல்களில் இதுவும் ஒன்று எனக் கருதப்படுகிறது. தர்கா நகர் பிரதேசத்தின் ஆரம்ப மஸ்ஜிதுகளில் இதுவும் ஒன்றாகும்.

இப்பள்ளிவாசலில் ஷஃபான் மாதத்தில் ஹிழ்று (அலை) அவர்களின் பெயரில் மௌலூது ஓதப்பட்டு வருடாந்தம் கந்தூரியும் நடைபெறுகிறது. அத்தோடு பத்ர் ஸஹாபாக்கள் பெயரிலும் மௌலூத் ஓதப்பட்டு கந்தூரி வழங்கப்படுகிறது. இங்கு சுமார் 370 வருடங்களுக்கு மேலாக கந்தூரிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

*ஜும்மாப் பள்ளிவாசலான இந்த மஸ்ஜிதில் சுமார் 1000 பேருக்கு ஒரே தடவையில் தொழக்கூடிய வசதிகள் உள்ளன. அத்தோடு இங்கு ஜனாஸா நல்லடக்கம் செய்வதற்கான வசதிகள் இருப்பதோடு பாலர் பாடசாலையும் மத்ரஸாவும் நடைபெற்றுவருகின்றன.*

*பள்ளியைச் சுற்றி வர 300 முஸ்லிம் குடும்பங்கள் வசிக் கின்றன. சில தசாப்தங்களுக்கு முன்னர் எம். எல். எம் ஜுனைத், எம். எல். ஏ வதூத், அல்ஹாஜ் ஏ. டபிள்யூ.எம் ரபீக், ஏ. டபிள்யூ. எம். அஸ்வர் ஆசிரியர், இஸட். ஏ. எம். ரமீஸ் ஆகியோார் இப்பள்ளியின் பரிபாலகர்களாக இருந்தனர். அவர்களைத் தொடர்ந்து மேலும் சிலர் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டனர். தற்போது அல்ஹாஜ் எம். ஜே. எம். ரியாஸ் தலைமையில் எம். எஸ். எம். முஹ்ஜிஸ், எம். ஏ. எம். அப்ரத், முஹம்மது ஸைன் ஆகியோர் மஸ்ஜிதின் பரிபாலகர்களாகச் சேவை புரிகின்றனர்.*

*இப்பள்ளிவாசல் காலத்துக்குக் காலம் ஊர் வாசிகளால் புனர்நிர்மாணம்செய்யப்பட்டுள்ளது.இறுதியாகபேருவளை, சீனன் கோட்டை அல்ஹாஜ் மர்ஜான் பளீல், அல்ஹாஜ் வஸீர் ஏ. கபூர், அல்ஹாஜ் ரிஸ்வி ஏ. கபூர் அகியோர்களின் உதவியால் இது இருமாடிக் கட்டடமாக அழகான முறையில் கட்டப்பட்டது. 2012ஆம் ஆண்டு நடந்த திறப்பு விழாவில் அன்றைய ஜனாதிபதியும் கலந்து சிறப்பித்து வைத்தார்.*

## *4*

# தெருவுப் பள்ளி எனப்படும் மீரா ஜும்மா மஸ்ஜித்

*இந்த மஸ்ஜித் தர்கா நகரின் வரலாற்றில் இரண்டாம் மஸ்ஜித் என்ற இடத்தைப் பிடித்துள்ளது. இது பெரிய பள்ளியில் இருந்து அரைக் கிலோமீட்டர் தூரத்தில் ஸாவியா வீதியில் அமைந்துள்ளது. இது அமைக்கப்பட்டு சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்தான் மீரா மஸ்ஜித் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த மஸ்ஜித் ஆங்கிலக் கணக்கின்படி*

*1819 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இருபத்தி எட்டாம் திகதி - ரமழான் பிறை 5 இல் - நிலையான கட்டடமாக அமைக்கப்பட்டதாக அறியமுடிகிறது. 2001இல் தெருவுப் பள்ளியைப் புதிதாக மாடிகட்டிடமாகக் கட்டுவதற்கான பாரிய வேலைப் பணிகள் நிகழ்ந்து கொண்டிருந்த போது பழைய கட்டடத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பலகைப் பதிவில் இந்நாள் குறிக்கப்பட்டிருந்தது. இன்றும் பொது மக்களின் பார்வைக்காக தெருவுப் பள்ளியில் வைக்கப்பட்டுள்ள இந்தப் பதிவுப் பலகை எதிர்கால சந்ததியினருக்கும் ஆதாரச் சின்னமாக இருக்கும்.*

*பெரிய பள்ளி கட்டப்பட்டு 300 வருடங்கள் கழித்தே இப்பள்ளிவாசல் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. 150 வருடங்கள் கழித்து கட்டப்பட்டதாக சில வரலாறுகள் கூறுகின்றன. நூற்றாண்டு கால வரலாறு கொண்ட எல்லா மஸ்ஜித்களும் தர்கா நகரின் எல்லைப் பகுதிகளிலேயே நிறுவப்பட்டுள்ளன. மீரா மஸ்ஜித் மாத்திரம்தான் ஊரில் மத்திய பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ளது.*

*நீண்டகாலமாக பெரிய பள்ளியின் மையவாடியில் மட்டுமே ஊர் ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டு வந்துள்ளன. தெருவுப் பள்ளி உருவாகி 200 வருடங்கள் கழிந்த பின்னரே அங்கும் ஜனாஸாக்கள் அடக்கப்படலாயின. ஏனைய இடங்களில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்ட வரலாறு சுமார் 100 வருடங்களுக்கு உட்பட்டதாகும்.*

*நிலையான கட்டடமாக அமைக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே இப் பள்ளிவாயல் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகவும் அது இழைக்கப்பட்ட தென்னம் ஓலையால் அமைக்கப்பட்டிருந்தது என்றும் வரலாறு கூறுகின்றது. எனவே இப் பள்ளிவாயல் முன்னூறு வருட காலம் பழமை வாய்ந்தது என 2005இல் வெளியான ‘தர்கா நகர்’ என்ற வரலாற்று நூலில் அதன் ஆசிரியர் ஐ. எல். எம். சுஐப் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.*

*இங்கு ரபியுல் ஆகிர் மாதந்தோறும் ஷாஹுல் ஹமீது மீராசாஹிப் வலியுல்லாஹ் பெயரில் மௌலூது ஓதப்பட்டு வந்தது. மர்ஹூம் வதூத் ஆலிம் அவர்கள் இருக்கும் வரை இது தொடர்ந்தது.*

1850இல் பூரணமாகக் கட்டப்பட்ட இப்பள்ளியின் நிர்மாணப் பணியை ஊர் மக்கள் மிகச் சிரமத்துடன் செய்து முடித்த போதிலும் அதில் சில குறைபாடுகள் இருந்து வந்துள்ளன. இந்த நிலையில் 1902 -1906 காலப்பகுதியில் இப் பள்ளிவாயல் மீண்டும் ஒருமுறை புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணியில் ஊர் மக்களுடன் இணைந்து, புரக்டர் தாஹா அவர்களின் தந்தையாரான அஹ்மது அப்துல்லாஹ் அவர்களும், டாக்டர் ஏ.ஏ.எம்.நஸீர் அவர்களின் பாட்டனார் இஸ்மாயில் லெப்பை அவர்களும் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளனர்.

குறிப்பாக ஜும்மா மற்றும் பெருநாள் தொழுகைகளுக்காக வரும் பெருந்தொகை ஜமாத்தாரின் தேவை கருதி நீண்ட கால இடைவெளிக்குப் பின் 1981இல் பள்ளிவாயலின் விஸ்தரிப்பு வேலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இது மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி பள்ளிவாசலின் இரு சிறகுகளும் பின்பகுதியும் விரிவாக்கப்பட்டன. அப்போது பெரிய பள்ளி, தெருவுப் பள்ளி ஆகிய இரண்டினதும் நிர்வாகிகளாக இருந்த ஜனாப் ஏ. ஆர். முஹம்மத், ஹாஜிகளான எம். ஏ. பத்தாஹ், ஏ. சி. எம். அப்துல் காதர், எச். அலவி இஸ்மாயில், டாக்டர் எம். இஸட். எம். ஷாபி. ஏ. ஏ. எம். தாஹா, சட்டத்தரணி ஏ. எம். ஹம்ஸா ஆகியோரின் தலைமையில் ஜமாத்தாரின் உதவிகளோடு இப்பணிகள் நிகழ்ந்தன.

இப்பள்ளியில் மற்றுமொரு விஸ்தரிப்புப் பணி 1991-இல் நிகழ்ந்துள்ளது. இளைஞர் குழுவொன்று பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர் அல்ஹாஜ் எம். ஏ. பத்தாஹ் அவர்களைச் சந்தித்து பள்ளியின் முன்வாசல் பகுதியை மேலும் விஸ்தரிப்பதற்கான கோரிக்கையை முன்வைத்தனர். இக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களாலேயே அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணப் பணி சில மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டது. இப்பணி 10 இளைஞர்களின் இருபத்தி ஐயாயிரம் ரூபா பண உதவியைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பின்னர் பலர் இதற்காக மனமுவந்து உதவியுள்ளனர். குறிப்பாக நகரின் சிறு வியாபாரிகள்கூட பள்ளியின் கட்டடப் பணிகள்

*முடியும் வரையும் தினமும் 5 ரூபா முதல் 10 ரூபாய் வரை வழங்கியுள்ளனர்.*

*1996ஆம் ஆண்டு இப்பள்ளிவாசலை எதிர்காலத்தில் விசாலமான மாடிக் கட்டடமாக அமைப்பதற்குரிய திட்டமிடல் ஆண்டாக அமைந்தது.*

*ஒரு நாள் மாலை தொழுகைக்காக நஜீப் ஹாஜியார் தெருவுப் பள்ளிக்குச் சென்று இருந்தார். தொழுகையின் பின்னர் அவரது சகோதரர் பாயிஸ் அவர்களும் ஹரீஸ் இஸ்ஸதீன் அவர்களும் நஜீப் ஹாஜியார் அவர்களிடம் ஒரு பிரதான கோரிக்கையை முன்வைத்தனர். பள்ளியின் மிம்பர் இருக்கும் முன் பகுதிக்கு சீலிங் வேலைகளைச் செய்வதற்கான நிதி உதவியைப் பெற்றுத் தரும்படி அவர்கள் கேட்டனர். கீழே தரையைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு சீலிங்கின் அவசியம் பற்றி அவர்கள் எடுத்துக் கூறினர். தனது சொந்தப் பணத்திலேயே அதனைச் செய்து முடிக்கலாம் என்றும் அதற்கு சுமார் ஒரு லட்சம் ரூபா அளவில்தான் செலவாகும் என்றும் கூறிய நஜீப் ஹாஜியார், பள்ளியை முழுமையாக உடைத்துக் கட்டுவதே மிகச் சிறந்தது என்று தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். அவரது வாயிலிருந்து வந்த அந்த நற்செய்தி அனைவர் மனதிலும் சந்தோசத்தை ஏற்படுத்தியது.*

*நஜீப் ஹாஜியார் அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தித்தவராக தான் தொழில்புரியும் நாட்டுக்குச் சென்ற போது, யாரிடம் உதவியை எதிர்பார்த்துச் சென்றாரோ அவரிடமே கோரிக்கையை முன்வைத்து ஊர் முக்கியஸ்தர்களின் வேண்டுகோள் கடிதங்களையும் ஒப்படைத்துள்ளார்.*

*காலம் கடந்து சென்ற போதிலும் குறித்த விடயம் கைகூடவில்லை. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவராக நஜீப் ஹாஜியார் அவர்கள் தமது முயற்சியில் மனம் தளராது ஈடுபட்டார். இறுதியில் அவரது முயற்சி வீண் போகவில்லை.*

*அல்லாஹ்வின் அருளால் அவரது முயற்சிக்கு பலன் கிட்டும் நாளும் வந்தது. 2001இல் குறித்த நன்கொடையாளரை நஜீப் ஹாஜியார் அவர்கள் அவரது இல்லத்தில் சந்தித்தபோது பலர் கலந்து கொண்டிருந்த ஒரு நிகழ்வில் வைத்து நஜீப்*

ஹாஜியார் அவர்கள் மீண்டும் தெருவுப்பள்ளி விடயத்தை முன்வைத்துள்ளார். நல்லுள்ளம் படைத்த அந்தப் பெருந்தகை ‘உங்கள் கோரிக்கை கபூல்’ என்று கூறியபோது நஜீப் ஹாஜியாரின் உள்ளம் மிகுந்த சந்தோஷம் அடைந்தது. அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திக் கொண்டார்.

நஜீப் ஹாஜியார் அவர்கள் ஊர் வந்திருந்தபோது 19. 10. 2001 வெள்ளிக்கிழமையன்று ஜும்மா தொழுகைக்குப் பின்னர், தெருவுப் பள்ளியை இரு மாடிக் கட்டடமாகக் கட்டுவதற்கான நிதி உதவி கிடைத்துவிட்ட நற்செய்தியை ஜமாத்தாருக்கு அறிவித்தார்.

மறுநாள் (20. 1.0 2001) மஃரிப் தொழுகையின் பின்னர் தெருவுப் பள்ளியின் கட்டிடப் பணி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நஜீப் ஹாஜியாரின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பள்ளியின் நிர்வாகத்தினராகிய ஹாஜிகளான மஸா ஆலிம், ஐ எல். எம். சுஐப் (அதிபர்), டாக்டர் ஏ.எம்.எம். இக்பால், எம். ஷாஜஹான் பத்தாஹ், எம். எம். நிஸாம் ஆசிரியர், இன்ஜினியர் அம்ஜாத் ஆகியவர்களுடன் சூழவுள்ள ஜமாத்தார்கள் சிலரும் கலந்து கொண்டனர். இங்கு கட்டடக் குழு அங்கத்தவர்களாக ஹாஜிகளான வை. ஐ. எம். ஹரீஸ், எம். எம். ஸப்வத், எம். எஸ். எம். பஸ்லான் ஆகியோர் தெரிவாகினர். இவர்களுடன் ஒத்துழைக்க மஹல்லா இளைஞர்களும் முன்வந்தனர். இந்தக் கூட்டத்தில் கட்டட வேலைகள் சம்பந்தமாகப் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அடுத்த வாரம் 26. 10. 2001இல் தெருவுப் பள்ளியை விசாலமாக இரண்டு மாடிக் கட்டடமாக கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் ஜும்மா தொழுகையின் பின்னர் நிகழ்ந்தது. பள்ளி நிர்வாகத்தினரினதும் ஜமாத்தாரினதும் வேண்டுகோளுக்கிணங்க நஜீப் ஹாஜியாரின் கரங்களா லேயே அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் பெருந் திரளான ஊர் ஜமாத்தார்கள் கலந்து சிறப்பித்தனர்.

தெருவுப் பள்ளியின் விசாலமான இரு மாடிகளும் அழகியல் கலை நுணுக்கங்கள் கொண்ட விதத்தில் கட்டி முடிக்கப்பட 22 மாதங்கள்கூட செல்லவில்லை. அவ்வளவு

விரைவாக நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. திறப்பு விழாவுக்கு 08. 08. 2003 என நாள் குறிக்கப்பட்டது.

தெருவுப் பள்ளி கட்டட நிதிக்கு மனமுவந்து உதவிய கொடை வள்ளலுக்கு திறப்பு விழா அழைப்பிதழை வழங்குவதற்காக பள்ளி நிர்வாகிகளில் ஒருவரான எம். எம். நிஸாம் ஆசிரியர் அவர்களும் தெருவுப் பள்ளி கட்டட நிர்மாணக் குழு உறுப்பினரான அல்ஹாஜ் எம். எம். எம். ஸப்வத் அவர்களும் 16.7.2003இல் நஜீப் ஹாஜியார் அவர்கள் தொழில் புரியும் நாட்டுக்கு விஜயம் செய்தார்கள். அங்கு அவர்கள் நஜீப் ஹாஜியாருடன் இணைந்து அழைப்பிதழைக் கையளித்தார்கள்.

08.08.2003இல் நிகழ்ந்த தர்கா நகர் தெருவுப் பள்ளியின் புதுக் கட்டடத் திறப்பு விழா ஊர் மக்களால் மறக்க முடியாத ஒரு நிகழ்வாகும். முன்னூறு வருட கால வரலாற்றுச் சின்னமான மஸ்ஜிதின் பழமைத் தோற்றம் மறையாத நிலையில் புதுத் தோற்றத்துடன் இரண்டு மாடிகளும் கட்டப்பட்டு ஜும்ஆவுக்கு முன்பு திறந்து வைக்கப்பட்டது.

புதுக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு உதவிய பெருந் தகையின் பிரதிநிதியொருவர் இதற்காக இலங்கை வந்திருந்தார். அவர் நஜீப் ஹாஜியாருடன் இணைந்து தெருவு பள்ளி என்னும் மீரா மஸ்ஜிதை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். இதற்காக வந்திருந்த அதிதிகளை ஊர் மக்கள் பெரிய பள்ளிவாயலின் முன்பிருந்து தெருவுப் பள்ளி வரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

இந்நிகழ்வில் அதிதிகளாக வந்திருந்த ஐக்கிய அரபு அமீராத்தின் துணைத்தூதுவர், குவைத் நாட்டுத் தூது வர், உலமாப் பெருமக்கள், கல்விமான்கள், அரசியல் பிரமுகர்களான அல்ஹாஜ் ரவூஃப் ஹக்கீம், அல்ஹாஜ் ஏ. எச். எம். பௌஸி, அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், அல்ஹாஜ் எம். எஸ். எம். அஸ்லம் ஆகியோருடன் ஆயிரக்கணக்கான ஜமாஅத்தார்களும் கலந்துகொண்டனர். வந்திருந்த அனைவருக்கும் ஜும்ஆத் தொழுகைக்கு பின்னர் பகல் உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு சுமார் 8000 பேர் அளவில் வருகை தந்திருந்தார்கள் என்பதை இந்த விருந்துபசாரத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

*நிகழ்ச்சியின்போது நிர்வாகத்தினர் சார்பாக அல்ஹாஜ் மஸா ஆலிம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். கட்டட நிர்மாணத்திற்கு நிதி உதவி புரிந்த பெருந்தகை அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியை அஷ்ஷெய்க் கைருள் பஷர் (நளீமி) அவர்கள் தமிழில் மொழி பெயர்த்தார். நஜீப் ஹாஜியார் அவர்களும் அரபியிலும் தமிழிலும் உரையாற்றினார். பள்ளி நிர்வாகத்தின் சார்பாக அல்ஹாஜ் எம். எம். நிஸாம் ஆசிரியர் நன்றியுரை வழங்கினார்.*

*பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டு குறுகிய காலத்தினுள் அதன் இரு பக்கங்களிலும் பின்புறத்தைச் சுற்றி மதில் கட்டுவதன் அவசியம் உணரப்பட்டது. பள்ளிக்கு இடம் விட்டு மதிலை கட்டுவதற்காக இன்னும் சிறிது நிலம் தேவைப்பட்டது. இந்நிலையில் பள்ளி நிர்வாகிகளில் ஒருவராக இருந்த அல்ஹாஜ் ஷாஜஹான் பத்தாஹ் இவர்கள் பள்ளிக்கு அருகாமையில் இருந்த காணியில் மூன்று பேர்ச்சஸை வாங்கி பள்ளிக்கு வக்பு செய்தார். தெருவுப் பள்ளிக்கு அண்மையில் பிரதான வீதியில் உள்ள அவருக்குச் சொந்தமான ஐந்து கடைகளின் வாடகைப் பணமும் இரு பள்ளிகளுக்கும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அல்ஹாஜ் ஐ. எல். எம். ஷாபி அவர்களும் தனக்குச் சொந்தமான காணியிலிருந்து ஒரு துண்டை இதற்காக இலவசமாக வழங்கினார்.*

*பின்னர் நஜீப் ஹாஜியார் மேற்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக மீண்டும் நிதி உதவி பெறப்பட்டு பள்ளியைச் சுற்றி உயரமாக மதில் கட்டப்பட்டது. இது பள்ளியின் மையவாடியையும் மற்றும் பள்ளித் தேவைக்கான இடங்களையும் சுற்றி அமைக்கப்பட்டுள்ளது. மதிலுக்குப் பின்னால் சுமார் பதினைந்து வீடுகள் இருந்ததால் மதில் கட்டப்படுவதற்கு முன்னர் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் மஸ்ஜிதுக்கு வருவதற்காக வழி அமைத்துக் கொள்ளலாம் என நிர்வாகத்தினரும் நஜீப் ஹாஜியார் அவர்களும் அறிவித்தனர்.*

*16.8.2013இல் தெருவுப் பள்ளியின் மூன்றாம் மாடியைக் கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஏற்கனவே மஸ்ஜிதின் கட்டிடப் பணிகளுக்காக நன்கொடை வழங்கிய பெருந்தகையுடன், நஜீப் ஹாஜியார் மீண்டும் பேசி இதற்கான*

நிதி உதவியைப் பெற்றுக் கொண்டார். இப்பணி 2014ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியிலேயே நிறைவுபெற்றது. அது அவரது கரங்களாலேயே திறந்துவைக்கப்பட்டது.

மூன்றாவது மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது அதன் குறை நிறை பற்றிய விமர்சனங்களும் வரத்தான் செய்தன. என்றாலும் 2014 ஜூன் மாதத்தில் நிகழ்ந்த அசம்பாவிதத்தில் ஊரின் எல்லைப்புறங்கள் பாதிக்கப்பட்ட போது, இந்தப் பள்ளி வாயல் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு ஒரு பாது காப்பு மத்திய நிலையமாக விளங்கியது. அதிலும் குறிப்பாக புதிதாகக் கட்டப்பட்ட மூன்றாம் மாடிக் கட்டடம் பெண்களுக்கான தரிப்பிடமாக அமைந்ததோடு, சில நாட்களாக பெண்கள் தங்களது மார்க்கப் பணிகளையும் செய்யக் கூடிய இடமாகவும் இருந்தது.

தெருவுப் பள்ளி எனப்படும் இந்த மீரா மஸ்ஜித் ஒரு மஸ்ஜிதுக்குத் தேவையான சகல அம்சங்களையும் பூரணமாகக் கொண்ட ஒரு தலமாக விளங்குகிறது. இதன் கீழ் மாடியில் மிம்பரோடு இணைந்த முன்பகுதி பழைய பள்ளியின் கலை நுணுக்கங்கள் மாறாத நிலையிலேயே முன்பிருந்ததைவிட நவீன கட்டட வேலைப்பாடுகளுடன் விரிவாக்கப்பட்டுள்ளது. முன்பு இருந்த நிலையிலேயே இரு பக்க நுழைவாயில்களும் அமைந்துள்ளன. ஒரு நூற்றாண்டுக்கும் முற்பட்ட வாயில்களும் கதவுகளும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் புதியன போல் காணப்படுகின்றன.

இரு பள்ளிகளினதும் நிர்வாகத்தினால் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட ஜமாஅத் கவுன்சிலின் காரியாலயத்திற்கான ஓரிடம் கீழ் மாடியில் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தோடு மையவாடியில் ஜனாஸாக் கள் நல்லடக்கம் செய்யப்படும் போது பயன்படுத்தப்படும் ஒரு கூடாரமும் தேவை ஏற்படும்போது ஜனாஸாக்களை குளிப்பாட்டுவதற்கான ஓர் அறையும் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தினால் அமைக்கப்பட்டுள்ளன.

இப் பள்ளிவாயலுக்கான நிலத்தின் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதி இஸ்னாபுள்ள என அழைக்கப்பட்ட யூசுப்

லெப்பை என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டதாக வரலாறு கூறுகிறது. முந்திய காலத்தில் பள்ளிவாயலில் நிர்வாகிகளை மத்திச்சம் என்றே அழைத்தனர். எமது ஊர் மத்திச்சங்களாக ஸெயின் மாமா என்று அழைக்கப்பட்ட ஜனாப் ஸெய்னுல் ஆப்தீன், அல்ஹாஜ் ஸீ. எம். ஹாமித் மரிக்கார், மௌலவி ஸெய்னுல் ஆப்தீன், அல்ஹாஜ் ஐ. எல். எம். மஹ்மூத் ஆகியவர்கள் இருந்துள்ளனர்.

இன்று தெருவுப் பள்ளி, பெரிய பள்ளி ஆகிய இரு இறையில்லங்களினதும் நிர்வாகிகளாக அல்ஹாஜ் ஏ. எஃப். எம் ஷாஜஹான், அல்ஹாஜ் எம். இஸட். எம். இஃபாம் ஆகியோர் பணிபுரிகின்றனர்.

# 5

# அதிகாரிகொடை மஸ்ஜிதுர் ரஹ்மான்

தர்கா நகரில் சில நூற்றாண்டுகால வரலாறு கூறக்கூடிய மஸ்ஜிதுகளில் மஸ்ஜிதுர் ரஹ்மானும் ஒன்றாகும். இது மரிக்கார் வீதி எனப்படும் யட்டதொள பாதையில் தர்கா நகரின் எல்லைக்கு நெருக்கமாக அமைந்துள்ளது.

பேருவளையில் குடியேறிய எமன், மலபார் முஸ்லிம்களில் சிலர், சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் குடியேறியதாகச் சில வரலாறுகள் கூறுகின்றன. இந்த மேட்டுப் பகுதியில் சிறிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு தொழுகைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது காலத்துக்குக் காலம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வந்துள்ளது. 1990இல் பள்ளி நிர்வாகமும் ஊர் ஜமாத்தார்களும் சேர்ந்து புதிதாகக் கட்டட நிர்மாண வேலைகளை ஆரம்பித்து 1992-ல் இந்தப் பள்ளிவாசலைக் கட்டி முடித்தார்கள்.

இப்பள்ளிவாசல் 1901 முதல் 1930 வரையான காலப்பகுதியில் காஸிம் லெப்பை மேஸ்திரியார், ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் ஆகியோரின் பழைய வீட்டில் அமைந்திருந்ததாகவும் 120 வருட கால வரலாறு கொண்ட இப்பள்ளிவாசல் தர்கா நகரில்

நாலாவது பழமை வாய்ந்த மஸ்ஜித் என்றும் இன்னொரு தகவல் கூறுகிறது.

இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்பு டீ. எஸ். சேனாநாயக்க, ரீ.பி. ஜாயா ஆகியோருடன் தேசிய அரசியலில் இணைந்து செயல்பட்ட டாக்டர் எம். சீ. எம் கலீல் அவர்களின் பாட்டனார் தம்பி லெப்பை மரிக்கார் என்பவர் இக்கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரது தந்தையான முஹம்மது ஹாஜி மரிக்கார் என்பவர் பிரித்தானிய ஆட்சியின் போது விதானையாராக (கிராம அதிகாரியாக) நியமிக்கப்பட்டிருந்தார் எனவும் இதனால்தான் இப்பிரதேசம் அதிகாரிகொடை என அழைக்கப்பட்டதாகவும் டாக்டர் எம். சீ. எம். கலீல் அவர்கள் கூறியிருக்கிறார். 1992இல் புணர்நிர்மானத்தின் பின்னர் பள்ளியின் திறப்பு விழாவுக்கு வருகை தரும்படி அன்றைய பிரதம நம்பிக்கையாளர் ஏ. எச். எம். அனஸ் விடுத்த அழைப்புக்கு பதிலளிக்கும்போதே டாக்டர் கலீல் இதனைக் கூறியுள்ளார். தவிர்க்க முடியாத காரணங்களினால் அந்தத் திறப்பு விழாவில் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை.

1972ஆம் ஆண்டு இந்தியாவைச் சேர்ந்த அப்துர்ரஹ்மான் ஜிப்ரி மௌலானா அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்ட இப்பள்ளிவாசலின் புதுக் கட்டடத்தில் முதல் ஜும்மா புனித மக்கா நகரைச் சேர்ந்த முஹ்சின் ஹிப்ஷி மௌலானாவினால் நடாத்தப்பட்டது.

இறுதியாக மஸ்ஜிதுர் ரஹ்மான் பள்ளிவாசல் இரு மாடிக் கட்டடமாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. ஊர் ஜமாஅத்தினரின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட புனர் நிர்மாணப் பணிகளுக்கு தர்காநகர் அமீர் ஆலிம் அவர்களின் மகன் நஜீப் ஹாஜியார் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். அவர் தனக்குத் தெரிந்த ஒரு பெருந்தகையின் உதவிகொண்டு நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தின் மூலம் இரு மாடிக் கடடிட நிர்மாணப் பணிகளைச் சிறப்பாகச் செய்து முடித்தார். மஸ்ஜிதின் முன்புறமாக உள்ள தோட்டமும் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசலின் திறப்பு விழாவும் நஜீப் ஹாஜியார் அவர்களின் கைகளினால் 09. 11. 2018 வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு முன் இடம்பெற்றது.

இவ்விழாவில் உலமாக்களும் பள்ளி நிர்வாகிகளும் ஊர் மக்களும் பெருமளவு கலந்து சிறப்பித்தனர். அப்துர் ரஹ்மான் ஜிப்ரி மௌலானா அவர்களது பெயர்தாங்கி இது மஸ்ஜிதுர் ரஹ்மான் என அழைக்கப் படுகிறது.

மஸ்ஜிதுர் ரஹ்மான் நிர்வாகக் குழுவில் இருந்த எம். எஸ். எம். முனாஸ் என்பவர் 2020இல் காலமானார். அவர் நஜீப் ஹாஜியாரின் நண்பர். 1986இல் அபூதாபி அல் ஐன் பிரதேசத்தில் தொழில் புரிந்து கொண்டு இருந்தார். அங்கு இலங்கையர்களின் நலன்புரிச் சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அதன் தலைவராக நஜீப்ஹாஜியார் அவர்களும் மற்றொரு முக்கிய அங்கத்தவராக முனாஸ் அவர்களும் இருந்துள்ளனர். அக்காலகட்டத்தில் மஸ்ஜிதுர் ரஹ்மானில் நிகழ்ந்த ஒரு புணர்நிர்மாணப் பணிக்கு இவர்களினால் ஒரு உதவி வழங்கப்பட்டது.

அன்று இப்பள்ளியின் பரிபாலகர்களாக அல்ஹாஜ் ஏ. சி. எம். ஹிபால், அல்ஹாஜ் எம். எஃப். எம். நியாஸ் ஆகியோரும் கட்டட நிர்வாகக் குழு உறுப்பினர்களாக எம். ரி. எம். சுல்பான், அல்ஹாஜ் எம். ஏ. எம். அஜ்மல், எம். எஸ். எம். முனாஸ் ஆகியோரும் பதவி வகித்தனர்.

தற்போது புதிய நிர்வாகிகளாக அஷ்ஷெய்க் எம். எஸ். எம். நிப்ராஸ் (முப்தி), அல்ஹாஜ் ஏ. சி. எம். ஹிபால், எம். ரி. எம். சுல்பான், எம். எஸ். எம். இம்தியாஸ், அல்ஹாஜ் எம். ஏ. எம். அஜ்மல் ஆகியோர் உள்ளனர். இந்தப் பள்ளிவாசலில் நிகழக்கூடிய எல்லா அமல்களும் அஹ்லுல் சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை.

இப்பள்ளிவாசலில் சுமார் 1500 பேர்கள் சேர்ந்து தொழக்கூடிய வசதி உள்ளது. இங்கு ஜும்மா தொழுகையும் இடம் பெறுவதோடு பெண்களுக்கான தொழுகைக்குரிய இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறார்களுக்கான குர்ஆன் மத்ரஸா, வாசிகசாலை, கிராம சேவகர் காரியாலயம், சுகாதார சேவைக் காரியாலயம், சமுர்த்தி சேவைக் காரியாலயம் போன்றவற்றுக்காகவும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மையவாடியிலேயே இப்பகுதி ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்படுகின்றன.

# 6

## ஷெய்க் மதார் மஸ்ஜித் - வெலிப்பிட்டிய

*தர்கா நகரில் மக்கள் தொகை கூடிய பிரதேசம் வெலிப்பிட்டியாகும். தர்கா நகர் 7 வட்டாரங்களாகப் பிரிக்கப் பட்டிருந்த காலத்தில் அதிக வாக்காளர்களைக் கொண்ட வட்டாரமாக இது விளங்கியது. இங்குள்ள ஷேக் மதார் மஸ்ஜித், வெலிப்பிட்டியின் ஷேக் மதார் வீதி முடிவுறும் இடத்திற்கு அண்மையில் அமைந்திருக்கிறது.*

*தர்கா நகரின் வரலாறு கூறுகின்ற பழைமை வாய்ந்த பள்ளிகளில் ஒன்றாகவும், ஊரின் எல்லைப் பள்ளிகளில் ஒன்றாகவும் விளங்குகின்ற இப்பள்ளிவாசல் இரண்டு நூற்றாண்டுகளுக்கு உட்பட்டது என வரலாறு கூறுகின்றது. இப்பிரதேசத்தில் உள்ள ஏனைய பள்ளிவாசல்கள் அரை நூற்றாண்டு அல்லது கால் நூற்றாண்டுக்கு உட்பட்டவை.*

*இப்பள்ளி அமைந்திருக்கும் காணி ஸெயினுத்தீன் லெப்பை மரிக்கார், அவரது மனைவி இஸ்மாயில் லெப்பை பாத்திமா ஆகியோர்களால் வக்பு செய்யப்பட்டதாகும். இவர்கள் மௌலவி ஸில்மி (நூரி) அவர்களது தந்தையின் பெற்றோர்கள் ஆவர். இப்பள்ளிவாசல் 1830இல் கட்டப்பட்டு 1915இல் மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.*

*இப்பகுதியில் ஷாதுலிய்யா தரீக்காவை சேர்ந்தவர்கள் அதிகமாக வாழ்ந்துள்ளதால், பள்ளிவாசலில் தரீக்கா நிகழ்வுகளும் நிகழ்ந்துள்ளன. ஷேக் மதார் வலியுல்லாஹ் பேரில் 1980கள் வரை இங்கு தொடர்ந்து கந்தூரி வைபவங்களும் இடம்பெற்றுள்ளன.*

*சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் பள்ளிவாயலின் பரிபாலகர்களாக ஜனாப் ஏ. எம். நயீம் மரிக்கார், ஜனாப் ஐ. எல். எம். சம்சுதீன், ஜனாப் எஸ். எல். எம். மசூத் ஆகியோர் இருந்துள்ளனர். இவர்களது காலத்திலும் ஊர் ஜமாஅத்தினரது உதவியுடன் இப்பள்ளிவாசல் பெரிதாக்கிக் கட்டப்பட்டது.*

*இப்பள்ளிவாசல் 1959ஆம் ஆண்டு வக்பு சபையில் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் ஜனாப் ஏ. எம். நயீம் மரிக்கார்,*

ஜனாப் ஏ. டபிள்யூ. எம். சைபுதீன், ஜனாப் எஸ். எல். எம். மசூத், ஜனாப் எம். எல். எம். தௌபீக், ஜனாப் ஆர். எம். ஹனீபா ஆகியோர் பரிபாலகர்களாக இருந்துள்ளனர்.

பிற்காலத்தில் ஹாஜிகளான எம். எஸ். எம். அன்ஸார், எம். நஸீர், எம். மஹ்ரூப், ஜனாப் எம். ஸாலி ஆகியோர் பரிபாலகர்களாக இருக்கும் போது ஊர் மக்களின் உதவியோடு மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

இதுவும் ஒரு ஜும்மா பள்ளியே. இங்கு குர்ஆன் மத்ரஸா நடைபெறுவதோடு ஜனாஸா நல்லடக்கத்திற்கான மைய வாடியும் காணப்படுகிறது.

தற்போதைய நிர்வாக சபை உறுப்பினர்களாக ஏ. பீ. எம். ஹஸன் நவ்ஃபல், எம். எஸ். எம். அன்ஸார், எம். ரீ. எம். கைருள் பஷர், எம். எஸ். எம். பௌஸுல் அமீர், எம். கே. எம். ஷீராஸ் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

1970 வரை ஒவ்வொரு புதன்கிழமையும் இங்கு ஷேக் மதார் மௌலூது ஓதப்பட்டு வந்தது. அத்தோடு ஹஸனா லெப்பை என்பவர் தொடர்ந்து இஷாவுக்குப் பின் ஹத்தாத் ராத்திபு ஓதி வந்துள்ளார்.

# 7

# மீரிப்பன்னை மஸ்ஜிதுல் குர்பதுஸ்ஸாகிரீன்

இந்த மஸ்ஜித் ஆரம்பத்தில் ஷாதுலிய்யா தரீக்காவிற்குரிய ஸாவியாவாக இருந்துள்ளது. இந்தப் பள்ளிவாயலுக்கு நூறு வருடங்களுக்கு மேற்பட்ட வரலாறு உண்டு. அண்மைக்கால மஸ்ஜிதாகிய ஹாஜி லேன் பள்ளியைப் போன்று இதுவும் ஆற்றங்கரையோரத்தில் அமைந்துள்ளது. இதிலிருந்து சிறிது தூரத்தில் சிங்கள மக்கள் வாழ்கின்றனர்.

இது தர்கா நகரில் மூன்றாவது ஸாவியாவாக இருந்துள்ளது. இது ஸாவியாவாக இருந்த போது காலம் சென்ற மௌலவி

பளீல் ஆலிம் அவர்களின் தந்தை உஸ்மான் லெப்பை மரிக்கார் என்பவர் முகத்தமாக இருந்துள்ளார்.

அவருக்குப் பின்னர் மௌலவி ஓ. எல். எம். பளீல் அவர்கள் ஷாதுலிய்யா முகத்தமாக இருந்து இப்பகுதி மக்களுக்கான தரீக்கா நிகழ்வுகளை நடாத்தி இருக்கிறார். இவர் முகத்தமாக இருந்த காலத்தில் இதன் பரிபாலகர்களாக அல்ஹாஜ் ஏ. எச். எம். சித்தீக், டாக்டர் எம். இஸட். எம். ஷாபி ஆகியோர் கடமையாற்றியுள்ளனர். இவர்களுக்குப் பின் மௌலவி பளீல் அவர்களுடன் ஜனாப் எம். புஹாரி, ஜனாப் எம். மௌஜூத், ஜனாப் எம். சிராஜூதீன் ஆகியோர் பரிபாலகர்களாகக் கடமையாற்றினர்.

நீண்ட காலம் மீரிப்பண்ணை மக்களுடன் மார்க்கப் பணிகளில் இணைந்திருந்த வயதில் மூத்தவராகிய பளீல் ஆலிம் அவர்களின் மறைவுக்குப் பிறகு ஹாஜிகளான ஏ. ஸி. எம் இக்பால், எம் எஸ். எம். ரிப்கான், எம் எஸ். எம். பஸால் ஷாபிஹ், எம். எம். கே. அனாம் ஆகியோர் பரிபாலகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்கள் ஜமாஅத்தாரின் ஒத் துழைப்போடு இந்த ஸாவியாவை இரு மாடிக் கட்டடமாக நிர்மாணித்து, புது மஸ்ஜிதாக மலரச் செய்தனர்.

அதன்பின்னர் ஜும்மா தொழுகை ஆரம்பிக்கப்பட்டு மீரிப்பண்ணை வீதி, சொபலங்கந்த வீதி, மிலிட்டரி வீதி ஆகிய பகுதிகளில் வாழும் மக்களின் ஜும்மாப் பள்ளியாக இது பிரகாசித்தது. அண்மைக் காலத்தில் இடநெருக்கடி காரணமாக கட்டடம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு அழகாகக் காட்சி அளிக்கின்றது.

மஸ்ஜிதுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள கட்ட டத்தில் மக்தப் வகுப்புக்களும் ஹிப்ழ் குர்ஆன் வகுப்புக்களும் இடம்பெற்றுவருகின்றன.

1992க்குப் பிறகு இப்பள்ளிவாயல் இரு மாடி கட்டடமாகக் கட்டப்பட்டபோது பழைய பள்ளியின் முன்பக்கக் கதவில் 1873ஆம் ஆண்டு எனக் குறிக்கப் பட்டிருந்தது. இம் மஸ்ஜித் 150 வருட காலத்தை எட்டிப் பிடித்துள்ளது என்பதை இது உறுதிப்படுத்துகின்றது.

*1951ஐ அண்மித்த காலப்பகுதியில் அல்ஹாஜ் ஏ. எச். எம். சித்தீக், டாக்டர் எம். இஸட். எம். ஷாபி ஆகியோரின் தாய் மாமனாராகிய ஜனாப் ஸெயின் என்பவரும் ஜனாப் ஜுனைத் என்பவரும் 10 பேர்ச்சஸ் காணியை இப்பள்ளிக்காக வழங்கியுள்ளனர். பின்னர் டாக்டர் எம். இஸட். எம். ஷாபி அவர்களின் 10 பேர்ச்சஸ் காணியும் அல்ஹாஜ் ஏ. எச். எம். சித்தீக் அவர்களின் 40 பேர்ச்சஸ் காணியும் இந்த மஸ்ஜிதுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.*

*இது ஒரு ஸாவியா என்ற அடிப்படையில் இமாம் அபுல் ஹஸன் ஷாதுலி அவர்கள் பெயரில் வருடாந்தம் மௌலூது ஓதப்பட்டு கந்தூரியும் இடம்பெற்று வருகிறது.*

# *8*

# மஸ்ஜிதுல் தாருல் ஹுதா

*தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரிக்கு அண்மையில்தான் தாருல் ஹுதா மஸ்ஜித் அமைந்துள்ளது. இரு மாடிக் கட்டடத்தைக் கொண்ட இந்த மஸ்ஜிதில் சுமார் 1500 பேர் தொழக்கூடிய வசதி உள்ளது. 1985இல் இது பூரணமான மஸ்ஜிதாக உருவெடுக்க முன்னர், தகரத்தினால் அமைக்கப்பட்ட கொட்டகையாக விளங்கியது. அதிலேயே தொழுகை நடத்தப்பட்டது. பிற்காலத்தில் அது சிறந்த முறையில் கட்டப்பட்டு அழகான மஸ்ஜிதாகக் காட்சி அளிக்கிறது. இந்த கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டவர்களின் அயராத முயற்சியே இதற்குக் காரணமாகும்.*

*1999இல் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்ட பின்னர், அங்கே தஃவா பணிகளுடன் தீனின் அடிப்படையில் சமூகப் பணிகளும் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. ஸகாத் வசூலிக்கப்பட்டு உரியவர்களுக்கு வழங்குதல், பைத்துல்மால் நிதியின் மூலம் சிறு உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளோடு, கூட்டு உழ்ஹியாவும் நிர்வாகத்தினரால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.*

இங்கு ஜும்ஆத் தொழுகை இடம் பெறுவதுடன் இரு பெருநாள் தொழுகைகளும் பள்ளியின் முற்றவெளியில் தொழுவிக்கப்படுகின்றன. சிறார்களுக்கான குர்ஆன் கற்றல் வகுப்புக்கள், வளர்ந்த இரு தரப்பினருக்குமான வாராந்த குர்ஆன் விரிவுரை வகுப்புக்கள், மாதாந்த தர்பிய்யா நிகழ்வுகள் முதலியனவும் இங்கு இடம் பெறுகின்றன.

## 9

## அல் மஸ்ஜிதுல் பதாஹ்

இந்தப் பள்ளிவாசல் தர்கா நகர் லோட்டஸ் வீதி (யானைக்குளம்) என்ற இடத்தில் அமைந்துள்ளது. பெரிய பள்ளியில் வாரத்தில் ஒரு நாள் நடைபெறும் மஹல்லா கஸ்து ஜீலானி வீதி, லோட்டஸ் வீதி ஆகியவற்றை மையமாகக் கொண்டு இயங்குகிறது. இப் பாதைகளின் எல்லை வரை அழைப்புப் பணிக்காக ஜமாஅத்தினர் சென்றனர். அக்காலகட்டத்தில் பாதைகள் சீராக இருக்கவில்லை. நடைபாதை மழைக்காலத்தில் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியது. இக்காலகட்டத்தில்தான் யானைகுளத்துக்கு அண்மையில் இருந்த மக்களால் அப்பகுதியில் மஸ்ஜித் ஒன்றை அமைத்தால் மிகவும் பிரயோசனமாக இருக்கும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இக்கருத்தை வலியுறுத்தி கொண்டிருந்தவர்களில் பள்ளிவாசல் அமைந்துள்ள காணிக்கு அருகாமையில் வசித்த மர்ஹூம் ஏ.எச்.எம். ஹுஸைன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

இந்நிலையில் மஸ்ஜிதுக்காக காணி தேடும் முயற்சியில் சிலர் ஈடுபட்டனர். அதே இடத்திலேயே ஹாஜியார் வீதியில் வசித்த மர்ஹூம் பாஸி ஆசிரியருக்குச் சொந்தமான காணி ஒன்று இருப்பது தெரியவந்தது. அவர் தற்போதைய அல்ஹம்றா மகா வித்தியாலய அதிபர் திருமதி எம்.எப்.எப் பஸ்லியா அவர்களின் தந்தை ஆவார். இதுதொடர்பாக

மூன்று பேரைக் கொண்ட குழுவொன்று அவரைச் சந்தித்துப் பேசியது. அவர் தனது குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து காணியை அன்பளிப்புச் செய்ய முன்வந்தார். எனினும் அவருடன் கலந்துரையாடியவர்கள் பாதி விலைக்குக் காணியைக் கொள்வனவு செய்தனர். இந்நிகழ்வு 1991 ஜூலை மாதம் நிகழ்ந்தது. இதற்கான பண உதவியை அல்ஹாஜ் ஏ.சீ.எம். இக்பால் வழங்கினார். அக்காணிக்கு அருகில் இருந்த மற்றுமொரு காணித் துண்டை தர்கா நகர் பிரதான வீதியைச் சேர்ந்த மர்ஹூம் முஹ்ஸின் மரிக்கார் அன்பளிப்புச் செய்தார். பெருமளவு களிமண் கொண்டு இக்காணியின் ஒரு பகுதியை எம்.எச்.எம். நிஸார் சமப்படுத்தினார். இம்முயற்சியில் மர்ஹூம் எம்.எம்.எம். மதனியும் சேர்ந்து செயல்பட்டார்.

மஸ்ஜித் உருவான வரலாறு:

1991ஆம் ஆண்டு கால்நடையாகச் சென்று தஃவா பணிபுரியும் ஜமாஅத்தினர் தர்கா நகருக்கு வருகை தந்தனர். அவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட காணியில் கூடாரம் அமைத்து இரண்டு நாட்கள் தங்கினார்கள். அவர்கள் ஒரு மஸ்ஜிதில் செய்யக்கூடிய அமல்களை அங்கு செய்தனர். அவர்களுக்கு அயலவர்கள் உதவியாக இருந்தனர். மூன்றாவது நாள் அவர்கள் இடம்பெயர்ந்து சென்றதும் தர்கா நகரைச் சேர்ந்த அல்ஹாஜ் எம்.எம்.எம். நிஸ்பஹான் (ஸன் இஸ்மாயில்) அங்கு ஒரு டென்டை அமைத்துக் கொடுத்தார். அன்றைய ளுஹர் தொழுகையிலிருந்து அது ஒரு மஸ்ஜிதாக மாறியது.

அதன்பிறகு மரத்தடிகள், கம்புகள் சேகரிக்கப்பட்டு ஒரு கொட்டில் வடிவில் கட்டடம் கட்டப்பட்டது. அதன் கூரை ஓலையால் வேயப்பட்டு, தரைக்கு சீமெந்து போடப்பட்டிருந்தது. பக்கத்தில் கிணறு ஒன்றும் தோண்டப்பட்டது. சிறு வசூல் மூலம் இதற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மஸ்ஜித் உருவாகும் வரை தனது இறுதி மூச்சுவரை அல்ஹாஜ் ஐ.எல்.எம். நவாஸ் பெரும் பங்களிப்புச் செய்தார். மலசலகூடமும் தற்காலிக பேஷ் இமாம் அறையும் மின்சார வசதியும் கிடுகு விற்பனை செய்து கிடைத்த வருமானம் மூலம் அமைக்கப்பட்டன.

மஸ்ஜிதுக்குரிய பணிகளில் மிக அதிகமாக ஈடுபட்டவர்களில் மர்ஹூம் எம்.ஏ.எம். நிஸார் அவர்களும் முக்கியமானவர்.

பள்ளிவாசலின் தேவைகள் அதிகரிக்க மக்களுக்கு தொழுகைக்கான இடப் பற்றாக் குறையும் ஏற்பட்டது. சிறுவர்களுக்கான குர்ஆன் மத்ரஸாவும் தேவைப்படவே இதற்காக ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. அல்ஹாஜ் ஏ.சீ.எம். இக்பால் இதன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். ஏனைய அங்கத்தவர்களாக அல்ஹாஜ் எம்.ஏ.எம். பௌஸர், அல்ஹாஜ் அஹமது ரிலா, அல்ஹாஜ் எம்.எஸ்.எம். சுஹைர், மர்ஹூம் எம்.ஏ.எம். நிஸார், அல்ஹாஜ் எம்.எம்.எம். மிஸ்பா, மர்ஹூம் அல்ஹாஜ் அன்ஸார் (முக்தார் மாஸ்டர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மர்ஹூம் அல்ஹாஜ் அன்ஸார் அவர்கள் இப்பள்ளியின் பேஷ் இமாமாகவும் கடமை புரிந்தார்.

புதிய பள்ளியின் அத்திவாரம் 40 அடி நீளம் 25 அடி அகலம் கொண்டதாக அமைக்கப்பட்டது. கட்டடம் நிர்மாணிக்கப்படும் வரை தற்காலிகமான தொழுகைக்குரிய இடத்தை எம்.ஏ.எம். பௌஸர் அவர்கள் பக்கத்தில் உள்ள தனது காணியில் அமைத்துக் கொடுத்தார். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பள்ளியின் மேல் மாடிக்கான தட்டு வேலை 1994இல் பூர்த்தியானது. அதன்பிறகு ஐவேளைத் தொழுகை புதிய கட்டடத்தின் கீழ் மாடிக்கு மாற்றப்பட்டது. பள்ளிக்கு அருகாமையில் இருந்த மூஸீன் மரிக்கார் அவர்களுக்குச் சொந்தமான காணித் துண்டையும் வாங்கி ஹாஜிகளான ஏ.சீ.எம். இக்பால், எம்.ஏ.எம். பௌஸர் ஆகியோர் பள்ளிக்காக அன்பளிப்புச் செய்தனர்.

பள்ளிவாசலுக்கான நிர்மாண வேலைகள் கட்டம் கட்டமாக நிறைவேறியது. 1999இல் யானைக்குளம் பூரணமாக நிரப்பப்பட்டு பள்ளிவாசலுக்காகப் பயன்படுத்தப்பட்டது. மேல்மாடி கட்டப்பட்ட போதிலும் மஸ்ஜிதில் நிர்மாண வேலைகள் சில எஞ்சியிருந்தன. ஊர் மக்களின் உதவியோடு அதிகமான பணிகள் நிறைவேற்றப்பட்டன. நிர்மாணப் பணிகளில் ஹாஜிகளான பைஸல் ஸாதிக் (லோட்டஸ் வீதி), ஷாஜஹான் பத்தாஹ், எம்.ஐ.ஆர்.எஸ். ஸைலானி (யாஸீன்

ஹாஜியார்), லுத்துபுர் ரஹ்மான் (கொழும்பு), முஹம்மத் ஜிப்ரி (மல்லிகாஸ்) ஆகியோர் அதிகளவில் பங்களிப்புச் செய்தனர்.

இங்கு அமைந்துள்ள குர்ஆன் மத்ரஸாவில் அதிகமான சிறுவர்கள் பயனடைந்து வருகின்றனர். இப்பகுதியில் சுமார் 350 வீடுகளில் 400 குடும்பங்கள் வாழ்கின்றன. பள்ளிவாசலில் தொடர்ச்சியாக மார்க்கப் பணிகள் இடம்பெறுகின்றன. ரமழான் மாதத்தில் கஞ்சியும் வினியோகிக்கப்படுகிறது.

தற்போது இப்பள்ளிவாசல் நிர்வாகப் பொறுப்பை ஆரம்பம் முதலே இப் பள்ளிக்காகச் செயலாற்றிவந்த அல்ஹாஜ் எம்.எஸ்.எம்..சுஹைர் அவர்களின் தலைமையின் கீழ் நிருவாகக் குழுவொன்று நிறைவேற்றி வருகிறது. இந்த மஸ்ஜிதுக்காக பங்களிப்புச் செய்த அனைவருக்கும் அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் நற்கூலியை வழங்குவானாக.

# 10

# மஸ்ஜிதுன் நூர்

தர்கா நகர் யட்டதொல வீதியில் மஸ்ஜிதுர் ரஹ்மான் அமைந்துள்ள இடத்திற்குச் சற்று முன்னால் இப் பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. தர்காநகர் பிரதேச சபை உப காரியாலயத்திற்கு சொந்தமான இக்காணி ஒரு சிலரது முயற்சியால் சட்ட ரீதியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்காக ஜம்மியத்துல் உலமாவின் பங்களிப்பும் பெறப்பட்டது.

இப்பள்ளிவாசல் கட்டப்பட்டு 05.05.1988இல் திறந்து வைக்கப்பட்டது. இப்பள்ளியில் சுமார் 250 பேருக்கு ஒரே தடவையில் தொழக்கூடிய வசதி இருக்கிறது. இப்பள்ளிக்கு நெருக்கமாக சிங்கள மக்களும் முஸ்லிம்களும் வாழ்கின்றனர். பள்ளிக்கு அண்மையிலுள்ள நாஸிம் மாவத்தையில்

முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்றனர். இங்கு சிறுவர்களுக்கான குர்ஆன் கற்றல் வகுப்புகளும் நடைபெறுகின்றன.

2014 ஜூன் மாதம் தர்கா நகரில் நிகழ்ந்த அசம்பாவித நிகழ்ச்சியின்போது இப்பள்ளிவாசல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியது. அங்கு வைக்கப்பட்டிருந்த அல்குர்ஆன் மற்றும் மார்க்க சம்பந்தப்பட்ட நூல்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இச்சம்பவம் தர்கா நகர் மக்களால் மறக்கப்பட முடியாத துயரம் நிறைந்த ஒன்றாகும். இவ்வாறு பாதிக்கப்பட்ட மஸ்ஜிதுன் நூரின் பெரிய அளவிலான புனர்நிர்மாண வேலைகள் ஜம்மியத்துல் உலமா சபையால் ஏற்படுத்தப்பட்ட SDF அமைப்பின் உதவியாலும் அரசின் நிதி உதவியாலும் நிறைவேற்றப்பட்டன.

இப்பள்ளியின் தேவைகள் இன்னும் நிறையவே இருக்கின்றன என இப்பள்ளியின் செயலாளர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ஸரூக் குறிப்பிட்டார். இப்பள்ளிவாசலின் தலைவராக ஓய்வு பெற்ற அதிபர் அல்ஹாஜ் ஏ.சி.எம். சஹர்தீன் அவர்களும் உதவித் தலைவராக அல்ஹாஜ் எம்.எம். ரிப்கான் அவர்களும் பணியாற்றுகின்றனர். ஓய்வு பெற்ற ஆசிரியர் அல்ஹாஜ் ஏ.எல்.ஏ. அரூஸ் அவர்கள் பொருளாளராக இருக்கின்றார். நிர்வாக சபை உறுப்பினராக அல்ஹாஜ் எம். ஜிப்ரி அவர்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பகால நிர்வாகத்தினர்களாக அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ஷம்ஸ், அல்ஹாஜ் எம்.எப்.எம். ஹுசைன், அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ஜிப்ரி, ஜனாப் எஸ்.எம். காமில் அஸ்மி, ஜனாப் எம்.என்.எம் ரிஸ்னி, ஜனாப் ஏ.ஆர்.எம் ரியாஸ் ஆகியோர் இருந்துள்ளனர்.

01.10.2020இல் மஸ்ஜிதுன் நூர் நிர்வாகத்தினரால் பள்ளியில் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ள மேலும் சில பணிகள் சம்பந்தமாக நஜீப் ஹாஜியார் அவர்களிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது. பெண்களுக்கான தொழுகைக்குரிய இடம், சிறுவர்களுக்கான குர்ஆன் வகுப்பறை, வுழூ செய்யும் இடம், மலசல கூடங்கள் என்பவற்றைத் திருத்தி அமைத்தல், ஏற்கனவே கட்டப்பட்டு பூர்த்தியாகாத நிலையில் உள்ள கட்டடத்தை மேல்மாடியுடன் பூரணப் படுத்துதல் முதலியன

அடங்கிய இக்கோரிக்கைகளை நஜீப் ஹாஜியார் அவர்கள் வெளிநாட்டு நன்கொடையாளரின் உதவியுடன் 04.04.2021இல் நிறைவேற்றிக் கொடுத்து திறந்துவைத்தார்.

## 11

# மஸ்ஜிதுல் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்

இந்த மஸ்ஜித் பத்தாஹ் ஹாஜியார் மாவத்தை (நிவ் ரோட்), இஸ்னாபுள்ள வீதி என்பன இணையும் இடத்தில் அமைந்துள்ளது.பள்ளிக்கு அருகாமையில் சில குடியிருப்புகள் உள்ளன. 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் அல்ஹாஜ் எம்.ஏ. பாகிர் மாக்கார் சபாநாயகராக இருந்தபோது அரசின் உதவியுடன் அங்கு வீடுகள் கட்டப்பட்டன. 30 பேர்ச்சஸ் விஸ்தீரணம் உள்ள இந்நிலம் அளுத்கம்வீதிய முஸ்லிம் கல்வி சமூக நலன்புரி சங்கத்தினால் அல்ஹாஜ் ஐ.எல்.எம். மஹ்மூத் அவர்களிடமிருந்து 500 ரூபாவுக்கு 1940இல் வாங்கப்பட்டதாகும்.

அளுத்கம் வீதிய முஸ்லிம் கல்வி சமூக நலன்புரி சங்கத்தில் மீரான் லெப்பை ஜெயினுதீன் மரிக்கார், இஸ்மாயில் லெப்பை மரிக்கார், ஏ.ஆர்.முஹம்மத், ஐ.எல்.எம் மஷ்ஹூர் ஆகியோர் முக்கிய உறுப்பினர்களாக இருந்தனர். சுதந் திரத்திற்கு சற்று முந்திய காலத்தில் இந்த நிலப்பகுதியில் ஒரு அரச வைத்தியசாலையை ஆரம்பிப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டன. சுகாதார அமைச்சின் அதிகாரிகள் வந்து பரிசீலனை செய்தபோது இடப்பற்றாக்குறை காரணமாக அத்திட்டம் குருந்துவத்தை, காதியாவத்தை பகுதிக்கு மாற்றப்பட்டது.

1982இல் சபாநாயகர் பாக்கீர் மாக்கார் அவர்களின் முயற்சியால் அங்கு வீடமைப்புத் திட்டம் நிறைவு செய்யப்பட்டது. பின்னர் மிகுதிப் பகுதியில் மின்சார விநி யோகத்திற்காக ஜெனரேட்டர் ஒன்று பொருத்தப்பட்டது. அதேவேளையில் அங்கு ஒரு ஸாவியாவைக் கட்டுவதற்கான

முயற்சியை அதே பகுதியைச் சேர்ந்த மர்ஹூம் ஏ.டபிள்யூ.எம். முனவ்வர் (ஜப்பான் வீடு), மர்ஹூம் எம்.ஐ.எம். அஸ்ஹார் ஆகியோர் மேற்கொண்டனர். இதற்காக அங்கிருந்த ஜெனரேட்டர் அகற்றப்பட்டது. 1982இல் சட்ட அனுமதியுடன் ஷேக் ஃபாஸி அவர்களால் இதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. இருந்தும் அதற்கான கட்டட வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. அதன்பிறகு அப்பகுதி தப்லீக் ஜமாஅத்தினரின் ஒத்துழைப்புடன் தொழுகைக்குரிய இடம் ஒன்று பலகையால் நிர்மாணிக்கப்பட்டது. அப்பகுதியைச் சேர்ந்தவர்களினதும் இன்னும் சிலரினதும் பங்களிப்பில் 1985இல் அது கற்களால் கட்டப்பட்ட ஒரு கட்டடமாகத் தோற்றம் பெற்றது.

இவ்வாறு படிப்படியாக ஜமாத்தினர் எடுத்த பெரு முயற்சியின் காரணமாக இப்பள்ளிவாசல் இன்று இரண்டு மாடிக் கட்டடமாகக் காட்சியளிக்கின்றது. இங்கு ஒரே தடவையில் சுமார் 600 பேர் தொழக்கூடிய வசதியுண்டு. 2020-2021 காலப்பிரிவில் கோவிட்-19 சூழலில் சுகாதார விதி முறைகளைப் பேணி இங்கு ஜும்ஆ தொழுகையும் நடைபெற்றது. சிறுவர்களுக்கான அல்குர்ஆன் வகுப்புகளும் நடைபெறுகின்றன.

இந்த மஸ்ஜிதில் ஸகாத் வசூல் செய்வதற்காகவும் பைத்துல்மால் நிதிக்காகவும் ஒரு பிரத்தியேக காரியாலயமும் இயங்குகின்றது. இதன்மூலம் சுற்றாடலில் வாழ்கின்ற ஸகாத் பெறத் தகுதியுடைய மக்களுக்கான கொடுப்பனவுப் பணிகளும் செய்யப்படுகின்றன.

இம்மஸ்ஜிதிற்கான கட்டட நிதியை அல்ஹாஜ் எம்.ஐ.ஆர். எஸ். ஸெய்லானி (யாஸீன்), அல்ஹாஜ் எம்.எஸ்.எம். பௌஸான், எம்.எஸ்.எம். சாரிக் ஆகியோர் வழங்கி உதவினர்.

தற்பொழுது இம் மஸ்ஜிதின் நிர்வாகிகளாக அல்ஹாஜ் ரீ.எம். நியாஸ் அவர்களின் தலைமையில் ஹாஜிகளான எம்.ஐ.எம் பாஹிம், எம்.எஸ்.எம் பௌஸான், எம்.எஸ்.எம். நிஸாம், எம்.ஜே.எம். இம்தியாஸ் ஆகியோருடன் சாமில் அப்பாஸ், எம்.ஏ.எம். ரிப்கான் ஆசிரியர் ஆகியோரும் கடமை புரிகின்றனர்.

*இந்த மஸ்ஜிதின் ஆரம்பகால உருவாக்கத்துக்கு முயற்சி செய்தவர்கள் எம்.என்.எம். நவவி, அல்ஹாஜ் எம்.ஐ.எம். பாஹிம், தாஹிர் பாஸி ஆகியோராவர்.*

## *12*

# மஸ்ஜிதுல் பலாஹ்

*கண்ணாடிப் பள்ளி என அழைக்கப்படும் மஸ்ஜிதுல் பலாஹ், தர்கா நகர் ஷேக் பாஸி மாவத்தையின் ஆரம்பத்தில் அமைந்துள்ளது.கீழ்,மேல்மாடிகளின்முன்பகுதிகண்ணாடிக் கதவுகளைக் கொண்டிருப்பதனால் இது கண்ணாடிப் பள்ளி என்றும் அழைக்கப்படுகின்றது.*

*இந்தப் பள்ளிவாசலுக்குரிய காணி நால்வரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. நஸ்மின் மௌஸூன், தாஜி மபாஹிரின் தாய் மசூதா, மர்ஹூம் சம்சுல் மக்கீன் சகோதரர்களின் தாய் உம்மு நலீமா, பள்ளியின் பின்புறமாக உள்ள வீட்டின் உரிமையாளராக இருந்த மூஸின் லெப்பை ஆகியோரே ஆரம்பத்தில் மஸ்ஜிதுக்குக் காணி வழங்கியோர் ஆவர். பின்னர் ரிஸ்வி ஹாஜியார் மற்றுமொரு காணித் துண்டை வாங்கி பள்ளிக்காக அன்பளிப்புச் செய்தார்.*

*இந்தப் பள்ளிக்காக 1991இல் அடிக்கல் நாட்டப்பட்டு அது 1992ல் கட்டி முடித்து திறந்துவைக்கப்பட்டது. இரு மாடிக் கட்டடத்தை கொண்ட இம் மஸ்ஜித் சுற்றுச்சூழலில் வசிப்பவர்களதும் ஊரைச் சேர்ந்தவர்களதும் வெளிநாட்டில் தொழில் புரிபவர்களதும் நிதி உதவியால் பூர்த்தியானது.*

*இந்த மஸ்ஜிதின் யாப்பின்படி ஷாபிஈ மத்ஹபின் சட்டப் பிரகாரம் இங்கு அமல்கள் நடைபெற வேண்டும். வேறு எந்த இயக்க நிகழ்வுகளுக்கும் இங்கு இடமில்லை என்பதுடன் மஸ்ஜிதின் நிர்வாகச் செலவுகள் சூழ வசிப்பவர்களின் நிதி உதவியினால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த மஸ்ஜிதில் ஒரே தடவையில் சுமார் 200 பேர்களுக்கு தொழக்கூடிய*

வசதி உள்ளதோடு சிறுவர்களுக்கான குர்ஆன் வகுப்பும் நடைபெறுகிறது.

இந்த மஸ்ஜிதுக்காக ஆரம்பத்தில் பணியாற்றியவர்கள் அல்ஹாஜ் எம்.எம்.பாயிஸ், அல்ஹாஜ் ஸனூஸி மரிக்கார் ஆகியோர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக ஜனாப் ஸில்மி ஸனூஸி, அல்ஹாஜ் முஹீத், நவ்பர், பௌஸ் ஆசிரியர், அல்ஹாஜ் பாரிஸ், ரிப்கி ஸனூஸி, பதுருதீன் ரஸ்மி ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

மௌலவி முஹம்மது ஸில்மி 2020ஆம் ஆண்டு வரை இப் பள்ளியின் தலைவராக இருந்தார்.

## 13

## சொபலன்கந்த பலாஹ் மஸ்ஜித்

இந்த மஸ்ஜித் இஷா அத்துல் இஸ்லாம் சிறுவர் பராமரிப்பு நிலையத்திலிருந்து சுமார் 25 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. சுமார் 50 குடும்பங்களுக்கு மேல் வசித்து வந்த இந்தப் பகுதியில் அரசுக்கு சொந்தமான நிலம் ஒன்று வெற்றிடமாக இருந்தது. இக்காணி 1990களில் அரச அனுமதியுடன் அப்போதைய களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களால் சுமார் 20 குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இது மீரிப்பண்ணையைச் சேர்ந்த மர்ஹூம் ஹனீப் ஆசிரியரினதும் இன்னும் சிலரினதும் கோரிக்கையை அடுத்து இடம்பெற்றது.

பாலர் வகுப்பு நடந்து கொண்டிருந்த இடத்திற்கு அண்மையிலிருந்த இன்னுமொரு நிலப்பகுதியிலேயே அவ்வூர் ஜமாஅத்தினரின் உழைப்பில் பள்ளிவாசல் ஒன்று கட்டப்பட்டது. 1992இல் மேற்கொள்ளப்பட்ட இந்த

*முயற்சிக்கு அன்ஸாப் ஹாஜி, எம். ரிஸ்வான், எஸ். ஏ. அலவி மௌலானா (பூ), ஸல்மான் ஹாஜி, அஹ்மத் ஹுஸைன், ஓ.டபிள்யு.எம். மௌதூன் ஆகியோர் பங்களிப்புச் செய்தனர்.*

*1999இல் எஸ்.ஏ.அலவி மௌலானா, அல்ஹாஜ் ஏ.சீ.எம். நவாஸ், எம். அன்ஸார் ஆகியோருடன் இன்னும் சிலரின் முயற்சியால் நிதி உதவி நிறுவனமொன்றின் ஒத்துழைப்போடு இப் பள்ளிவாசல் அழகான முறையில் கட்டப்பட்டு அதே ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது.*

*அதுமுதல் இப்பள்ளி நிர்வாகம் அயலவர்களின் ஒத்துழைப்போடு நிகழ்ந்து வருகின்றது. குறிப்பாக ஐவேளைத் தொழுகைகள் ஜமாத்தாக இடம்பெறுகின்றன. தற்சமயம் இங்கு நிர்வாகக் குழுவொன்று உத்தியோகபூர்வமாக இல்லாத நிலையிலும் ஊர் ஜமாஅத்தினரின் ஒத்துழைப்பில் ஜனாப்களான எம்.எஸ்.எம். ஸப்ரான், எம்.என்.எம் ஸப்ரான், எம்.ரீ.ஐ.எம். ஹுஸைன், எம்.ரீ.எம். பயாஸ், எம்.ஏ.எம். நஸ்ரி ஹஸன், எம் எப் எம் பயாஸ் ஆகியோர் அடங்கிய குழுவொன்று நிர்வாகத்தை மேற்கொள்கிறது.*

## *14*

## மஸ்ஜிதுத் தக்வா

*வெலிப்பிட்டியில் பெருகிவரும் மக்களின் தேவையைக் கருதி ஷேக்மதார் லேனில் பள்ளிவாசல் ஒன்று அவசிய மாகியது. அப்பகுதி முக்கியஸ்தர்களும் பொதுமக்களும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். அக்காலத்தில் வயோதி பராக இருந்த முஸ்தபா அவர்களின் குடும்பத்தினர் ஒரு பள்ளிவாசலைக் கட்ட முன்வந்தனர். ஹாசிம் மாஸ்டர் தனக்குச் சொந்தமான 10 பேர்ச்சஸ் காணியை பள்ளிவாசல் கட்டுவதற்காக முஸ்தபா குடும்பத்தினருக்குக் குறைந்த விலைக்குவிற்றார். அக்காலத்திலேயே முஸ்தபா குடும்பத்தினர் சிறிதாகப் பள்ளிவாசலைக் கட்டி அதற்கு மஸ்ஜிதுத் தக்வா எனப் பெயர் சூட்டினர். இந்த மஸ்ஜித் 23.01.1993இல் திறந்து வைக்கப்பட்டது.*

இதன் ஆரம்பகால நம்பிக்கையாளர்களாக மர்ஹூம் ஹாஷிம் மாஸ்டர், கஸ்ஸாலி ஹாஜி, பாஹிம் ஹாஜி, நவாஸ் ஹாஜி, மர்ஹூம்களான ஜனாப் எம்.எம். நஸீர், ஜனாப் எம்.எஸ்.எம். நஸீர் ஆகியோர் கடமையாற்றினர்.

1999ஆம் ஆண்டு ஹாஜிகளான கஸ்ஸாலி, ஹஸன் நவ்பல், இஸ்மத், சுபுக்கி ஆகியோர் நம்பிக்கையாளர்களாகப் பதவியில் இருந்தபோது இப்பள்ளிவாசல் மீண்டும் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. இதற்கு நான்கு வருடங்களின் பின்னர் புனர்நிர்மாணம் மீண்டும் சிறப்பாக நடைபெற்றது. மக்கள் தொகை கூடியதற்கு ஏற்ப வசதிகளும் தேவைப்பட்டன. இதன்பின்னர் 2018இல் மஸ்ஜித் மேலும் விஸ்தரிக்கப்பட்டு அழகான முறையில் கட்டப்பட்டது. இதற்கான நிதி உதவியை தமக்கு அறிமுகமான கொடைவள்ளல் மூலம் நஜீப் ஹாஜியார் பெற்றுக்கொடுத்தார்.

புதிதாக அழகாகவும் விசாலமாகவும் புனர்நிர்மாணம் செய்து கட்டி முடிக்கப்பட்ட மஸ்ஜித் அல் தக்வா 2018 மே மாதம் 26ஆம் திகதி (ரமழான் பிறை 9, ஹிஜ்ரி 1439 மஃரிப் அதானுக்கு முன்பு முஹம்மது நஜீப் பின் அமீர் ஆலிம் அவர்களால் பெருந்தொகையான மக்களின் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. அன்று அங்கு சமுகமளித்திருந்த ஜமாத்தார் அனைவருக்கும் இப்தார் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பள்ளிவாசலின் விஸ்தரிப்பு வேலைகள் நடந்த போது படிப்படியாக 42 பேர்ச்சஸ் காணி இதற்காக வாங்கப்பட்டது. இஸ்மாயில் ஹாஜி, ஹரீஸ் இஸ்ஸதீன் ஹாஜி, ஏ.பி. ஹஸன் நவ்ஃபல் ஹாஜி, எம்.எச்.எம். ரூமி ஹாஜி, தவ்ஃபீக் ஹாஜி ஆகியோர் இதற்காக உதவி வழங்கினார்கள்.

இப் பள்ளிவாசலின் தற்போதைய பரிபாலகர்களாக ஹாஜிகளான எம்.எம். கஸ்ஸாலி, ஏ.பி. ஹஸன் நவ்ஃபல், என்.எஸ்.எம். இஸ்மத் ஹஸன், எஸ்.எம். சுபுகி ஆகியோர் உள்ளனர். இப் பள்ளிவாசலில் சுமார் 500 பேர் ஒரே நேரத்தில் சேர்ந்து தொழக்கூடிய வசதி உள்ளது.

# *15*

# மஸ்ஜித் ஸகரிய்யா

*வெலிப்பிட்டிய சம்சுத்தீன் மாவத்தையில் அமைந்துள்ள இந்த மஸ்ஜித் இரு மாடிக் கட்டடமாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் 31.08.2008இல் திறந்து வைக்கப்பட்டது.*

*இதற்கு முன்னர், அதிகரித்துவரும் ஜமாஅத்தாரின் எண்ணிக்கை காரணமாக அங்கு புதிதாக மஸ்ஜித் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்ற எண்ணக்கரு அப்பகுதி மக்களிடம் மேலோங்கியிருந்தது. அதற்கு இணைவாக மர்ஹூம் ஹாஷிம் ஆசிரியர், அல்ஹாஜ் நஸீர், அல்ஹாஜ் ஸாலி ஆகியோரின் அயராத உழைப்பின் காரணமாக ஜமாஅத்தாரின் உதவிகளைப் பெற்று 2002ஆம் ஆண்டில் 11 பேர்ச்சஸ் நிலம் வாங்கப்பட்டது.*

*ஊர் மக்களின் ஒத்துழைப்போடு 2002இல் பலகை யினாலான மஸ்ஜிதொன்று நிர்மாணிக்கப்பட்டு அதற்கு மஸ்ஜிதுல் ஸலாம் எனப் பெயரிடப்பட்டது. அன்று முதல் அங்கு ஐவேளைத் தொழுகையையும் ஜமாத்தோடு இடம்பெற்றது. அத்தோடு சிறுவர்களுக்கான குர்ஆன் வகுப்புக்களும் நடைபெறுகின்றன. இப்பகுதி ஜமாத்தாரின் வேண்டுகோளை ஏற்று மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஸக்கரியா அவர்களின் நினைவாக அவரது பிள்ளைகளினால் இந்த மஸ்ஜித் இருமாடிக் கட்டடமாகக் கட்டப்பட்டு மஸ்ஜித் ஸகரியா என்ற பெயரில் பரிணமிக்கின்றது. இந்த மஸ்ஜித் வெலிப்பிட்டிய ஜூம்மா மஸ்ஜிதின் நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது.*

# 16

# ஹாஜி லேன் மஸ்ஜிதுல் பிலால்

இது தர்கா நகர் பிரதான வீதியிலிருந்து ஆற்றங்கரையை நோக்கிப் போகும் இரு கால்வாய்களுக்கு இடைப்பட்ட பகுதியாகும். இங்கு சுமார் 50 குடியிருப்புகள் உள்ளன.

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு ஹாஜி லேனைச் சேர்ந்த ஐ. எல். எம். ஜமால்தீன் (முஹம்மது லெப்பை) அவர்களுக்கு ஆற்றங்கரையில் மஸ்ஜித் ஒன்று கட்டப்பட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அதற்காக அவர் ஆற்றங்கரையில் இருந்த தனது மூன்று பேர்ச்சஸ் காணியை வக்பு செய்தார். இது 08.04.1994இல் இடம்பெற்றது. இதற்கு சில மாதங்களின் பின்னர் அவர் வபாத்தானார். இக் காணியில் மதரஸத்துல் முஹம்மதியா என்ற பெயரில் குர்ஆன் மத்ரஸா ஒன்றே முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ஐ. எல். எம். ஜமால்தீன் என்பவர் மஸ்ஜிதுல் பிலால் நிர்வாகக் குழுவின் தலைவராக இருக்கின்ற ஷாஹிதீன் அவர்களின் தந்தை ஆவார்.

இந்த மதரஸாவுக்கு தகரத்தால் ஒரு கூடாரம் கட்டப்பட்டு தரைக்குசீமெந்துபோடப்பட்டது.இதற்காகஅப்பகுதிமக்கள் உதவி ஒத்தாசை வழங்கினார்கள். இங்கு சிறுவர்களுக்கான குர்ஆன் மத்ரஸா நடைபெற்றதோடு நோன்பு காலத்தில் தராவீஹ் தொழுகையும் தொழுவிக்கப்பட்டது. அத்தோடு தப்லீக் ஜமாத் வேலைகளும் இடம்பெற்றன. அனைத்துக் காரியங்களும் சிறப்பாகவே நடைபெற்றன.

2010ஆம் ஆண்டு அல்ஹாஜ் ஹரீஸ் இஸ்ஸதீன் அவர்கள் அவ்விடத்தில் 3 பேர்ச்சஸ் காணியையும், அவரது புதல்வர்களான இன்ஸாஃப், இக்ரம் ஆகியோர் 4 பேர்ச்சஸ் காணியையும் வாங்கி பள்ளிக்காக வக்பு செய்தனர். அதன்பிறகு 2010இல் கேரளாவில் உள்ள ஜமாத்தினரதும், அரபு நாடுகளில் தொழில் புரிந்து கொண்டிருந்த சிலரினதும் உதவியோடு அது சிறிய கட்டடமாக கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இப் பள்ளிவாசலுக்கு மஸ்ஜிதுல் பிலால் என்ற பெயரும் சூட்டப்பட்டது.

எட்டு வருடங்களாக சுமார் 100 பேருக்கு உட்பட்டவர்கள் ஒரே தடவையில் தொழக் கூடியதாகவே இப்பள்ளிவாசல் அமைந்திருந்தது. அதேவேளையில் ஆற்றங்கரைக்கு மிக நெருங்கியதாக அது அமைந்திருந்தது.

இந்த நிலையில்தான் பாரிய விஸ்தரிப்பு வேலைகளுடன் 2018 இல் இரு மாடிக் கட்டடமாக பள்ளிவாசலின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் நஜீப் ஹாஜியார் அவர்களின் முயற்சியால் கொடைவள்ளல் ஒருவரின் உதவியோடு பள்ளிவாசலின் கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டது.

2019 ஏப்ரல் 20ஆம் திகதி அஸர் தொழுகைக்குரிய நேரத்தில் பெரும் திரளான ஜமாஅத்தினரின் மத்தியில் நஜீப் ஹாஜியார் அவர்களின் கரங்களினால் புதிய பள்ளிவாசல் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. குறிப்பாக இந்தப் பணியில் நஜீப் ஹாஜியார் அவர்களுக்கு முதலில் ஆர்வத்தை ஏற்படுத்தியவர் அவரது மூன்றாவது புதல்வர் ஹிதாயத்துல்லாவின் மாமனார் அல்ஹாஜ் இல்யாஸ் ஆவார்.

இன்று இந்த பள்ளிவாசலின் இரண்டு மாடிகளிலும் சுமார் 700 பேர் ஒரே தடவையில் தொழக் கூடியதாக இருக்கிறது. விஸ்தீரணமான நிலப்பரப்பில் அழகான இரு மாடி கட்டிடமாக இந்த மஸ்ஜித் காட்சி அளிக்கிறது.

ஆற்றங்கரையின் குளிர்ச்சியை அனுபவிப்பதற்காகவும் தொழுவதற்காகவும் பலரும் இப்பள்ளிவாசலை நாடிச் செல்கின்றனர். பெந்தோட்டை ஆற்றில் படகில் பிர யாணம் செய்யும் உல்லாசப் பிரயாணிகளுக்கு உயர்ந்த மினாராக்களுடன் அழகாக நிமிர்ந்து நிற்கும் இந்த மஸ்ஜித் கண்களைக் கவரும் காட்சியாக அமைந்துள்ளது. பள்ளி யோடு இணைந்து கரையாக்கப்பட்டுள்ள பகுதியில் அமர்ந்து ஆற்றை ரசிப்பதற்குத் தினமும் பெருந்தொகையானோர் வருகின்றனர்.

இங்கு தற்போது ஜும்ஆ தொழுகையும் இடம்பெறுகிறது. அத்தோடு வாரத்தில் ஒரு தடவை குர்ஆன் விளக்க வகுப்பு

நடைபெறுகின்றது. வார நாட்களில் சிறார்களுக்கான குர்ஆன் வகுப்புக்களும் இடம்பெறுகின்றன.

மஸ்ஜிதுல் பிலால் ஒரு பள்ளியாக உருவாவதற்கு முதல் அங்கீகாரத்தை ஹாஜி லேன் ஜமாத்தாரின் வேண்டுகோளுக்கிணங்க தர்காநகர் பெரிய பள்ளி, தெருவுப் பள்ளி என்பவற்றை நிர்வகிக்கும் ஜமாத் கவுன்சில் வழங்கி உள்ளது.

மஸ்ஜிதுல் பிலால் பள்ளிவாசலின் நிர்வாகக் குழு பின்வருமாறு: தலைவர் அல்ஹாஜ் எம் ஜே எம். ஷாஹிதீன், உப தலைவர் அல்ஹாஜ் எம். எஃப். எம். பாயிஸ், செயலாளர் அல்ஹாஜ் எம். ஜே. எம். இம்தியாஸ், உதவிச் செயலாளர் எம். இஸட். எம். இன்ஸாஃப், பொருளாளர் அல்ஹாஜ் தாஜ் ஸபா, உதவிப் பொருளாளர் அல்ஹாஜ் எம். தஸூக், நிர்வாக உறுப்பினர்கள் எம். ஜே. எம். ஹரீஸ், அல்ஹாஜ் இம்ரான், அல்ஹாஜ் எம். எம். எம். இம்ரான், அல்ஹாஜ் எம். எச். எம். ரிஸான், முஹம்மத் ஸப்வான்.

## 17

# மஸ்ஜிதுல் ஜபல்

மஸ்ஜிதுல் ஜபல் பள்ளிவாசலானது மிலிட்டரி வீதியில் அமைந்துள்ளது. இப் பள்ளிக்கான 19 பேர்ச்சஸ் காணியை எம். எச். எம். அஸாஹிம் அவர்கள் வழங்கியுள்ளார்கள். மஸ்ஜிதுல் ஜபல் நிர்வாகியாக எம். எச். எம். அfபான் செயல்படுகிறார். ஆரம்ப காலத்தில் எம். எச். எம். ஸரூக் இணைந்து செயல்பட்டு இருக்கிறார்.

சுமார் 200 பேர் சேர்ந்து தொழக்கூடிய வசதியுள்ள இந்தப் பள்ளிவாசல், தர்கா நகர் மத்துகம வீதியையும் மீரிபண்ணை வீதியையும் இணைக்கும் பாதையின் மத்தியில் உள்ளது. பள்ளிவாசலின் இரு மருங்குகளிலும் அதிகமான முஸ்லிம் குடும்பங்கள் வசிக்கின்றன. இந்தப் பள்ளிவாசல் மீரிபண்ணை மஸ்ஜிதில் இருந்து சுமார் 300

மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. மறுபுறத்தில் மரிக்கார் வீதியிலுள்ள மஸ்ஜிதுல் நூரில் இருந்து இது சுமார் 400 மீட்டர் தொலைவில் இருக்கின்றது. 10. 01. 2012 இல் திறந்து வைக்கப்பட்ட இப்பள்ளிவாசல் அப்பகுதி மக்களுக்கு பலவகையிலும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது.

சுற்றி வாழும் மக்களினதும் வேறு பலரினதும் உதவியை கொண்டு இந்த மஸ்ஜித் இரண்டு மாடிக் கட்டடமாக கட்டப்பட்டுள்ளது. ஒரு மலைக்குன்றின் கீழ்பகுதியில் அமைந்துள்ள இப்பள்ளிவாசலின் அருகே பள்ளிக் காணியில் ஒரு பெரிய கிணறும் உள்ளது. கோடைகாலங்களில் நன்னீரை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நாடிவரும் கிணறுகளில் இதுவும் ஒன்றாகும். இந்த கிணற்று நீரை குழாய்கள் மூலம் பெற்றுக்கொள்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

## 18

## மஸ்ஜிதுல் அஷ்ரபிய்யா

பல்லாக்கு லெப்பை அண்ட் சன்ஸ் என்ற என்ற வர்த்தகப் பெயரைக்கொண்ட மர்ஹூம் அல்ஹாஜ் ஸதக்கத்துல்லாஹ் அவர்கள் மஸ்ஜிதுல் அஷ்ரபிய்யா பள்ளிவாசலைக் கட்டுவதற்கான காணியை அன்பளிப்புச் செய்தார். இந்த மஸ்ஜித் வெலிப்பிட்டிய ஜூம்ஆ மஸ்ஜிதில் இருந்து சிறிது தூரத்தில் அமைந்திருக்கிறது.

1990கள் காலப்பகுதியில் சிறிய அளவில் கட்டப்பட்ட ஒரு கட்டடத்தில் வகுப்புகள் நடந்தன. 1995இல் ஐவேளை ஜமாஅத் தொழுகை ஆரம்பிக்கப்பட்டு இது மஸ்ஜிதாக பதியப்பட்டது.

2012 இல் ஒரு சமூகப் பணி அமைப்பு முன்வந்து இதனை ஒரு விசாலமான கட்டடமாக நிர்மாணித்து அல்லாஹ்வுக்காக அர்ப்பணித்தது. தற்போது இந்த மஸ்ஜிதில் ஒரே தடவையில் 600 பேர் சேர்ந்து தொழக்கூடிய வசதி இருக்கின்றது. தாருல் மூஃமினாத் பெண்கள் அரபுக் கல்லூரிக்கு அருகாமையில் இப்பள்ளிவாசல் அமைந்திருப்பதனால் அப்பெண்கள் கல்லூரியின் பட்டமளிப்பு நிகழ்வு உரைகளை பள்ளிவாயலில் இருந்து கேட்பதற்கு வசதியாக இருக்கிறது.

*இந்த மஸ்ஜித் வெலிப்பிட்டிய ஜும்ஆ மஸ்ஜிதின் நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது.*

## *19*

# மஸ்ஜிதுல் அபூபக்கர்

*ஒரு சில தசாப்தங்களுக்கு முன்னர் மனித குடியேற்றங்கள் இல்லாமல் இருந்த சில நிலப் பகுதிகள் இன்று பாதைகள் அமைக்கப்பட்டு வீடுகள் உருவாகி பல குடும்பங்கள் வாழக்கூடிய பிரதேசங்களாக மாறியுள்ளன. இவ்வாறான பல பகுதிகள் தர்கா நகரில் உள்ளன. இவ்வாறான இடங்களில் தான் புதிதாக மஸ்ஜித்கள் தோன்றியுள்ளன. அவ்வாறான ஒரு பிரதேசம்தான் சென்றல் வீதியோடு இணைந்து செல்லுகின்ற சென்ட்ரல் லேன் ஆகும். இங்குதான் மஸ்ஜிதுல் அபூபக்கர் கட்டப்பட்டு 2016 இல் திறந்துவைக்கப்பட்டது.*

*இந்த மஸ்ஜித் உருவாவதற்கு முன்னர் சில சமூக ஆர்வலர்கள் ஒரு சகோதரரின் வீட்டை தற்காலிகமாகப் பெற்று அப்பகுதி இளைஞர்களுக்கு மத்தியில் மார்க்க சிந்தனையை உருவாக்கி வந்தனர். அதன்பின்னர் அவ்விடத்தில் ஒரு வீட்டை வாங்கி மார்க்கப் பணி செய்யும் இடமாக அதை உருவாக்கி சன்மார்க்கப் பணிகளைச் செய்தனர்.*

*இந்த நிலையில் நல்மனம் படைத்த ஒருவரும் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அவர்களது பெற்றோருக்கு நன்மையை நாடி அல்லாஹ்வுக்காக இந்த பள்ளிவாசலைக் கட்ட முன்வந்தனர். மஸ்ஜித் அமைந்துள்ள 10 பேர்ச்சஸ் காணிக்குரிய செலவும் மஸ்ஜிதின் முழு நிர்மாணச் செலவும் அவர்களால் பொறுப்பு எடுக்கப்பட்டது.*

*இந்தப் பள்ளிவாசலில் சுமார் 250 பேர் ஒரே தடவையில் சேர்ந்து தொழக்கூடிய வசதி உள்ளது. இப்பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர்களாக எம். எஸ். எம். நூர், ஓ. டி. எம். நாளிம், எம். எச். நஜீப்தீன், எம். ரீ. எம். மர்சூக், எம். என். எம். நிலார், ஏ. ஆர். எம். பஸீல், எம். எம். ஸாஹிர் ஆகியோர் உள்ளனர். இப்பள்ளி சம்பந்தமான பணிகளில் பணிவுடன்*

செயல்பட்டவர்களில் காலம் சென்ற சுபைர் ஹாஜியாரும் ஒருவர். மற்றும் பலவகைகளில் அப்பகுதி ஜமாத்தாரும் இந்த நற்பணிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

# 20

## தர்கா நகர் ஆலிம் ஸாஹிப் அப்பா தக்கியா

இதன் உருவாக்கம் சுமார் 200 வருடங்களுக்கு உட்பட்டதாக இருக்கலாம். கலை நுணுக்கங்களுடன் கட்டப்பட்டுள்ள இத்தக்கியா தர்கா நகர் பிரதான வீதியில் கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றது. அதன் முன்புறமாக அமைக்கப்பட்டுள்ள கடிகாரக் கோபுரம் ஆலிம் ஸாஹிப் அப்பா தக்கியாவுக்கு மேலும் அழகூட்டுகிறது. இதற்காக காணி வழங்கியவர் உமர் ஒப்ஸரின் தந்தை சேக் இஸ்மாயில் குமுஸ்தர் என வரலாறு கூறுகின்றது. கல் நொதாரிஸ் குடும்பத்தினரின் காணி ஒன்றும் அன்பளிப்புச் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இங்கு ஐவேளை ஜமாஅத் தொழுகை இடம்பெறுகிறது. சில தசாப்தங்களுக்கு முன்னர் சிறுவர்களுக்கான குர்ஆன் வகுப்பு ஒன்றும் நடைபெற்றது. பெருநாள் தொழுகைகளும் நடைபெறுவதோடு வருடா வருடம் மஷாயிகுமார் கந்தூரியும் இடம்பெறுகிறது. இக்கந்தூரி அஷ்ஷெய்க் ஹஸன் இப்னு உஸ்மானுல் மக்தூமி ஆலிம் (ரழி) இவர்களால் 180 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெறும் பிரபல கந்தூரிகளில் இதுவும் ஒன்றாகும். துல்கஃதா மாதம் தலைப்பிறை அன்று கொடி ஏற்றப்பட்டு 8 நாட்களாக இரவில் மார்க்க உபன்யாசம் நிகழ்ந்து ஒன்பதாம் நாள் பெரிய கந்தூரி நடைபெறும். முதலாம் நாள் வெளியூரவர்களுக்கும் மறுநாள் பகல் ஊர் மக்களுக்கும் இக் கந்தூரி வைபவம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மக்கள் திரண்டு வழியும் இக்கந்தூரியில் சில விளையாட்டுக் கழகங்கள் ஏற்பாடு செய்யும் ஏல விற்பனைகளும் இடம்பெறுகின்றன. முதல் கந்தூரி அன்று இரவில் பக்கீர் ஸாஹிப் குழுவினரின் ரபாய் ராத்தீப் நிகழ்வும் இடம்பெற்று வந்தது. இவர்கள் இதற்கென கிழக்கு மாகாணத்திலிருந்து வருகை தருவார்கள். இது இக்கந்தூரி தினத்தில் நிகழும் முக்கிய நிகழ்வாகும். மக்கள் விரும்பி ரசித்த அந்த ரபாய் ராத்திபை இன்று காணக்கூடியதாக இல்லை

.அஷ்ஷேக் ஹஸன் இப்னு உஸ்மானுல் மக்தூமி வலியுல்லாஹ் அவர்கள் இங்குதான் அடக்கம் செய்யப் பட்டுள்ளார்கள். இவர்கள் பல ஊர்களில் தஃவா பணி புரிந்ததால் மக்கள் சியாரத் செய்வதற்காகவும் இங்கு வந்து செல்வார்கள். அளுத்கம் வீதிய, ஹெட்டிவத்த என பெயர்களால் அழைக்கப்பட்ட தர்கா நகர் 1950க்குப் பிறகு இவர்களின் தர்காவின் ஞாபகார்த்தமாகவே தர்கா நகர் என்று பெயரிடப்பட்டதாகத் தெரியவருகிறது.

அஷ்ஷேக் ஹஸன் இப்னு உஸ்மானுல் மக்தூமி ஆலிம் சாஹிப் அப்பா அவர்கள்தான் அலவியத்துல் காதிரியா தரீக்காவை தர்கா நகரில் முதல் தரீக்காவாக ஆரம்பித்து வைத்தார். இவர்கள் தர்கா நகர் உஸ்மான் இப்னு ஃபரீத் குமுஸ்தர், காலி சோலையைச் சேர்ந்த பாத்திமா தம்பதியரின் செல்வப் புதல்வராக 1785 இல் பிறந்தார். தந்தையின் பராமரிப்பில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின்னர் காயல்பட்டணம் நஹ்வி ஆலிம் செய்கு லெப்பை அப்துல் காதிர் அவர்களிடம் கல்வி கற்றார். இவர் அரபு இலக்கணம் இலக்கியம், தப்சீர் சட்டக்கலை, தஸவ்வுஃப் போன்ற பல துறைகளில் சிறந்து விளங்கினார். வர்த்தகராக இருந்த இவர் காலிக் கோட்டை ஜும்மா மஸ்ஜித், கண்டி மீரா மக்காம் பள்ளி போன்ற பல இடங்களில் கதீபாகப் பணியாற்றயுள்ளார்கள். ஹம்பாந்தோட்டை, மாவனல்ல, ஹிங்குல, கனேதன்ன, கொழும்பு, களுத்துறை, மக்கொன, தர்கா நகர் ஆகிய இடங்களில் இவர் தனது மார்க்கப் பணியைத் தொடர்ந்துள்ளார்.

அஷ்ஷேக் ஹஸன் இப்னு உஸ்மானுல் மக்தூமி அவர்கள் தனது 85 ஆவது வயதில் வபாத்தானார்கள்.

அரபு நாட்டிலிருந்து அஸ்ஸெய்யது ஹஸனுல் அத்தாஸ் என்பவர் காலி நகர் வந்தபோது அவரைச் சந்தித்த இவர் அவர்களிடமிருந்து கற்றவைகளை வைத்து அவரிடம் பைஅத் செய்து காதிரியா தரீக்காவை ஏற்றார். ஆலிம் சாஹிப் அப்பா தக்கியாவில் இன்றுவரை வெள்ளி இரவு தோறும் ஓதப்பட்டு வரும் ராத்திபுல் ஹத்தாதியா என்ற ராத்திபை இவர் மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். இவர்கள் இரண்டாவது தடவையாக, ஜித்தாவிலிருந்து வருகை தந்த ஹபீப் அஸ்ஸெய்யித் அஹ்மத் பாபகிஃ மௌலானா அவர்களிடம் ஹிஜிரி 1245 இல் 4 தரீக்காக்களுக்கான பைஅத்தைப் பெற்றார். ஐதுரூஸியத்துல் காதிரியா தரீக்கா வழிமுறைகளை இவர் பின்பற்றி அவற்றை மக்கள் மயப்படுத்தி இலங்கையில் அறிமுகம் செய்தார்.

ஆலிம் சாஹிப் அப்பா தக்கியாவில் நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் வதூத் லெப்பை, முஹம்மது லெப்பை, புகாரி லெப்பை, ஸக்காப் லெப்பை ஆகியோர் நிர்வாகத்தில் மிகுந்த செல்வாக்கு மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். அஷ்ஷேக் ஹம்ஸா ஆலிம் அவர்கள் நீண்ட காலம் கலீபாவாக இருந்தார்கள். இவர் பேருவலையைச் சேர்ந்த அஷ்ஷேக் முஹம்மது அப்துல்லாஹ் ஆலிம் ஹாஜியாரின் மகனாவார். வதூத் லெப்பை அவர்களின் மகன் அப்துல் அஸீஸ் அவர்களும் அவர்களின் மறைவு வரை பெருமளவு இத்தக்கியாவுக்காக பங்களிப்புச் செய்தார்.

மௌலவி எம். ஆர். முஹம்மது ஸில்மி (நூரி) எம். ஏ. அவர்களும் கலீபாவாகவும் அலவியதுல் காதிரியா இமாமாகவும் பல வருடங்களாக இருந்ததுடன் தரீக்கா பணிகளை இங்கு நிகழ்த்தி வருகிறார்கள்.

# 21

## பாஸியத்துல் ஷாதுலிய்யா ஸாவியா

*இமாம் அபுல் ஹஸன் ஷாதுலி (ரழி) அவர்கள் மொரோக்கோவில் பிறந்தவர். இவர்கள் கல்வி கற்பதற் காக தூனிசியாவில் வாழ்ந்து வந்த காலத்திலே உருவாக் கப்பட்டதுதான் தரீக்கதுல் ஷாதுலிய்யா. இவர்கள் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் மறைந்து 22 வருடங்களுக்குப் பின்னர் பிறந்தவர்.*

*அபுல் ஹஸன் ஷாதுலிய்யி அவர்களுக்குப் பின்னர் மொரோக்கோவில் பிறந்த அஷ்ஷெய்க் முஹம்மத் இப்னு அப்துர் ரஹ்மான் அல் பாஸி அவர்கள் ஷாதுலிய்யா தரீக்காவில் சில மாற்றங்களைச் செய்ததால் இத் தரீக்கா பின்பு தரீக்கதுல் பாஸியத்துல் ஷாதுலிய்யா என்று அழைக்கப்பட்டது. இத் தரீக்கா அரபு நாடுகளில் பரவ ஆரம்பித்த பின்னர் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலும் முஸ்லிம் சமூகத்தினருக்கு மத்தியில் வேரூன்றலாயிற்று. இத் தரீக்காவை இந்தியாவில் இருந்து மலபாரைச் சேர்ந்த முஹம்மது ஸாலிஹ் மௌலானா என்பவர் இலங்கைக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். இதன் பின்னர் இலங்கையின் மேற்குக் கரையோரங்களில் ஸாவியாக்கள் உருவாகின. கொழும்பில் உருவான ஸாவியா அவ்வல் ஸாவியா என அழைக்கப் படுகின்றது. ஸாவியா என்பதன் கருத்து ஒதுங்கும் இடம் என்பதாகும்.*

*இத் தரீக்கா 1850களில் தர்கா நகரில் அறிமுகப்படுத்தப்பட்டு ஐந்து வருடங்களில் தர்கா நகர் தெருவுப் பள்ளிக்கு முன்பாக முதல் ஸாவியா கட்டப்பட்டது. இதன் வரலாறு மீரிப்பண்ணை, வெலிப்பிட்டி ஜும்மா பள்ளிவாசல்களின் வரலாற்றுக்கு முற்பட்டது. என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. இந்த ஸாவியா 1928இல் புனர் நிர்மாணம்*

செய்யப்பட்டது. இதனை அஷ்ஷேக் முஹம்மது இப்ராஹிம் ஷாதுலியி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

திக்ர் முறையை மட்டும் ஷாதுலிய்யா தரீக்கா மக்களுக்கு மத்தியில் வலியுறுத்தவில்லை. ஏகத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சீர்திருத்தப் பிரச்சாரம் அந்த தரீக்காவை வழிநடத்தியவர்களிடம் இருந்தது. ஷாதுலிய்யா தரீக்காவின் பிரதான திக்ரு முறைகளில் ஹழறா, வளீபா யாகூத்தியா போன்றவை உள்ளடங்குகின்றன. இந்த தரீக்காவின் முரீதீன்கள் இஹ்வான்கள் என அழைக்கப்படுகின்றனர். கடந்த 50 வருடங்களுக்கு முந்திய வரலாற்றை நோக்கிச் சென்றால் அதன் ஷேகுமார்கள் காலத்துக்குக் காலம் சவூதியில் இருந்து இலங்கை வந்து முரீதீன்களை சந்திப்பதற்காக வீடுகளுக்குச் செல்வார்கள். ஆனால் நாட்டின் இன்றைய சூழலில் அது இல்லாமல் ஆகிவிட்டது. ஓரிரு தசாப்தங்களுக்கு முன்னர் இத் தரீக்காவைச் சேர்ந்தவர்கள் தமது இல்லங்களில் திருமண மற்றும் மரண வைபவங்களின் போது ஹழரா மஜ்லிஸுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தனர்.

தர்கா நகர் பிரதான ஸாவியாவில் நீண்டகாலமாக வருடத்தில் பத்து நாட்கள் ஹழறா மஜ்லிஸும் உபந்நியாசங்களும் நிகழ்ந்து இறுதி நாள் இரவில் தெருவுப் பள்ளி முற்றவெளியில் மக்களுக்கு வீடுகளுக்கு எடுத்துச் செல்ல உணவுக் கிடுகுகள் வழங்கப்பட்டன. இத் தரீக்காவின் கலீபாவாக அரை நூற்றாண்டுக்கு முன்னர் மௌலவி ஜெய்னுலாப்தீன் அவர்கள் அன்று வருகை தந்திருந்த ஷாதுலிய்யா சேஹ் அவர்களால் தெரிவு செய்யப்பட்டார்கள். அவருக்குப்பின் மௌலவி செய்யது அஹமது ஆலிம் அவர்கள் பல வருடங்கள் பணியாற்றினார்கள். இவர் காலமானதன் பின்னர் அவரின் புதல்வர் அல்ஹாஜ் மௌலவி மஸா ஆலிம் அவர்கள் கலீபாவாகக் கடமையாற்றுகிறார்.

## 22

# மஸ்ஜித் முஹியத்தீன் காதிரிய்யா தக்கியா (போக்கடி தக்கியா)

*இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நெருங்கிய தோழரும் உறவினருமான இஸ்லாத்தின் முதலாவது கலீபா ஹஸரத் அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களின் 33ஆவது தலைமுறையில் பிறந்தவரான ஷெய்க் கன்ஸு நூர்தீன் என்பவர் அரேபியாவின் ஒரு பிரதேசத்துக்கான தனது ஆளுநர் பதவியை துறந்துவிட்டு இஸ்லாத்தைப் பிரசாரம் செய்வதற்காக தென்னிந்தியாவின் கோட்டார் பகுதிக்கு விஜயம் செய்தார். அவரது 42-வது தலைமுறையினர் தான் அஷ்ஷெய்க் செய்யது மொஹிதீன் ஸாலிஹுல் யகீனுல் காதிரி ஆவார். ஹிஜ்ரி 1170 இல் (கி.பி. 1756) அவர் குத்பு நாயகம் கௌஸுல் அஃலம் குத்புல் அக்தாப் முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரழி) அவர்களின் ஹிஜாஸாவை அவர்களது 14ஆவது தலைமுறையைச் சேர்ந்த உதுமான் அல் பக்தாதி என்பவர் ஊடாக பெற்றுக்கொண்டார். ஹிஜ்ரி1208இல் தனது 63-வது வயதில் மரணிக்கும் வரை அவர் தரீக்கா பணியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்.*

*அவரைத் தொடர்ந்து அவரது வழித்தோன்றல்கள் குத்பு நாயகம் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட ஹிஜாஸாவை ஒருவர் பின் ஒருவராக தொடர்ந்தனர். அவர்கள் ஷாபிஈ மத்ஹபின் கோட்பாடுகளுக்கு அமைய சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளின்படி இஸ்லாத்தையும் காதிரியா தரீக்காவையும் பிரச்சாரம் செய்தனர்.*

*தனது பாட்டனாரின் விருப்பத்தின்படி தரீக்கா பணியில் ஈடுபட்டிருந்த அஷ்ஷேக் முஹியத்தீனுல் காதிரி (ரஹ்) அவர்கள் கி. பி. 1840 இல் இலங்கைக்கு விஜயம் செய்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் தங்கியிருந்தார். அவரது தூண்டுதல், முயற்சி என்பவற்றின் காரணமாக கொழும்பு மெசஞ்சர் வீதி 27ம் இலக்கத்தில் மஸ்ஜித் முகையதீன் (கோட்டார்) தக்கியா நிர்மாணிக்கப்பட்டது.*

*ஹாஜி ஷேக் முஹியத்தீனுல் காதிரிய்யி அவர்களின் சகோதரரான அஷ்ஷெய்க் முகம்மது ரஜபுல் காதிரிய்யி (ரஹ்) அவர்கள் ஹிஜிரி 1308 (கி.பி. 1891)இல் காலி சிலும்புரையில் (ஹிரிம்புற) இத் தரீக்காவை முதன்முதலில் அறிமுகப்படுத்தினார்கள்.*

*இவர்களது முரீதீன்கள் இவர்களை ரஜபு அப்பா எனப் பரிவோடு அழைத்தனர். இப்பெரியார் இலங்கையின் பல பாகங்களிலும் காதிரியா தரீக்காவை ஸ்தாபிப்பதில் ஈடுபட்டார்கள். இலங்கையில் நூற்றுக்கும் அதிகமான தக்கியாக்களையும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பள்ளிவாசல் களையும் தோற்றுவிப்பதற்கு பேருதவியாக இருந்தார்கள்.*

*சமய மற்றும் தரீக்கா பணியில் அவர் தர்கா நகருக்கு விஜயம் செய்தபோது ஸீ.எம். ஹாமித் மரிக்கார் அவர்களின் முன்னோரான முஹம்மது காசிம் மரைக்கார் மேஸ்திரியார் என்பவரின் இல்லத்தில் தங்கியிருந்தார். அவ்வாறு தங்கியிருந்தபோது ஒருநாள் இரவு அவரது கனவில் தோன்றிய குத்பு நாயகம் (ரழி) அவர்கள், அப்போது இந்த தக்கியா அமைந்துள்ள இடத்தில் தொழுகையை நடத்துவதற்காகவும் தரீக்கா பணியை மேற்கொள்வதற்காகவும் தக்கியா ஒன்றை அமைக்குமாறு வேண்டிக்கொண்டார்கள்.*

*கி.பி.1852இல் கோட்டார் ஷெய்க் அவர்களின் முயற்சியுடன் அந்தக் காணி உரிமையாளரின் (ஸீ.எம். ஹாமித் மரிக்கார் அவர்களின் முன்னோர்) அனுமதி பெற்று அவ்விடத்தில் தொழுகை நடத்துவதற்காகவும் தரீக்கா பணியை தொடர்வதற்காகவும் சிறிய தக்கியா ஒன்று கட்டப்பட்டது.*

*ஆற்றை நோக்கி செல்லக்கூடிய ஒரு கால்வாய் மதகுக்கு அருகாமையில் இத்தக்கியா கட்டப்பட்டுள்ளதால் இது போக்கடி தக்கியா என அழைக்கப்பட்டு வருகின்றது. இந்த தக்கியாவுக்கான காணி ஸீ. எம். ஹாமித் மரிக்கார் மற்றும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த மஹ்மூத் ஹாஜியார் ஆகியோரால் வழங்கப்பட்டுள்ளது.*

*கொழும்பு மெசஞ்சர் வீதியிலுள்ள தக்கியாவின் முதல்வரே இந்தத் தக்கியாவின் முதல்வராகவும் இருக்கின்றார்.*

அஷ்ஷேக் ரஜபுல் காதிரி அவர்களின் மகன் அஷ்ஷேக் அப்துல் காதிரில் காதிரி அவர்கள் இத்தக்கியாவை விருத்தி செய்து பெரிதாகக் கட்டினார். ஸீ.எம். ஹாஜியாரின் சகோதரரின் மகனும் ஹாஜி ஹாஷிம் அலவி இஸ்மாயில் அவர்களின் பாட்டனாருமான இஸ்மாயில் லெப்பே மரிக்கார் (ஈச்சன் முதலாளி) என்பவர் தக்கியாவின் நிர்மாண மற்றும் அபிவிருத்தி வேலைகளில் பெருமளவு பங்கு கொண்டார். காதிரியா ஷேகுமார் பலர் ஒருவர் பின் ஒருவராக இங்கு வந்து நின்று இஸ்லாமிய பிரச்சாரத்தையும் தரீக்கா பணிகளையும் மேற்கொண்டனர். 1920களில் ஸீ. எம். ஹாஜியார் அவர்கள் வுழூ செய்வதற்கான நீர் தொட்டி (ஹவுள்) ஒன்றை இங்கு அமைத்துக் கொடுத்தார்.

1933இல் ஸீ.எம். ஹாஜியார் அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர் ஹாஜி மஹ்மூத் மரிக்கார் அவர்கள் தக்கியா வின் பின்புறமாக இருந்த காணித் துண்டொன்றை தக்கியாவுக்கு அன்பளிப்புச் செய்தார். ஹாஜி ஐ. எல். எம். ஹம்தூன் அவர்களும் இன்னும் பலரும் இத்தக்கியாவின் முன்னேற்றத்திற்காக பங்களிப்புச் செய்துள்ளனர்.

மௌலவி அப்துல் ரஸாக் ஆலிம், ஜனாப் அஸனா லெப்பை, அவரது மகன் ஜனாப் ஏ. எல். எம். இஸ்மாயில், மௌலவி அல்ஹாஜ் எஸ். எச். ஹிப்பதுல் கரீம் ஆகியோர் தரீக்காவின் கலீபாவாக பணிபுரிந்துள்ளனர்.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் அல்ஹாஜ் ஹாஷிம் அலவி இஸ்மாயில் அவர்களும் முன்னாள் கிராம முதல்வர் ஜனாப் ஓ எல் எம் ஸியாத் அவர்களும் ஏனையவர்களின் ஒத்துழைப்போடு தற்போதைய தக்கியாவை பெரிதாகவும் கலை நுணுக்கங்களுடனும் திட்டமிட்டு கட்டி முடித்தார்கள்.

இருப்பினும் தற்போது இது தரீக்கா வழியில் பொறுப்பாக உள்ள கொழும்பு காதிரியா கோட்டார் தக்கியாவின் ஷெய்கு ஆகிய அஷ்ஷெய்க் முர்ஷித் பாவாவின் கண்காணிப்பில் உள்ளது. அவர்களே இந்த தரீகாவின் ஆத்மீக தலைவராக இலங்கையில் பணியாற்றுகின்றார்.

# *23*

# அஷ்ஷெய்கு அப்துல் காதிர் காதியார் அப்பா தக்கியா

*இந்த தக்கியா தர்கா நகரில் அமைந்துள்ள மூன்று தக்கியாக்களுள் ஒன்றாகும். இது பெரிய பள்ளியில் இருந்து 200 மீட்டர் தூரத்தில் தெருவுப் பள்ளிக்கு நெருங்கியதாக அமைந்துள்ளது. இந்தத் தக்கியா அப்துல் காதிர் காதியார் அப்பா அவர்களது பெயரைக் கொண்டதாக இருந்தாலும் அது ''ஷேஹ்யூஸுப்'' வீட்டுத் (தேஸுபூட்டு) தக்கியா என்றும் அழைக்கப்படுகின்றது. இது காதியார் அப்பா அவர்களுக்குச் சொந்தமான காணியில் கட்டப்பட்டுள்ளது. நூற்றி முப்பது வருடகால வரலாற்றைக் கொண்டிருந்தாலும், இக்கட்டடம் சிறிதாகவும் பழைய கட்டடக் கலை நுட்பங்களைக் கொண்டதாகவும் காணப்படுகிறது.*

*அஷ்ஷெய்குல் காமில் அப்துல் காதிர் அவர்கள் அஷ் ஷெய்க் ஹஸன் இப்னு உஸ்மானுல் மஹ்தூமி (ரழி) (ஆலிம் சாஹிப் அப்பா) அவர்களின் சகோதரியின் புதல்வர் ஆவார். இவர் கி.பி.1824இல் பிறந்தார்.1894இல் வபாத்தானார்.*

*ஆலிம் சாஹிப் அப்பா அவர்களின் மனாகிபாகிய மவாஹிபுர் ரஹ்மான் என்னும் கிரந்தமே இங்கு ஓதப் படுகின்றது. இங்கு வருடாந்தம் ஸபர் மாதம் பிறை 1 முதல் 7 வரை இவர்களது பிறப்பு இறப்பு குறித்த ஞாபகார்த்த நிகழ்ச்சியாக நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை இரவுகளில் மஃரிபுக்கு பின் மஷாயிகுமார் ராத்திபு ஓதப்பட்டு வருவதோடு ரபியுல் அவ்வல் மாதம் 12 நாட்கள் சுபஹான மௌலூது ஓதப்பட்டு கந்தூரியும் நடைபெறுகிறது. இங்கு பொதுவாக ஏனைய தக்கியாக்களில் போன்று மக்கள் வெளியில் இருந்து வந்து தொழுகையில் ஈடுபடுவதைக் காண முடிவதில்லை.*

# 24

## ஸியாத் மரிக்கார் தக்கியா

தர்கா நகர் ஜெம் வீதியின் இறுதிப்பகுதி மீரிப்பண்ணை வீதியுடன் இணையும் இடத்தில் அமைந்துள்ள ஸியாத் மரிக்கார் தக்கியா 1952இன் இறுதிப்பகுதியில் அதே இடத்தில் வசித்து வந்த ஸியாத் மரிக்கார் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டது. இத் தக்கியா உருவாவதற்கு ஒரு சம்பவம் காரணமாக அமைந்துள்ளது.

ஸியாத் மரிக்கார் அவர்களுக்கு மூன்று பிள்ளைகள். இரு புதல்வர்கள்; ஒரு புதல்வி. அவர் தனது புதல்வி மீது அளவு கடந்த அன்பைப் பொழிந்து வந்தார். மார்க்க வரையறைகளுடன் கல்வி கற்று பண்பாட்டுடன் வளர்ந்த பெண், மூப்பெய்தி சில வருடங்களின் பின்னர் திடீரென நோய்வாய்ப்பட்டார். தந்தையார் படைத்த ரப்பிடம் நம்பிக்கைவைத்து தன்னாலான மருத்துவ சிகிச்சைகளை எல்லாம் வழங்கினார். அதிக அளவில் ஆயுர்வேத வைத்தியமும் செய்யப்பட்டது. எனினும் அல்லாஹ்வின் ஏற்பாடு வேறுவிதமாக இருந்தது. அவரால் நேசிக்கப்பட்ட அவரது அன்பு மகள் 1952இல் உலகை விட்டுப் பிரிந்தார். இது அவரை ஆறாத் துயரில் ஆழ்த்தியது. ஜனாஸா வீட்டுக்கு நெருக்கமாக இருந்த நிலத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதன்பின்னர் ஸியாத் மரிக்கார் உள்ளத்தில் ஒரு சிந்தனை உதித்தது. தனது வீட்டுக்கு அருகாமையில் ஒரு தக்கியாவை உருவாக்கி அயலில் வசித்து வரும் சிறார்களை தொழுகைக்காக அழைத்து தொழுகைக்கான பயிற்சியை வழங்க வேண்டும் என அவர் நினைத்தார். அதன்படி மகளின் கப்ருக்கு நெருக்கமாக சிறிய அளவில் ஒரு கட்டடத்தை அமைத்தார். சிறார்களைத் தொழுகைக்காக ஊக்குவித்தார். அவர்களைக் கொண்டே அதான் சொல்ல வைத்தார். வரும் சிறார்களுக்கு ஸுபஹ் இஷா தொழுகைக்குப் பின்னர் இனிப்புப் பண்டங்களை வழங்கியுள்ளார்.

*ஸியாத் மரிக்கார் 1969 வரை தக்கியாவை நிர்வகித்து வந்தார். அதே ஆண்டில் அவர் வபாத்தானார். அவரின் நெருங்கிய நண்பராக நஜீப் ஹாஜியாரின் தந்தை அமீர் ஆலிம் இருந்துள்ளார்.*

*1987இல் ஸியாத் மரிக்கார் தக்கியாவை இவரது மகன் மர்ஹூம் பாக்கிர் மரிக்கார் சிறிது விசாலமாக்கினார். அதன்பின்னர் சிறுவர்களுக்கான குர்ஆன் மத்ரஸாவை ஆரம்பித்து வைத்தார். 2007இல் ஊரிலே சன்மார்க்கப் பணியில் ஈடுபடக் கூடிய ஒரு குழு அல்ஹாஜ் எம். ஏ. பத்தாஹ் அவர்களின் மகன் நவாஸ் பத்தாஹ் அவர்களைச் சந்தித்து கட்டட விஸ்தரிப்பு சம்பந்தமாக உரையாடினர். நவாஸ் ஹாஜியார் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பாக்கிர் மரிக்கார் இந்தத் தக்கியாவைப் பெரிதாகக் கட்டி 2008 இல் நிறைவு செய்தார். இவர் அல்ஹாஜ் எம் ஏ பத்தாஹ் அவர்களின் மகளையே மணந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று இத்தக்கியா ஒரு மஸ்ஜிதைப் போன்று தோற்ற மளிக்கின்றது. சிலர் இதனை மீரிப்பண்ணை சின்னப் பள்ளி என்றும் அழைக்கின்றார்கள். இதன் கட்டுமானப் பணிகள் அவரின் மைத்துனர் ஷாஜஹான் பத்தாஹ் அவர்களின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது.*

## *25*

## அலக்கந்துபிட்டிய ஷெய்கு தாவூத் தக்கியா

*1961இல் அஹமத் லெப்பை (கட்ட லெப்பை) என்பவர் கண்ட கனவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே இந்த தக்கியா. ஆரம்பத்தில் ஒரு சிறிய குடிசை போன்ற அறையாக இது இருந்தது. பின்னர் விஸ்தரிப்பு வேலைகள் நிகழ்ந்தன. இதன் காணியில் அரை ஏக்கர் பகுதி முன்னாள் பட்டின சபை தலைவர் ஏ. எம். நயீம் அவர்களால் வழங்கப்பட்டது.*

1976இல் கட்டட நிர்மாண வேலைகளுக்காக சிறிது விரிவாக்கப்பட்ட இந்த தக்கியா ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இக் காணியின் மிகுதி பங்களிப்பை ஹனீபா மரிக்கார் (மறையன்) என்பவரின் மகன் சாதிக் மரிக்கார், செக்கு வீட்டு சகோதரிகள் இருவர், அஷ்ரப் மரிக்கார் (மரிக்கார் பிரதர்ஸ்) ஆகியோர் செய்தனர்.

1976இல் இத்தக்கியா கட்டப்பட்டபோது பளீல் ஹாஜியார் (முன்னாள் பேருவளை நகர சபைத் தலைவர்), இப்ராஹிம் மரிக்கார் (சீலைப்பேன்), மக்கீன் ஹாஜியார் ஆகியோர் நிதி உதவிகளை வழங்கியுள்ளனர்.

இந்தத் தக்கியாவில் ஆரம்பத்தில் கடமையாற்றிய முஹம்மது லெப்பையைத் தொடர்ந்து, தாஹிர் லெப்பை, சாலி லெப்பை, முஹம்மது ஹுஸைன், ஷுஹூத் லெப்பை, அப்பாஸ் லெப்பை, காதர் லெப்பை ஆகியவர்களும் கடமை ஆற்றியுள்ளனர்.

இறுதியாக இந்த தக்கியா புனர்நிர்மாணம் செய்யப்பட்ட போது அல்ஹாஜ் ஏ. பி. எம். சுஹைர், பி. எம். உவைஸ், எம். இசட். ஏ. ஸருக், எம். எச். ஏ. இம்ரான், எம். எச். நபாயிஸ், ஏ. எச். ஏ. மவ்சூன், ஏ. எல். ஹம்ஸா ரஸீன் ஆகியோர் பள்ளி நிர்வாகத்தினர்களாக இருந்தனர்.

ஆரம்ப காலத்தில் அல்ஹாஜ் எம். ஏ. பத்தாஹ் அவர்களும் இந்தத் தக்கியாவில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். நஜீப் ஹாஜியார் அவர்களின் தந்தை அமீர் ஆலிம் அவர்கள் இங்கு நிகழக்கூடிய வைபவ நிகழ்வுகளில் பிரதானமாகப் பங்கேற்றுள்ளார். ஷெய்கு தாவூத் தக்கியாவுக்கான பாதைக்குரிய காணியை வழங்கியவர்கள் அப்துல் வதூத் (ஜப்பான்), முஹம்மது ஹாசிம் (ஹஸன் ஜிப்ரி அவர்களின் தந்தை) ஆகியோராவர்.

இந்த தக்கியாவின் செயல்பாடுகளில் நீண்ட காலம் பொறுப்பாக இருந்து பெரும் பங்களிப்புச் செய்தவர் அஷ்ரப் மரிக்கார் ஆவார். 60 வருட கால வரலாறு கொண்ட இத் தக்கியாவில் சில தசாப்தங்களுக்கு முன்னர் ஓ. எல். எம். ஸியாத் ஜே. பீ., எம். எம். ஏ பாட்சா, எம் வை. பி. லத்தீப், ஏ. ஆர். எம். மவ்ஜூத், எம். ஐ. எம். ஷாபி துரை, சாதிக் மரிக்கார்

ஆகியோரின் பங்களிப்பும் இருந்தது. ஸஹீர் மெம்பர், சில்மி சனூஸி மரிக்கார், அன்ஸார் ஜே.பி. ஆகியோரும் நிர்வாகத்தில் பங்களிப்புச் செய்துள்ளனர்.

இங்கு நூராணியா மத்ரஸா 2005 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு ஹிப்ழும் நிகழ்கிறது. வருடந்தோறும் கொடியேற்றமும் கந்தூரி நிகழ்வும் உள்ளன. ஒவ்வொரு வியாழக்கிழமை மாலையும் ஷெய்கு தாவூத் மௌலூது ஓதப்படுகிறது.

தற்சமயம் இந்த தக்கியாவின் நிர்வாகப் பணிகள் அல்ஹாஜ் எம். ஜே. எம். தஸ்லீம், அல்ஹாஜ். எம். என். எம. பஹ்மி, எம். யூ. எம். நபீல் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் நிகழ்கின்றது.

## *26*

## முஅய்யிதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி

பல்வேறுபட்ட அறிவுத்திறன்களை ஒரு மனிதன் பெற்றிருந்த போதிலும் அவன் தன் ரப்பைப் பற்றி, மறுமை வாழ்வைப் பற்றி அறியாதவனாக இருந்தால் அவன் நஷ்டவாளி ஆவான். அல்லாஹ்வைப் பற்றிய அறிவை விடக் கல்வி ஞானம் உயர்ந்தது அல்ல. அல்லாஹ் அவர்களை அறிஞர்களாகக் கருத மாட்டான். "அல்லாஹ்வின் அடியார்களில் அவனை அஞ்சுவோர் தான் அறிஞர்கள்" (அல்குர்ஆன் 58-28)

இந்த அடிப்படையை விளங்கிக் கொண்ட எமது சமூகத்தினர் தாம் வாழும் காலத்தில் இறை நம்பிக்கையை வளர்க்கும் கல்விக்கூடங்களைக் காலத்துக்கு காலம் உருவாக்கி உள்ளார்கள். "உங்களில் நம்பிக்கையாளர்களுக்கும் கல்வி அறிவு அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான்" (அல்குர்ஆன் 58-11). இந்த வகையில் தர்கா நகரில் 1918இல் சமூக ஆர்வலர்களால் உருவாக்கப்பட்டதே நூற்றாண்டு வரலாறு காணும் தர்காநகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி. தர்கா நகர் முஹியத்தீன் மஸ்ஜித் பெரிய பள்ளிவாசலின் ஆரம்பகால கட்டடத்தின் ஒரு

பகுதியில் இயங்கிவந்த இம் மத்ரஸா, 1974இல் பள்ளி புதுக் கட்டடமாக உருப்பெற்றதும் அதன் இரண்டாம் மாடியில் இயங்க ஆரம்பித்தது.

பெரிய பள்ளிக்குப் பின்னால் சிறிது விசாலமான காணியொன்று இருந்தது. இது இன்றைய சந்ததியில் இருந்து நாலாம் தலைமுறைக்கு முன்னர் வாழ்ந்த முஹ்யித்தீன் லெப்பை என்பவருக்குச் சொந்தமானது எனக் கருதப்படுகிறது. இவர் வாப்புள்ள வாப்பச்சாவின் மகன் ஆவார். 1972இல் பெரிய பள்ளி புதிதாகக் கட்டப்படும் போது வேலையாட்கள் தங்கி ஓய்வெடுப்பதற்காகவும் கட்டிடத்திற்கான கட்டடப் பொருட்களை வைப்பதற்காகவும் தற்காலிக அறையொன்று அங்கு அமைக்கப்பட்டிருந்தது. பள்ளியின் நிர்மாணப் பணிகள் முடிந்த பின்னர் அது பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டு இருந்தது.

அதில் இருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து அங்கு அப்பகுதி சிறார்களுக்கான குர்ஆன் மத்ரஸா ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் ஆர்வம் கொண்டார்கள். இந்த விடயம் மிஃராஜ் மஜ்லிஸின் கோரிக்கையாக வெளிப்பட்டது. இம்முயற்சிக்கு முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் அன்றைய நிர்வாக சபைத் தலைவராக இருந்த ஏ. எல். எம். இஸ்மாயில் அவர்கள் ஆதரவு வழங்கினார்.

இதற்கான முயற்சியாக 1978இல் தர்காநகர் ஸாஹிராக் கல்லூரியில் ஒரு கூட்டம் இடம்பெற்றது. அன்றைய நிகழ்வில் ஹாஜிகளான ஏ. எச். எம். சித்தீக் (முன்னாள் தர்காநகர் பட்டின சபைத் தலைவர்), ஏ. எல். எம். இஸ்மாயில் (முன்னாள் கல்வி அதிகாரி), டாக்டர் எம். இஸட். எம். ஷாபி, ஏ. ஆர். எம். பதியுத்தீன், எம். எல். அப்துல் காதர் (முன்னாள் பாடசாலை அதிபர்), ஓ. எல். எம். அப்துல்லாஹ் (பபா துரை), ஸாபிர் பாட்சா (அதிகாரிகொடை), உமர் மிஹ்ளார் உட்பட மேலும் சிலர் கலந்து கொண்டனர்.

பழைய கட்டடத்தைத் திருத்தி அமைத்து அதில் குர்ஆன் மத்ரஸாவை ஆரம்பிக்க வேண்டுமென அங்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போது, அக் கட்டடத்தைப் புதிதாக

நிர்மாணிப்போம் எனக் கூறிய அல்ஹாஜ் ஏ. எச். எம். சித்தீக் அவர்கள், அதற்கான ஆரம்ப நிதியாக 20 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்தார். சிலநாட்களில் அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. சித்தீக் ஹாஜியார் அவர்களும் அதில் கலந்து கொண்டார்.

அதற்குப் பின்னர் அவர் சுகவீனமுற்று, கொழும்பு தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவரை சந்திக்கச் சென்ற தூதுக் குழுவிடம் கட்டட நிர்மாண செலவுகளுக்காக மேலும் 20 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தார். இத் தூதுக்குழுவில் ஏ. எல். எம். இஸ்மாயில், ஏ. ஆர். எம். பதியுத்தீன் ஆகியோருடன் இன்னும் சிலரும் சென்றிருந்தனர். இது நிகழ்ந்து சிறிது காலத்தின் பின்னர், குர்ஆன் மத்ரஸா திறக்கப்படுவதற்கு முன்பே, சித்தீக் ஹாஜியார் காலமானார். அவரது பெயர் பதிக்கப்பட்ட கல் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. மத்ரஸா கட்டப்பட்ட காலத்தில் இது ஓர் நினைவுச் சின்னமாகப் பேணப்பட வேண்டும் என்ற கருத்தை நஜீப் ஹாஜியார் அவர்களும் முன்வைத்திருந்தார். இப்பணிக்காக டாக்டர் எம். இஸட். எம். ஷாபி, நளீம் ஹாஜியார், ஸாபீர் பாட்சா ஆகியோருடன் இன்னும் சிலரும் உதவியுள்ளனர்.

1996இல் பெரிய பள்ளி மேல்மாடியில் இயங்கிவந்த முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக்கல்லூரியில் இட நெருக்கடி ஏற்பட்டபோது, கீழே உள்ள மத்ரஸா கட்டடத்துடன் உள்ள மேலதிக காணியையும் சேர்த்து முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியை விரிவாக்க அனுமதி கோரப்பட்டது. அதற்கான புதுக் கட்டடம் உருவாக்கப்பட்டதும், ஏற்கனவே நடைபெற்று வருகின்ற சிறுவர்களுக்கான குர்ஆன் வகுப்புக்களுக்கு அதில் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சிறுவர்க்கான குர்ஆன் மத்ரஸா நிர்வாகம் அதற்கு உடன்பட்டது. எனினும் புதுக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அக்கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

அந்த இடத்தில் முஅய்யிதுல் இஸ்லாம் மதரஸாவிற்கான புது கட்டிடம் கட்டப்படும் வரை, உலமாக்களை கொண்டு சிறுவர்களுக்கான குர்ஆன் வகுப்புகள் மாலை நேரத்தில் நடத்தப்பட்டன. ஞாயிறு காலைகளில் ஆசிரியை ஒருவர் அஹதியா வகுப்பை இலவசமாக நடத்தி வந்தார்.

முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் ஆரம்ப கர்த்தாக்களாக இருந்து முயற்சி செய்தவர்களில் மர்ஹூம்களான ஐ. எல். எம். ஷெய்கு அப்துல்லாஹ், ஸீ. எம். ஹாமித் மரிக்கார், அஹமத் அப்துல்லாஹ், ஏ. கே. ஹாஷிம் ஆகியோர் பிரதானமானவர்கள். இக்கல்லூரி நிதிக்காக மிஃராஜ் மஜ்லிஸ் உருவாக்கப்பட்டு வருடந்தோறும் மிஃராஜ் கந்தூரியின் மூலம் கிடைக்கும் வருமானம் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகச் செலவிடப்பட்டது. இதற்காக எம். எல். எம். அப்துல் ரஹ்மான் மரிக்கார் (ஏ. ஆர். எம். பதியுத்தீன் அவர்களின் தந்தை), உதுமான் லெப்பை ஆகியவர்களுடன் இன்னும் சிலரும் பங்களிப்புச் செய்தனர். அல்ஹாஜ் ஸீ. எம். ஹாமித் மரிக்கார் தனது இரு கடைகளை மத்ரஸாவுக்காக அன்பளிப்புச் செய்தார்.

வெலிகமையைச் சேர்ந்த மௌலவி முக்தார் ஆலிம் முதர்ரிஸாகச் சேவையாற்றிய பின்னர், 1939ஆம் ஆண்டு பதுளையைச் சேர்ந்த மௌலவி அப்துல் கபூர் ஆலிம் அதிபராகப் பணியாற்றியுள்ளார். தர்கா நகரைச் சேர்ந்த மௌலவி அப்துர் ரஸ்ஸாக் (கபூரி) அவர்களும் இங்கு அதிபராகப் பணி புரிந்துள்ளார். பிற்காலத்தில் மௌலவிகளான அக்குறணையைச் சேர்ந்த ஜெய்னுல் ஆப்தீன், கொழும்பைச் சேர்ந்த யெஹியா முஹம்மது நஸீர், வெலிகமையைச் சேர்ந்த அல்ஹாஜ் சித்தீக், களுத்துறையைச் சேர்ந்த பைரூஸ், மாதம்பையைச் சேர்ந்த அபூ ஸாலிஹ் ஹஸ்ரத், சம்மாந்துறையைச் சேர்ந்த மீராலெப்பை, வெலிகமையைச்சேர்ந்தஏ.ஆர்.எம்.தாரிக்,மாவனல்லையைச் சேர்ந்த மௌலவி ஜஃபர், தர்கா நகரைச் சேர்ந்த அல்ஹாஜ் நவ்ஃபல் பஹ்ஜி, ஆகியோர் மத்ரஸாவின் பொறுப்பு வாய்ந்த அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர்.

1950களில் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் பணிப்பாளராக ஏ. ஆர். முஹம்மது (தர்கா நகர் பட்டின

சபையின் முதலாவது தலைவர்) பொறுப்பேற்றுப் பணி புரிந்தார். பின்னர் ஆசிரியர் தந்தை என அழைக்கப்பட்ட ஐ. எல். எம். மஷ்ஹூர் பணிப்பாளராகப் பொறுப்பேற்று அதன் வளர்ச்சிப் பாதையில் பெரும் பங்களிப்புச் செய்தார். மார்க்கக் கல்வி கற்றலுக்காக ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி நிதி நெருக்கடி காரணமாக 1955இல் சில மாதங்களும், 1972இல் பெரிய பள்ளி புதிதாக கட்டப்பட்ட போது இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமும் மூடப்பட்டிருந்தது.

இக்கல்லூரி தரீக்கா சார்ந்த தனவந்தர்களால் காணி வழங்கப்பட்டு அஹ்லுல் சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்.

தர்கா நகர் பட்டின சபையின் முன்னாள் தலைவர் ஏ. ஆர். முஹம்மத், அல்ஹாஜ் மௌலவி செய்யது அஹ்மது ஆலிம், அல்ஹாஜ் எம்.எல்.ஏ.வாஹித் ஆகியோரின் பெருமுயற்சியால் இக்கல்லூரி 1974இல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. பெரிய பள்ளியின் புதுக் கட்டடத்தின் மேல் மாடியில் மத்ரஸா ஆரம்பிக்கப்பட்ட போது அன்றைய பள்ளிவாசல் நிர்வாகிகளாக இருந்த ஏ. ஆர். முஹம்மத், அல்ஹாஜ் எம். ஏ. பத்தாஹ் ஆகியோரால் ஊரின் நலன் கருதியும் மதரஸாவின் செயல்பாட்டுக்காகவும் ஜமாஅத் கவுன்சில் ஆரம்பிக்கப்பட்டு பைத்துல்மால் நிதியும் ஏற்படுத்தப்பட்டது.

1978ல் அரபுக் கல்லூரியின் வளர்ச்சிக்காக ஒரு நிர்வாகக் குழு தோற்றுவிக்கப்பட்டது. அதன் தலைவராக அல்ஹாஜ் எம். ஏ. பத்தாஹ் அவர்களும், இணைச் செயலாளர்களாக முன்னாள் அதிபர் ஐ. எல். எம். சுஐப், ஆசிரியர் ஏ. ஏ. எம். இப்ராஹிம் ஆகியோரும், பொருளாளராக ஏ. எல். எம். இஸ்மாயில் அவர்களும் பணியாற்றினர். அதன் பின்னர் சிறிது காலம் அல்ஹாஜ் ஏ. எம். ஹுஸைன் அவர்கள் பொருளாளராக இருந்தார்.

பிற்காலத்தில் பணிப்பாளர் சபையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. புதிய தலைவராக ஏ. எல். எம். இஸ்மாயில் பதவியேற்றார்.பின்னர் தலைமைத்துவப் பொறுப்பு ஐ.எல்.எம். சுஐப் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர்களது காலத்தில் அல்ஹாஜ் எம். ஐ. எம். அன்ஸார் முகாமையாளராகவும்

அல்ஹாஜ் ஏ. ஸீ. எம். இக்பால் பொருளாளராகவும், அல்ஹாஜ் எம். எல். ஏ. அப்துல் அஃலா மற்றும் எம். எம். பிஷ்ருல் வாபி ஆகியோர் இணைச்செயலாளர்களாகவும் செயல்பட்டனர். பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக அல்ஹாஜ் எம். எம். நிஸாம் ஆசிரியர், அல்ஹாஜ் ஏ. ஆர். எம். பதியுத்தீன் ஆகியோர் இருந்தனர்.

கல்லூரிக்கு வகுப்பறைகள், வாசிகசாலை, விடுதி, கேட்போர்கூடம், போசனசாலை என்பன உள்ளடங்கிய தனிக் கட்டடம் அமைக்கப்பட வேண்டுமென கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த மௌலவி ஏ. எல். எம். அபூதாலிப் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

மேல் மாகாண ஆளுநராக இருந்த அல்ஹாஜ் அலவி மௌலானா அவர்களின் பரிந்துரையின் பேரில் ஐக்கிய அரபு எமிரேட்டின் அல் நஹ்யான் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் இருந்து கிடைத்த 245,000 ரூபா நிதி உதவியுடனும் மேலும் சில தனவந்தர்களின் பங்களிப்புடனும் கட்டட நிர்மாண வேலைகள் நிகழ்ந்தன. எனினும் பல வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதி போதவில்லை. எனவே, இதற்கான நிதி உதவி கோரும் கோரிக்கை தர்காநகர் அல் ஹம்ரா வித்தியாலயத்தின் பழைய மாணவரும் 1970களில் இதே மத்ரஸாவில் மாலை நேர வகுப்புகளில் சன்மார்க்கக் கல்வியைப் பெற்றுக் கொண்டவருமான (அமீர் ஆலிம் அவர்களின் மகன்) முஹம்மத் நஜீப் ஹாஜியார் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

நஜீப் ஹாஜியார் அவர்கள் அதே ஆண்டிலேயே நற்பணிகளுக்காக உதவி வழங்கும் ஒரு பெருந்தகையிடம் கோரிக்கையை முன்வைத்தார். அது 2004 ஆம் ஆண்டிலேயே நிறைவு பெற்றது.

தெருவுப் பள்ளி திறப்பு விழாவிற்குப் பிறகு நஜீப் ஹாஜியாருடன் வருகை தந்திருந்த தூது குழுவுக்கு பள்ளி சங்கத்தினரால் மாலையில் விருந்துபசாரம் வழங்கப்பட்டது. அதன்பின்னர் மத்ரஸா கட்டப்பட்டுக் கொண்டிருந்த பகுதி பார்வையிடப்பட்டது. அதன்பின்னர் இச்செய்தி ஒரு வார காலத்திற்குள் தெருவு பள்ளி நிர்மாணத்திற்கு உதவி செய்தவரிடம் முன்வைக்கப்பட்டது. தெருவுப் பள்ளியின்

திறப்பு விழா பற்றி அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்திருந்த அவர், இதற்கும் உதவி செய்ய ஒப்புக் கொண்டார்.

இம்முயற்சிக்கு ஆர்வமூட்டியவர்களில் ஹாஜிகளான எம். எச். அப்துல் ஹலீம், எஸ். ஏ. மஸா ஆலிம், ஏ. எல். எம். இஸ்மாயில், ஐ. எல். எம். சுஐப், ஏ. ஆர். எம். பதியுத்தீன், எம். எம். அவ்பான், எம். ஐ. எம். அன்ஸார் ஆகியோர் பிரதான இடம் வகிக்கின்றனர்.

மதரஸாக் கட்டடப் பணிகள் பூர்த்தியானதும் அதன் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்குமாறு உதவி அளித்த பெருந்தகைக்கு, பள்ளி மற்றும் மத்ரஸா நிர்வாகம் நஜீப் ஹாஜியார் மூலம் அழைப்பு விடுத்தது. எனினும் அவர் அந்தப் பொறுப்பை தன் சார்பாக நஜீப் ஹாஜியாருக்கு ஒப்படைத்தார்.

13. 8. 2004 இல் அமீர் ஆலிமின் மகன் நஜீப் ஹாஜியார் தனது கரங்களால் மத்ரஸாவின் முதன்மை வாயிலைத் திறந்து வைத்தார். அவரது புதல்வர் நிஃமத்துல்லாஹ் நினைவுக் கல்வெட்டைத் திரை நீக்கம் செய்து வைத்தார். அன்றைய நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மேல் மாகாண ஆளுநர் அல்ஹாஜ் அலவி மௌலானா அவர்கள் கலந்து கொண்டதுடன் பள்ளிகளின் நிர்வாகத்தினர், உலமாப் பெருமக்கள், மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் எம். எஸ். எம். அஸ்லம் உட்படப் பெருந்தொகையான ஜமாஅத்தினர் கலந்து சிறப்பித்தனர்.

முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரிக்காக அதிபர் ஐ. எல். எம். சுஐப் அவர்கள் ஆற்றிய நீண்ட காலப் பணி மிகவும் சிறப்பானது. அதன் வளர்ச்சிக்காகத் தனது நேரத்தை அவர் மிகுந்த அர்ப்பணிப்புடன் செலவு செய்தார். 1996-2004 காலப்பகுதிகளில் தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரியில் பணிபுரிந்த பேருவளையைச் சேர்ந்த அதிபர் ஏ. டபிள்யு. எம். அஜ்வாத் அவர்கள் அரபுக் கல்லூரியின் நிர்வாகியாக இருந்து சிறப்பாகச் செயலாற்றி உள்ளார்.

இவ்வரபுக் கல்லூரியின் சில பழைய மாணவர்கள்:

அமீர் ஆலிம் (1930), மௌலவி எம். எம். அப்துல் வதூத், ஐ. எல். எம். சுஐப் (அதிபர்), கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி, ஏ. ஏ. எம். இப்ராஹிம் (விரிவுரையாளர்).

*இக்கல்லூரியில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கான சகாயநிதியை, பணிப்பாளர் சபையின் உபமுகாமையாளராகப் பணியாற்றிய அல்ஹாஜ் எம். எச். அப்துல் ஹலீம் அவர்கள்* ETA *லாங்கா நிறுவனத்தின் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொடுத்துள்ளார்.*

*அல்ஹாஜ் ஐ. எல். எம். ஷாபி, அல்ஹாஜ் ஏ. ஜே. எம். ஸனீர் ஆகிய இருவரும் ஸவூதி அரேபியாவில் தொழில் புரியும் காலத்தில், மத்ரஸாவின் முன்னேற்றம் கருதி அப்துல் கரீம் அல் ஆஜில் அவர்களிடமிருந்து நிர்வாகத்திற்கு பண உதவியை பெற்றுக் கொடுத்தார்கள். அல்ஹாஜ் ஹுஸைன் இஸ்மாயில், அல்ஹாஜ் அப்துல் பாரி, கொழும்பு மதனி ஹாஜியார் ஆகியோர் வாசிகசாலைக்குரிய புத்தகங்களை அன்பளிப்புச் செய்தனர். பௌதீகத் தேவையொன்றைப் பூர்த்தி செய்ய தர்கா நகர் ஆலிம் சாஹிப் அப்பா தக்கியாவின் தர்மகர்த்தாவாக இருந்த ஏ. டபிள்யூ. ஏ. அஸீஸ் முன்வந்தார்.*

*ஏ. ஜே. எம். நஸீர், எம். எம். அக்ரம், எம். எச். எம். ஹுஸைன் ஆசிரியர், எம். எச். எம். ஹுஸைன் இஸ்மாயில், எம். ஏ. எம். ஹஸன், எம். எம். நிஹார், எம். எம். அப்துல் கப்பார், எம். ஜே. எம். மஸுன், எம். எச். அப்துல் ஹலீம், எம். வாபி ஆகியோர் மத்ரஸாவின் நிர்வாகக் குழுவில் கடமை புரிகின்றனர். காரியாலயப் பொறுப்பதிகாரியாக மௌலவி. எம். எச். எம். இபாம் கடமை புரிகின்றார்.*

*102 வருட வரலாறு காணும் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் தலைவராக அல்ஹாஜ் எஸ். ஏ. மஸா ஆலிம் (பஹ்ஜி) அவர்களும் உதவித் தலைவராக இத்தகவல்களைத் திரட்டித் தந்த அல்ஹாஜ் ஏ. ஆர். எம். பதியுத்தீன் அவர்களும் சேவை புரிகின்றனர்.*

## 27

# மத்ரஸத்துல் இழ்ஹாருல் இஸ்லாம்

*தர்கா நகர் மீரிபண்ணையில் வாழும் பெற்றோர் தமது பிள்ளைகளை மத்ரஸாக்களில் சேர்த்து ஹாபிழே குர்ஆன்களாக உருவாக்க வேண்டும் என விரும்பினார்கள். இவ்வாறான நிலையில் தர்கா நகரில் ஒரு ஹிப்ழ் மதரஸா ஆரம்பிக்கப்பட வேண்டும் எனப் பலராலும் கருத்துக்கள் கூறப்பட்டன.*

*நிலைமை இவ்வாறு இருக்கும்போது, தர்கா நகர் மீரிப்பண்ணையைச் சேர்ந்த மௌலவி ஏ. ஏ. எம். நவ்பர் அவர்கள் பலருடன் பேசி ஆலோசித்ததன் விளைவே இங்கு உருவான இந்த மத்ரஸாவாகும். அருகே இருந்த குர்பதுஸ் ஸாகிரீன் மஸ்ஜிதின் நிர்வாகத் தலைவராக இருந்த அல்ஹாஜ் ஏ. ஸீ. எம். இக்பால் உட்பட இன்னும் சிலர் இதற்கான ஒத்துழைப்பை வழங்கினர்.*

*ஆரம்பத்தில் ஹிப்ழ் குர்ஆன் மத்ரஸா மீரிப்பண்ணை ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு முன்பாக இருந்த குர்ஆன் மத்ரஸா கட்டடத்தில் ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் பகுதிநேர மத்ரஸாவாக 03. 04. 1996இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இம் மத்ரஸாவுக்கு ஆரம்பத்தில் 13 மாணவர்களும் 2 உஸ்தாத்மார்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அந்த மாணவர்களுக்கு முதல் பாடத்தை சொல்லிக் கொடுத்தவர் கலீபத்துஷ் ஷாதுலி அல்ஹாஜ் ஓ. எல். எம். பளீல் ஆலிம் அவர்களாவர்.இந்நிகழ்வு சாதாரண முறையில் இடம்பெற்றது. அப்பொழுது ஏ.ஏ.எம்.நவ்பர் ஆலிம் அவர்கள் அதிபராகவும் அல் ஹாஃபிழ் நஸார் மற்றும் மவ்லவி இஸ்ஸத் ஆகியோர் உஸ்தாதுமார்களாகவும் நியமிக்கப்பட்டனர். மத்ரஸாவின் நிர்வாக உறுப்பினர்களாக அல்ஹாஜ் ஏ. ஸீ. எம். இக்பால், அல்ஹாஜ் மௌலவி உபைதுல்லாஹ் (ஜெஸூலி), அல்ஹாஜ் எம். எஸ். எம். ஷம்ஸ் ஆகியோர் கடமையாற்றினர்.*

*பகுதிநேர அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மத்ரஸாவுக்கு ஊர்வாசிகள் பலவகைகளில் உதவிகள் வழங்கினர். சிறிது காலத்தில் மத்ரஸாவின் மாணவர் தொகை*

மேலும் அதிகரித்தது. எனவே மத்ரஸாவின் தேவைகளுக்காகப் பள்ளிவாசலும் பயன்படுத்தப்பட்டது. மதரஸாவை மேலும் திறம்பட வழி நடத்துவதற்காக நிர்வாக சபைக்கு அல்ஹாஜ் ஷாஜஹான் பத்தாஹ் போசகராகவும், அல்ஹாஜ் ஏ. ஸீ. எம். இக்பால் தலைவராகவும், அல்ஹாஜ் எம். எஸ். எம். ரிப்கான், அல்ஹாஜ் எம். ஐ. ஆர். எஸ். ஸெய்லானி (யாஸீன்), மௌலவி அல்ஹாஜ் ஜெஸூலி உபைதுல்லாஹ் ஆகியோர் உப தலைவர்களாகவும் தெரிவு செய்யப்பட்டு நிர்வாகக்குழு அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்கல்லூரி மூன்று வருட காலத்தில் அல் ஹாஃபிழ் பட்டமளிப்பு விழாவொன்றைக் காணக்கூடிய நிலையை எட்டியது. அன்றைய தினம் ஹாபிழ் பட்டம் பெற்ற 13 மாணவர்களில் 7 பேர் தர்கா நகரைச் சேர்ந்தவர்கள்.

சமகால மற்றும் எதிர்காலக் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஜாமீயத்து இழ்ஹாருல் இஸ்லாம் என்ற பெயரோடு இன்று இம் மத்ரஸா பலவழிகளிலும் உயர்ந்து நிற்கின்றது. ஷரீஆ, ஹிப்ழ் பாடத்திட்டங்கள் சிறந்த உலமாக்களால் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் வளர்ச்சிக்காக பலர் பெருமளவிலான உதவிகளைச் செய்துள்ளார்கள்.

மத்ரஸாவுக்கான புதுக் கட்டடமொன்றை அமைப் பதற்காக 40 பேர்ச்சஸ் காணியை மர்ஹூம் அல்ஹாஜ் ஏ. எச். எம். சித்தீக் அவர்களின் புதல்வர் எம். எஸ். எம். ரிப்கான் தமது குடும்பத்தின் சார்பாக அன்பளிப்புச் செய்தார். இது தவிர மேலும் 14 பேர்ச்சஸ் வழங்கும் விடயத்திலும் இவர் பங்களிப்புச் செய்துள்ளார். புதிய மூன்று மாடிக் கட்டடத்திற்கான அத்திவாரச் செலவும் அவரால் பொறுப்பேற்கப்பட்டது. கட்டட நிர்மாணச் செலவில் பெரும் பங்காளியாக இருந்தவர் உயர்ந்த உள்ளம் கொண்ட பெருந்தகை ஒருவர். இந்த உதவியைப் பெற்றுக்கொள்வதற்குக் காரணமாக இருந்தவர் அக்குரணை ரஹ்மானியா அரபிக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அஷ்ஷெய்க் ஏ. சீ. எம். ஜிப்ரி அவர்கள். இக்கட்டடத்தின் 50 சதவீதமான செலவுகள் அப் பெருந்தகையின் உதவியாலேயே நிகழ்ந்தது.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக உதவிக்கரம் நீட்டிய இன்னும் பலர் உள்ளனர். மத்ரஸாவின் நிரந்தர

*வருமானத்திற்காக மற்றுமொரு பெருந்தகை கடைத் தொகுதியொன்றை வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளார். அளுத்கம ஃபெஷன் சென்றர் உரிமையாளர் அல்ஹாஜ் எம். இஸட். எம். நஸீம் அவர்கள் தனது சகோதரர் மர்ஹூம் அல்ஹாஜ் எம். இஸட். எம். மஷ்ரூக் அவர்களின் நினைவாகக் கடை ஒன்றை அன்பளிப்பு செய்தார். அல்ஹாஜ் எம். எஸ். எம். பௌஸான் இரண்டாவது கட்டடத்திற்கான அத்திவாரத்திற்கு உதவி புரிந்தார். கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்தும் முன்வீட்டு அல்ஹாஜ் எச். ஏ. முனாஸ் குடும்பத்தினர் தண்ணீரை வழங்கி வருகின்றனர்.*

*கல்லூரியின் குழாய்க்கிணறுக்கான வசதியை தர்கா நகர் மர்ஹூம் ஓ. எல். எம். தாஹிர் ஹாஜியாரின் பேரன் தெஹிவளையைச் சேர்ந்த எம். எச். எம். இப்ராஹிம் என்பவர் செய்து கொடுத்தார். கல்லூரியின் பிரதான கட்டடத்திற்கான மின்சாரக் கட்டணத்தை அல்ஹாஜ் எம். ஆர். எஸ். ஸைலானி (யாஸீன்) அவர்கள் வழங்கினார். அவரது மறைவுக்குப் பின்னர் அவரது மனைவி இப்பணியைச் செய்து வருகின்றார்.*

*மத்ரஸாவிற்கான வாசிகசாலைக் கட்டடத்தை அஷ்பாக் ஹார்ட்வெயார் உரிமையாளர் அல்ஹாஜ் எம். நிஸ்தார் அவர்கள் காலஞ்சென்ற தனது மனைவியின் பெயரில் அமைத்துக் கொடுத்துள்ளார். மத்ரஸாவுக்காகப் புதிதாக கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இதற்கு நீர் வழங்குவதற்காக கிணறு ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இதற்கான உதவியை அல்ஹாஜ் எம். எஸ். எம். பர்ஸான் (ஷாபி ஹார்ட்வெயார்), அல்ஹாஜ் ஏ. ஸி. எம். இக்பால் ஆகியோர் செய்துள்ளனர். மாணவர் குளிப்பதற்கான நீர்த்தொட்டி ஒன்றையும் அல்ஹாஜ் எம். எஸ். எம். பர்ஸான் செய்து கொடுத்துள்ளார். இவ்வாறு உயர்ந்த உள்ளம் கொண்ட பலராலும் தொடர்ந்தும் கல்லூரிக்கான உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.*

*இப்போது இக்கல்லூரியின் ஷரீஆ, ஹிப்ழ் பிரிவுகளில் 90 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இதுவரை கற்று வெளியேறிய ஹாபிழ்களின் எண்ணிக்கை 74 ஆகும். ஷரீஆ கற்கை நெறியைப் பூர்த்தி செய்த ஆலிம்களின் எண்ணிக்கை*

*84 ஆகும். தர்கா நகரைச் சேர்ந்த அல் ஹாபிழ் அல் ஆலிம் எம். ஏ. அப்துல் அலீம் மக்கா அல்முகர்ரமாவில் நடைபெற்ற குர்ஆன் தஜ்வீத் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று இக்கல்லூரிக்கும் ஊருக்கும் நாட்டுக்கும் பெருமை தேடிக் கொடுத்தார். கல்லூரியின் தற்போதைய அதிபராக அஷ்ஷேக் ஏ. எஸ். எம். ஜிப்ரி (தீனி) கடமையாற்றுகிறார்.*

## *28*

# தர்கா நகர் தாருல் மூஃமினாத் பெண்கள் அரபிக் கல்லூரி

*தர்கா நகரில் இளம் பெண்கள் மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொள்வதற்காக ஷரீஆவை அடிப்படையாகக் கொண்ட ஒரு கல்விக்கூடம் இல்லாமை ஒரு குறையாக இருந்தது. 6. 9. 2006இல் தாருல் மூஃமினாத் பெண்கள் அரபுக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதோடு இக்குறை நீங்கிவிட்டது.*

*இதற்கான ஆரம்ப முயற்சிகளில் ஹாஜிகளான ஹாஷிம் அமீர் ஸாஹிப், முஹம்மது நஸீர், எம். எஸ். எம். ஸிராஜ் ஆகியோர் பங்குபற்றினர். புத்தளம் அஸ்ஸகீனா நிறுவனத்தின் ஆசிரியர் ஹனீபா அவர்கள் இந்த மதரஸாவை உருவாக்கும் விடயத்தில் ஆர்வமூட்டிக் கொண்டிருந்தார்.*

*வாடகை வீடொன்றில் ஆரம்பிக்கப்பட்ட இம்மத்ரஸா 20 மாணவிகளுடன் பாடநெறிகளை ஆரம்பித்தது. ஆரம்ப தினமன்று விசேட சொற்பொழிவாளர்களாக வெலிகம மத்ரஸதுல் பாரி அரபுக் கல்லூரியின் முதல்வர் மௌலவி அப்துர் ரஹ்மான் ஹாபிழ் (மழ்ஹரி) அவர்களும் ஏறாவூரைச் சேர்ந்த மௌலவி ஸாதிக் (ஹாஷிமி) அவர்களும் கலந்து கொண்டனர்.*

*அதிபராக மௌலவி ஹாபிஸ் பைஸல் (இன்ஆமி) அவர்களும் முதர்ரிஸாக கொழும்பைச் சேர்ந்த மீரான் சாஹிப் அவர்களின் துணைவியாரும் இக்கல்லூரியில் கடமையாற்றினார்கள்.*

இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக அல்ஹாஜ் எம். ஐ. ஆர். ஸெயிலானி (யாஸீன்) அவர்களின் தலைமையின் கீழ் நிர்வாகக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இக்குழு ஆரம்பகாலப்பகுதி முதல் மத்ரஸாவின் சீரான செயற்பாடுகளுக்காக மஷூரா மூலம் தீர்மானங்களை மேற்கொண்டு சிறப்பாகப் பணியாற்றியது. இன்று அந்த நிர்வாகக் குழுவில் அல்ஹாஜ் எம். எஸ். எம். கமால் ஹஸன் தலைவராகவும் அல்ஹாஜ் எம். ரீ. எம். ஹிஷாம்தீன் காரியதரிசியாகவும்செயல்படுகின்றனர்.உபகாரியதரிசிகளாக மௌலவி ஹாபிஸ் எம். ஐ. எம். ரிஸ்வி, அல்ஹாஜ் எம். பி. ஹஸன் நவ்ஃபல் ஆகியோரும் தனாதிகாரியாக அல்ஹாஜ் எம். ஜே. எம். நிஸார் அவர்களும் உப தனாதிகாரியாக அல்ஹாஜ் எம். என். எம். நிலார் அவர்களும் செயல்படுகின்றனர். ஏனைய நிர்வாகக்குழு அங்கத்தவர்களாக மௌலவி எம். எஸ். எம். நிபால், ஹாஜிகளான எம். ஏ. கஸ்ஸாலி, எம். எஸ். எம். பௌஸான், எம். ஆர். எம். பைஸர், எம். எம். எம். ரிப்கான் ஆகியோர் உள்ளனர்.

நீர் கொழும்பைச் சேர்ந்த அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் (ஹிழ்ரி) அதிபராகப் பணியாற்றுகின்ற இன்றைய காலகட்டத்தில் பத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர். அல்-ஆலிமா பிரிவில் 35 மாணவிகளும்,அல்குர்ஆன் மனனப் பிரிவில் 95 மாணவிகளும் கல்வி பயில்கின்றனர்.வகுப்புக்கள் காலை 7 மணி முதல் மாலை 5.30 வரை நடைபெறுகின்றன. மாணவிகளுக்கான பகல் போசனமும் தேனீரும் கல்லூரியிலேயே வழங்கப்படுகின்றது. இக் கல்லூரிக்கான செலவில் சுமார் 85,000 ரூபா மாணவி களிடம் இருந்து வசூலிக்கப்படும் சந்தாவாகக் கிடைக்கிறது. மிகுதிச் செலவை மத்ரஸா நிர்வாகம் பல சிரமங்களுக்கு மத்தியில் செய்துவருகின்றது.

இங்கு ஐந்து வருடக் கற்கை நெறியே இடம்பெறுகிறது. இதுவரை 49 அல்-ஆலிமாக்கள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர். எட்டு வருட காலமாக வாடகை வீடொன்றில் இயங்கிவந்த இக்கல்லூரிக்கு தர்கா நகரைச் சேர்ந்த அல்ஹாஜ் ஹிலால் இஸ்மாயில் சகோதரர்கள் ஒரு துண்டுக் காணியை அன்பளிப்பாக வழங்கினார்கள்.

பெயர் குறிப்பிட விரும்பாத மற்றொரு சகோதரர் 50 பேர்ச்சஸ் காணியை வாங்கி இக்கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். இக்காணி பல்லாக்கு சன்ஸ் ஸதகத்துல்லாஹ் ஹாஜியாருக்குச் சொந்தமானது. அவரது அனுமதியே இதற்கான முறையான வரலாற்றுக்கு வழிவகுத்தது. அதன் பின்னர் இரண்டு மாடிக் கட்டடத்தின் கீழ்மாடி நிர்வாகத்தினரினதும் ஊர் வாசிகளான தனவந்தர்களினதும் உதவியோடு பூர்த்தியாக்கப்பட்டது.

இங்கு பாடசாலைக் கலைத்திட்டப் பாடங்களுக்காக 4 ஆசிரியர்களும் தையல் பயிற்சிக்காக மற்றுமொரு ஆசிரியையும் கடமையாற்றுகின்றனர்.

இக்கல்லூரி மாணவர்களில் பெரும்பாலானோர் தர்கா நகரைச் சேர்ந்தவர்கள். பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த சில மாணவிகளும் இங்கு கற்று வருகின்றனர்.

இக்கல்லூரியின் எதிர்கால திட்டங்கள்:

புதிய கட்டடத்தின் மேல்மாடி வேலைகளைப்பூர்த்தி செய்து அதில் அல்குர்ஆன் மனனப் பிரிவை மாணவிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

ஷரீஆப் பாடங்களுடன் மாணவிகளுக்கு கணனிப் பயிற்சி, தையல் பயிற்சி, சமையல் பயிற்சிக் கற்கைநெறிகளை வழங்குதல்.

சகல வசதிகளையும் கொண்ட ஒரு நூலகத்தை அமைத்தல்

வயது வந்த பெண் பிள்ளைகளுக்கும் மற்றும் திருமணமான பெண்களுக்கும் தனிப்பட்ட முறையில் மார்க்கச் சட்ட வகுப்புகளை ஏற்பாடு செய்தல்.

இந்த முயற்சிகள் மேலும் வளர்ச்சி அடைந்து களங்கமற்ற தூய இஸ்லாம் எம் சமூக பெண்மணிகளிடம் பிரதிபலிக்க அல்லாஹ் அருள் புரிவானாக!

## 29

# அல் ஹம்றா மகா வித்தியாலயம்

*தர்கா நகர் அல் ஹம்றா மகா வித்தியாலயம் 1896இல் இப்ரா ஹிம் லெப்பை மரிக்காரின் வீட்டில் ஆரம்பிக்கப்பட்டுத் திண்ணைப் பாடசாலையாக இயங்கி வந்தது. படிப்படியாக வளர்ச்சி பெற்ற அல் ஹம்றா தற்போது 125 வருட கால வரலாற்றைக் கொண்டிருக்கிறது.*

*அல் ஹம்றா தோன்றுவதற்கு ஆரம்ப காரணகர்த்தாக்களாக ஐ.எல்.எம். சேக் அப்துல்லா ஹாஜியார், எஸ். ஐ. ஏ. அஹமது அப்துல்லாஹ், ஐ. எல். எம். உமர் லெப்பை மரிக்கார் (உமர் ஒப்ஸர்), ஏ. ஆர். எம். இஸ்மாயில் லெப்பை மரிக்கார் ஆகியோர் கருதப்படுகின்றனர். தற்போதுள்ள இடத்தில் பாடசாலையை அமைப்பதற்கான காணியை வழங்கியவர்கள் ஈச்சன் முதலாளி, உமர் லெப்பை மரிக்கார் (உமர் ஒப்ஸர்) ஆகியோர் ஆவர். இவர்கள் ஓலையால் வேயப்பட்ட ஒரு கட்டடத்தை பாடசாலைக் கட்டடமாக அமைத்து திண்ணைப் பாடசாலையை புதிய கட்டடத்திற்கு மாற்றினர்.*

*அல் ஹம்றாவில் அதிபர்களாக இருந்தவர்களும் அவர் களது சேவைக் காலமும்*

*ஜனாப் ஐதுரூஸ் 1924-25*<br>
*ஜனாப் ஜெயினுத்தீன் மரிக்கார் 1925-26*<br>
*திரு கே. எஸ். ராஜசிங்கம் 1926-29*<br>
*திரு ரீ. ஏ. போல் 1929-37*<br>
*ஜனாப் ஐ. எல். எம். மஷ்ஹூர் 1938-42*<br>
*ஜனாப் எம். ஏ. பாரி 1942-59*<br>
*ஜனாப் எம். எஸ். எம். ஹரீஸ் 1959-60*<br>
*ஜனாப் ஐ. எல். எம். சுஐப் 1960-62*<br>
*ஜனாப் ஏ. இஸட். ஒமர்தீன் 1962-63*<br>
*ஜனாப் எம். ஏ. வாஹித் 1963-64*<br>
*ஜனாப் வை. எல். எம். அபுல் ஹஸன் (ஸாலிஹ்) 1965-66*

*ஜனாப் எம். எம். ஏ. அலவி 1966-84*
*ஜனாப் எம். ஐ. எம். கலீல் 1984-85*

*ஜனாப் எம். எஸ். எம். பிஷ்ருல் ஹாபி 1985-86*
*ஜனாப் எம். எஃப். ஏ. ஷகூர் 1986-90*
*ஜனாப் எம். இஸட். எம். நயீம் 1990-2005*
*திருமதி ஏ. டபிள்யூ. எஸ். மஸாயா 2005-09*
*ஜனாப் எம். எம். என். நள்ரி 2009-20*

*திருமதி எம். எஃப். எப். பஸ்லியா 2020முதல் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.*

*ஐ. எல். எம். மஷ்ஹூர் அவர்கள் பதவி வகித்த காலத்தில் எட்டாம் தரம் சித்தி பெற்று வெளியேறிய மாணவர்கள் பலரை மீண்டும் பாடசாலையில் இணைத்து அப்போதைய சிரேஷ்ட பரீட்யையான* SSC *க்கு தோற்ற வைத்தார். அவர்களுள் 6 மாணவர்கள் சித்தி அடைந்தனர். இவர் சிறந்ததோர் உளவியல் செயற்பாட்டாளராக இருந்தார். இவருடைய காலத்திலும் அல்ஹம்றாவின் கல்வித்தரம் உயர்ந்து நின்றது. சாரணியம், விளையாட்டு, சங்கீதம், நாடகம், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளிலும் இவர் மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.*

*அதிபர் எம்.ஏ.பாரி அவர்களுடைய காலம் பாடசாலையின் மற்றொரு முன்னேற்றப் படியாகும். அதிபர் பாரி அவர்கள் ஸ்பெயின் நாட்டின் இஸ்லாமிய கலாச்சாரத்திற்கு உட்பட்ட அல் ஹம்றா மாளிகையின் பெயரை பாடசாலைக்குச் சூட்டினார். இதன் பின்னர்தான் இலங்கையின் ஏனைய முஸ்லிம் பாடசாலைகளுக்கு இஸ்லாமியப் பெயர்கள் வைக்கப்பட்டன. இவ்வாறு பாடசாலையின் கல்வித் தரத்தை அவர் உயர்த்தியதன் காரணமாக இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து சேர்ந்து கல்வி கற்றனர்.*

*இங்கு வந்த வெளியூர் மாணவர்களுக்காக விடுதிகள் திறக்கப்பட்டன. ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் இங்கு அனுமதிக்கப்பட்டனர். அதிபர் பாரி அவர்கள் ஆங்கில மொழிமூலம் கற்பிப்பதற்காக*

பாடசாலையில் ஆங்கிலப் பிரிவொன்றை ஆரம்பித்ததாகவும் தானும் இப்பிரிவில் படித்து ஆங்கிலம் மூலம் SSC பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்ததாகவும் அதிபர் ஐ. எல். எம். சுஐப் அவர்கள் தனது 'தர்கா நகர்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அதிபர் பாரி அவர்கள் கடமை புரிந்து கொண்டிருக்கும் வேளையிலேயே இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். பதினெட்டு வருட காலமாக அரும்பணியாற்றிய அவர்களுக்காக எமது சமூகத்தின் பிரார்த்தனை என்றென் றும் இருந்து கொண்டே இருக்கும்.

அதிபர் ஐ. எல். எம். சுஐப் அவர்களின் காலத்தில்தான் GCE (A/L) உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. முதல் தடவையிலேயே இரு மாணவர்களுக்கு கலைப்பிரிவில் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு கிடைத்தது.

அதிபர் எம். எம். ஏ. அலவி அவர்களும் தனது காலப் பகுதியில் பாடசாலை அபிவிருத்திக்காக பெரும் தொண்டாற் றியுள்ளார். சிறுவர் சாரண அமைப்பு, நாடகம், சங்கீதம் ஆகிய துறைகளிலும் மாணவர்களை அவர் ஊக்குவித்தார். அதிபர் எம். எப். எம். சகூர் அவர்களும் தனது பதவிக்காலத்தில் தியாக சிந்தனையுடன் செயல்பட்டார்.

அதிபர் எம். இஸட். எம். நயீம் அவர்கள் அதிபர் எம். ஏ. பாரி அவர்களது காலத்து மாணவர். இவரது நிர்வாகத்தில் விசேடமானது என ஒன்றைக் கூறுவதாக இருந்தால் கனிஷ்ட நிலையில் இருந்த அல்ஹம்றாவை இவர் உயர்தர வகுப்புவரை தரம் உயர்த்தினார். சில காரணங்களுக்காக அல்ஹம்றா பலவருடங்கள் கனிஷ்ட பாடசாலையாக வைக்கப்பட்டிருந்தது மிகவும் கவலைக்குரியது. இந்நிலை ஸாஹிரா மகா வித்தியாலயதிற்கும் சில வருட காலம் ஏற்பட்டது.

அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட முன்னர் இருந்த அளுத்கம வீதிய அரசினர் பாடசாலையிலேயே பிள்ளைகள் கற்று வந்தனர். அப்போதே சமூகத்தினர் ஆண் பெண் கலப்பு சூழலை நினைத்துக் கவலைப்பட்டு பெண்களுக்கான தனியான பாடசாலை உருவாக்கம் பற்றிச் சிந்தித்தனர். இதுவே அதிபர் ஐ. எல். எம்.

மஷ்ஹூர் அவர்களது கருத்தாகவும் இருந்தது. இது ஆரம்ப காலத்தில் பயன் அளித்த போதிலும் இன்று சூழல் மாற்றம் கண்டுவிட்டது. பெண்கள் பாடசாலைக்கு பெண் அதிபர், ஆண்கள் பாடசாலைக்கு ஆண் அதிபர் என இருந்து வந்த நிலையும் இன்று நீங்கிவிட்டது.

பாடசாலைக்கான விளையாட்டு மைதானம், அதிபர் விடுதிக்கான காணி என்பவற்றை ஐ. எல். எம். மஹ்மூத் அவர்கள் அன்பளிப்புச் செய்தார்.

2019 இல் திறந்து வைக்கப்பட்ட நஜீப் ஹாஜியார் சிறுவர் பூங்கா அல்ஹாஜ் நஜீப் பின் அமீர் ஆலிம் அவர்களது உதவியினால் நிர்மாணிக்கப்பட்டது. 1994இல் அல்ஹாஜ் ஏ. டபிள்யூ. ஏ. அஸீஸ் அவர்களால் அவரது தந்தை அப்துல் வதூத் லெப்பை அவர்களின் ஞாபகார்த்தமாக பல் சிகிச்சை நிலையம் ஒன்று பாடசாலை வளவுக்குள் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பாடசாலையின் வரலாற்றில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து இங்கு கல்வி கற்றுள்ளனர். இவர்களுள் பலர் கல்வித்துறையில் உயர்ந்த பதவிகளை வகித்துள்ளனர்.

இக் கலாசாலையின் பழைய மாணவர்களில் சிலர்: ஐ. எல். எம். மஷ்ஹூர் (முன்னாள் அதிபர்), ஐ. எல். எம். சுஐப் (முன்னாள் அதிபர்), எம். இஸட். எம். நயீம் (முன்னாள் அதிபர்), எம். ரீ. எம். முஜீப்தீன் (ஸாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபர்), ஏ. முக்தார், ஏ. எல். எம். இஸ்மாயில் (முன்னாள் கல்வி அதிகாரி), எம். எஸ். எம். நிஸாம் (முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர்), திக்குவல்லை கமால் முதலியோர் 1950-2000 காலப்பகுதியில் பாடசாலையில் கல்வி கற்றவர்களே.

பொதுவாக ஓர் ஊரில் இரு பாடசாலைகள் இருந்தால் மாணவர்களுக்கு மத்தியில் போட்டி மனப்பான்மை ஏற்படும். ஒவ்வொருவரும் தம் பாடசாலையைப் பற்றி பெருமை அடிப்பர். தற்காலத்தில் அதிகமானவர்களைப் பொறுத்தமட்டில் அந்த நிலை இல்லாமல் போய்விட்டது.

ஸாஹிராக் கல்லூரியை அரசு சுவீகரிக்க முன்னர் இரு பாடசாலைகளிலும் உயர்தரம் வரை வகுப்புக்கள் இருந்தன.

முயற்சி செய்திருந்தால் இரு பாடசாலைகளையும் ஒரே முகாமுக்குள் கொண்டுவராமல், தரம் குறைக்காமல், தனியான பாடசாலைகளாக இயங்க வைத்திருக்கலாம். எப்படியிருப்பினும் இன்று இரு பாடசாலைகளும் கல்வியில் முன்னேற்றம் கண்டு தம் இலக்கை நோக்கிப் பயணிக்கின்றன.

## 30

# அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் மத்திய கல்லூரி

1939ஆம் ஆண்டுக்கு முன்னர் பெண்கள் அல்ஹம்றா கலவன் பாடசாலையிலேயே கல்வி கற்றனர். அந்தக் காலப்பகுதியில் ஐ எல் எம் மஷ்ஹூர் அவர்கள் அதிபராக இருந்தார். அப்போது இயங்கிக் கொண்டிருந்த கல்விப் பொது நல சங்கம் என்ற அமைப்பு பெண்களை வேறுபடுத்தி தனியாக கற்பிக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டது. அதற்கு அதிபரும் உறுதுணையாக இருந்தார். அரசின் அனுமதியும் கிடைத்தது.

முதலில் அல்ஹம்றாவின் வளாகத்துக்குள்ளேயே புதிய பாடசாலைக்கான கட்டடம் தென்னை ஓலையால் கட்டப்பட்டு இரு பாடசாலைகளையும் பிரிப்பதற்கு இடையில் மதிலும் கட்டப்பட்டது. அந்த அளவுக்கு ஒழுக்கக் கட்டுப்பாடு விடயத்தில் அன்றைய சமூகத்தினர் கவனம் செலுத்தினர். அப் பாடசாலையின் அதிபராக திருமதி நன்சூரா சில காலம் கடமை புரிந்தார். அதன்பின்னர் திருமதி பாத்திமா காலித் அதிபராகப் பதவியேற்றார். அவர் பயிற்சி பெற்ற ஓர் ஆங்கில ஆசிரியர். அவரது வருகையோடு பெண் பாடசாலை கட்டம் கட்டமாக வளர்ச்சி பெற்றது.

1945ஆம் ஆண்டில் தர்கா நகர் மரிக்கார் வீதியில் (யட்டதொல வீதியில்) இருந்த ஏ. ஏ. எம். ஹனீபா அவர்களுக்குச் சொந்தமான வீட்டை அரசு பொறுப்பேற்று பெண்கள் கல்லூரியாக மாற்றியது.

அன்றைய சூழலில் தமது பெண் பிள்ளைகள் கல்லூரி சென்று உயர்தர வகுப்புவரை படிக்கத் தேவையில்லை என்ற உணர்வில் அதிகமான பெற்றோர் இருந்தனர். அதனால் பெற்றோரைச் சந்தித்து நிலைமையை விளக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்காக அதிபர் தனது தலைமையில் ஏ. ஆர். முஹம்மத், அல்ஹாஜ் ஐ. எல். எம். மஹ்மூத், அல்ஹாஜ் எம். ஏ. பதாஹ், அதிபர் ஐ. எல். எம். மஷ்ஹூர், ஜனாப் டி. எல். எம். ஜிப்ரி மற்றும் சிலருடன் ஒரு குழுவை அமைத்து வீடு வீடாகச் சென்றுள்ளார்.

சில வீடுகளுக்குச் சென்ற போது அங்குள்ளவர்கள் கதவுகளை மூடிக் கொண்டதாகவும் தட்டியும் திறக்கவில்லை என்றும், சில இடங்களில் "பெண்பிள்ளைகளைச் சீரழிக்க வந்துள்ளீர்கள்" என்ற குரல் வந்ததாகவும், இன்னும் சில இடங்களில் நல்ல வரவேற்புக் கிடைத்ததாகவும் தெரிய வருகின்றது.

பாடசாலையின் ஆரம்ப தினமன்று 40க்கும் குறைவான மாணவிகளே பாடசாலைக்குச் சமுகமளித்திருந்தனர். எனினும் முதல் மாதத்திலேயே அந்த எண்ணிக்கை 150ஐ எட்டிப் பிடித்துள்ளது.

1947 ஆம் ஆண்டு இலங்கையின் முதல் அமைச்சரவையில் கல்வி மந்திரியாக இருந்த திரு சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா அவர்கள் இப்பாடசாலையை ஒரு மத்திய கல்லூரியாகத் தரம் உயர்த்தினார். அதன் பின்னர் இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் கல்வியை நாடி இப்பாடசாலைக்கு அதிகமானோர் வருகை தந்தனர். இவர்கள் தங்கிப் படிப்பதற்கு விடுதி வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. சில வருடங்கள் கழித்து கொடைவள்ளல் நளீம் ஹாஜியார் அவர்கள் இக் கல்லூரிக்கான விடுதி கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்தார்.

மாணவிகளின் உயர் தரக் கல்விக்காக அதிபர் பாத்திமா காலித் அவர்கள் விஞ்ஞான ஆய்வு கூடம், மனையியல் கூடம், பல வகுப்பறைகள் கொண்ட பல மாடிக் கட்டடம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் அரசின் உதவியால் வெற்றி கண்டன.

அவர்களின் காலத்தில்தான் பெண்பிள்ளைகளின் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காக அரசின் உதவியால் பாடசாலையின் பின்பகுதியில் விசாலமான மைதானம் ஒன்று அமைக்கப்பட்டது. அவரது காலத்தில் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைகளில் சித்தி பெற்ற பலர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவானார்கள். அவர்கள் பயிற்சி பெற்று ஆசிரியர்களாக வெளியேறினர். தர்கா நகர் மற்றும் வெளியிடங்களில் சேவை செய்யும் ஆசிரியர்களில் அதிகமானோர் அங்கு கல்வி கற்றவர்களாக இருக்கின்றனர். பலர் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகவும் உள்ளனர். தர்கா நகரின் பெண்கள் கல்வி வரலாற்றில் அதிபர் பாத்திமா பிந்தாரா காலித் அவர்களின் கல்விப்பணி காலத்தால் அழியாதது. அவருக்காக நாம் பிரார்த்திப்போம்.

அவர் ஓய்வு பெறும்போது ஐந்தாம் வகுப்புக்கு உட்பட்ட மாணவர்களுடன் சேர்த்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். சுமார் 35 ஆசிரியர்கள் கடமை புரிந்தனர். அதன் பிறகு திருமதி ஏ. பி. எம். ஹுஸைன் அவர்கள் அதிபராக சில மாதங்கள் இருந்தார்.

அதன் பிறகு 1977இன் நடுப்பகுதிவரை சி. வேலுப்பிள்ளை அதிபராக இருந்தார். இந்தப் பாடசாலையில் அதிபராக இருந்த ஒரே ஒரு தமிழ்ப் பெண்மணி இவராவார். அதன்பிறகு 1981 வரை திருமதி எஸ். எம். நாமிஸ் அதிபராக இருந்தார். 1981 முதல் 1982 முற்பகுதிவரை திருமதி பி.எம். அனஸ் அதிபராக இருந்தார். அதன் பிறகு 1988 வரை ஏழு வருடங்களாக திருமதி வஸீரா தாஹா அதிபராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். இவரது காலத்தில்தான் இன்று முஸ்லிம் மாணவிகள் அணியும் பர்தா சீருடை அதிபரின் உதவியோடு தர்கா நகர் பெண்கள் மகளிர் மத்திய கல்லூரியிலும் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

1986இன் இறுதிக் காலப்பகுதியில் இருந்து 2002 வரை திருமதி ஃபிர்தவ்ஸ் பாஸி அவர்கள் அதிபராகப் பணியாற்றினார். இவர் முன்னாள் அதிபர் திருமதி காலித் அவர்களின் மகள். இவர் ஓர் பட்டதாரி ஆசிரியை. கல்வித் துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றவர். இவருடைய காலத்தில் இரு மாடிக் கட்டடம் ஒன்றும் கேட்போர் கூடமும்

*புதிதாகக் கட்டப்பட்டன. இவருடைய பதவிக்காலத்தில் துந்துவையைப் பிறப்பிடமாகக் கொண்டு தர்கா நகரில் மணம் புரிந்திருந்த ஏ. ஜி முஹம்மத் ஆகில் அவர்கள் பாடசாலைக்கு பௌதீக வளங்களைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளுக்கு உதவியாக பெரும் பணி புரிந்தார்.*

*1996 ஜூலை 6ஆம் திகதி பாடசாலை ஒரு தேசிய பாடசாலையாகத் தரம் உயர்வு பெற்றது. இதனை அன்று இப்பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்தவர் அன்றைய களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு எதிரிவீர பிரேமச்சந்திர ஆவார். இதனை அவர் மூலம் சாதித்துக் கொள்வதற்கு உதவியாக இருந்தவர்கள் ஹாஜிகளான ஏ. டபிள்யூ. எம். இஹ்ஸான், ஹஸன் மரிக்கார், ஏ. எம். ஏ. சுல்பிகார் ஆகியோராவர்.*

*திருமதி ஃபிர்தவ்ஸ் அவர்களும் தனது தாயைப் போல் நம் சமூகத்திற்காக அதன் கல்வி நலன் கருதி அரும்பாடுபட்டார். அவர் ஓய்வு பெற்றுச் சென்ற பின்னர் திருமதி ஹஸ்மின் அவர்கள் அதிபராகப் பதவியேற்றார். அதன் பின் 2002ல் இருந்து 2012 வரை ஜனாப் எம். ரீ. எம். ஹம்ஸா அவர்கள் அதிபராகப் பணியாற்றினார்.*

*ஜனாப் எம். ரீ. எம். ஹம்ஸா அதிபராகப் பதவியேற்றதன் பின்னர் கற்றல் கற்பித்தல் மற்றும் விளையாட்டுத் துறைகளில் இக்கல்லூரி உயர்ந்த தேர்ச்சி மட்டங்களை அடைந்து களுத்துறை வலயத்தில் முன்னணி நிலையைப் பெற்றது. அகில இலங்கை ரீதியாகவும் வலய மாவட்ட ரீதியாகவும் பல போட்டிகளில் பங்குபற்றி பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளது.*

*2009ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 84% மாணவர்கள் சித்தி பெற்று வலயத்தில்* 1AB *தமிழ் மொழி மூல பாடசாலைகளில் முதலிடத்தையும், அனைத்து மொழிப் பாடசாலைகளில் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளது. 2010ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை முடிவுகளின்படி பல்கலைக்கழகங்களில் மருத்துவம், யூனானி மருத்துவம், விஞ்ஞானம், மருந்தகவியல் போன்ற துறைகளுக்கும் கல்வியியல் கல்லூரிகளுக்கும்* 14 *மாணவிகள் தகுதி பெற்றனர்.*

2012இல் அதிபர் ஹம்ஸா அவர்கள் இடமாற்றம் பெற்ற பின்னர் திருமதி பாத்திமா ரிஸ்னா 2017 வரை அதிபராக இருந்தார். இக்காலப் பகுதியிலும் ஜி.சீ.ஈ. சாதாரண தர, உயர்தர பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றனர். அதன் பின்னர் 2017-19 காலப்பகுதியில் ஜனாப் எம். ஜாபீர் அதிபராக இருந்தார்.

இறுதியாக 28.02.2020இல் ஏ. ஏ. எம். பாயிஸ் புதிய அதிபராகப் பதவியேற்றுள்ளார். இவர் பதவியேற்ற பின்னர்தான் அல்ஹாஜ் எம். எஸ். எம். அஸ்லம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அவருக்கு அரசினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் அதிபருக்கான விடுதி கட்டப்பட்டது. அல்ஹாஜ் அஸ்லம் அவர்களே இந்த அதிபர் விடுதியைத் திறந்து வைத்தார்.

அதிபர் ஏ. ஏ. எம். பாயிஸ் பதவி ஏற்றது முதல் பாட சாலையின் கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகள், நிர்வாகம், பௌதீகவள கட்டமைப்புக்கள் முதலிய வற்றின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்குமான அடித் தளம் இடப்பட்டுள்ளது. இதனால் பாடசாலைச் சமூ கத்தின் நன்மதிப்பை அவர் பெற்றிருக்கிறார். விடுமுறை நாட்களிலும் ஓய்வு நேரங்களிலும் சிற்றூழியர்களுடன் இணைந்து பௌதிக வளங்களைச் சீர்படுத்தி பாடசாலைத் தோட்டத்தில் பணியாற்றி வருவது இவரிடம் காணப்படும் ஒரு சிறப்பம்சமாகும். இக் கல்லூரியின் உப அதிபராக எம். எச். எம். பர்ஹான் (நளீமி) கடமையாற்றுகிறார்.

தர்கா நகர் முஸ்லிம் மகளிர் தேசிய கல்லூரி பற்றி மேலதிகமாக ஒரு கருத்தை முன் வைப்பதாக இருந்தால் 75 வருடங்களுக்கு முன்னர் நம் ஊர் தலைவர்கள் திருமதி காலித் அவர்களை அதிபராக அமர்த்தி முஸ்லிம் மகளிர் மத்திய கல்லூரியை இந்நாட்டு முஸ்லிம் பெண்களின் கல்விக்குரிய ஒளிவிளக்காக பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்று கண்ட கனவு, இன்று தேய்பிறையாகிக் கொண்டிருக்கிறது. இதற்கான காரணம் 75 வருடங்களுக்கு முன்னர் ஊர் பெண்களின் வளம் ஒரே இடத்தில் திரண்டு இருந்தது. இன்றோ அது மூன்று பாடசாலைகளுக்கிடையில் பங்கு போடப்பட்டுள்ளது.

# 31

# ஸாஹிராக் கல்லூரி

*1942இல் இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்து கொண்டிருந்த போது நாட்டின் தென்பகுதி மாணவர்கள் கொழும்புக்குச் சென்று கல்வி கற்பதில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக அவர்களின் கல்வியைத் தொடரச் செய்வதற்கென அளுத்கம ஸாஹிராக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இக்கல்லூரி கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் முதலாவது கிளையாக இருந்தது. கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபராக இருந்த ஜனாப் ரீ. பீ. ஜாயா அவர்களது அயராத முயற்சியால் இது சாத்தியமாகியது.*

*இப்பாடசாலையின் முதல் அதிபராக ஜனாப் எம்.பி. நூர்தீன்* (B.A. London) *அவர்கள் நியமிக்கப்பட்டார். ஆரம்பத்தில் இது நகரும் பாடசாலையாக தர்கா நகர் ஏ.ஏ.ஏ. ஹமீத் அவர்களின் இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1943இல் ஜனாப் எம். எஸ். எம். ஹத்தாத்* B.A. *இப்பாடசாலையின் உதவி அதிபராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது 49 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் இருந்தனர். 1944-48 காலப்பகுதியில் திரு ரீ. பி. எஸ். லக்சனா அவர்கள் உதவி அதிபராகப் பதவியேற்றார். அவருடைய காலத்தில் 39 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் இருந்தனர். தரம் 5 வரைதான் வகுப்புகளும் நடைபெற்றன. 12.9.1945இல் அளுத்கம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அருகாமையில் அல்ஹாஜ் ஏ. எல். ஏ. ஹமீத் மரிக்கார் அவர்களின் காணியில் அமைக்கப்பட்ட ஸாஹிராவின் புதுக் கட்டடம் கௌரவ அமைச்சர் சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதனைக் கட்டுவதற்கு 22,499 ரூபாய் செலவாகியுள்ளது.*

*1946 ஜூலை மாதத்தில் முதன்முதலாக இல்ல விளையாட்டுப் போட்டி கல்லூரிக்கு அருகாமையில் நடைபெற்றது. அதில் முதலாம் இடத்தைப் பெற்ற இல்லத்துக்கு பதாஹ் சவால் கேடயம் வழங்கப்பட்டது.*

*01.06.1947இல் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் கிளை என்ற நிலையிலிருந்து விடுபட்ட இக்கல்லூரி ஒரு தனியார் பாடசாலையாக அரசில் பதிவு செய்யப்பட்டது. அக்காலகட்டத்திலும் திரு லக்சனா அவர்கள்தான் அதிபராக இருந்தார்.*

*1948இல் பேருவளையைச் சேர்ந்த ஜனாப் எஸ். எல். எம். ஷாபி மரிக்கார்* B.A. *அவர்கள் அளுத்கம ஸாஹிராவின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது வருகையின் பின்னர் கல்லூரி தீவிர வளர்ச்சியைக் கண்டது. 1949இல் கல்லூரியில் விடுதி வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதிபர் தனது சொந்தப் புத்தகங்களைக் கொண்டு வாசிகசாலையை உருவாக்கினார். அத்தோடு காலை மாலை வகுப்புகளையும் ஏற்பாடு செய்தார். 1948இல் ஆங்கில, சிங்கள, தமிழ் பிரிவுகளில் கல்வி கற்ற மாணவர்களில் 11 பேர் சிறப்புச் சித்தி பெற்றார்கள். இக்காலத்தில் கல்லூரியில் சாரணர் படையும் அமைக்கப்பட்டது.*

*19.11.1950இல் ஸாஹிராவுக்கான புது கட்டடம் கட்டுவதற் காக கட்டட நிதிக் குழு அமைக்கப்பட்டது. குழுவின் தலைவராக ஏ. ஆர். முஹம்மத் அவர்களும் செயலாளராக அதிபர் எஸ். எல். எம். ஷாபி மரிக்கார் அவர்களும் பொருளாளராக யு. எல். எம். மஹ்தூம் அவர்களும் நியமிக் கப்பட்டனர். புதுக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான சுமார் இரண்டரை ஏக்கர் காணியை ஏ. ஏ. ஏ. ஹமீத், ஐ. எல். எம். மஹ்மூத், துந்துவையைச் சேர்ந்த அல்ஹாஜ் எம். எல். அப்துல் ஜப்பார் ஆகியோர் அன்பளிப்புச் செய்தனர்.*

*09.12.1951இல் கல்லூரியின் புதுக் கட்டடத்திற்கான அடிக்கல் அன்றைய பிரதமர் திரு டி. எஸ். சேனாநாயக்க அவர்களால் நடப்பட்டது. கட்டட நிர்மாணத்திற்காக 2 லட்சம் ரூபாய்கள் தேவைப்பட்டன. பாடசாலையின் பழைய கட்டடம் அரசுக்கு விற்கப்பட்டதன் மூலம் 23 ஆயிரம் ரூபா பெறப்பட்டது. இது தவிர ஊர்மக்கள் தனவந்தர்கள் போன்றோரின் நன்கொடை மூலமும் சீட்டிழுப்பு, நாடகங்கள் போன்ற வேறு வழிகளிலும் நிதி திரட்டப்பட்டது. 23.9.1954இல் கௌரவ பிரதமர் ஸர். ஜோன் கொத்தலாவல அவர்களால் புதிய கட்டடம் வெகு விமர்சையாகத் திறந்து வைக்கப்பட்டது.*

*புதுக் கட்டடத்திற்கு அருகாமையில் உள்ள காணியை யூ. எல். எம். மஹ்தூம், சமாதான நீதவான் எம். பி. சாபி, ஓ. எல். எம். அப்துல்லாஹ், ஓ. எல். எம். ஏ. தாஹிர், ஓ. எல். எம். ஏ. வாஹித் ஆகியோர் அன்பளிப்புச் செய்தனர். அந்தக் காணியிலேயே பிரார்த்தனை மண்டபம் கட்டப்பட்டது. 1957-58 காலப்பகுதியில் 'ஸஹிரியன்' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. உயர் பாடசாலைச் சான்றிதழ்* (HSC) *விஞ்ஞான, கலை வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன.*

*1961இல் ஸாஹிராக் கல்லூரி அரசாங்கத்தால் பொறுப் பேற்கப்பட்டது. தர்கா நகரில் செல்வாக்கு மிக்க நிலையில் வளர்ந்துவந்த ஒரு தனியார் பாடசாலை அரசின் வசமானது அதன் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட பலருக்குத் துயர் மிகுந்த நிகழ்வாக அமைந்தது. அத்தோடு எஸ். எல். எம். ஷாபி மரிக்கார் அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.*

*தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி கல்வித் துறையில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் பலமாகக் காலூன்றி நின்றது. விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், விளையாட்டு மைதானம் என்பன உருவாக்கப்பட்டிருந்தன. களுத்துறை மாவட்டத்தில் லெதர் பந்து கிரிக்கெட் விளையாடும் ஒரேயொரு முஸ்லிம் பாடசாலையாக ஸாஹிரா திகழ்ந்தது. உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், டேபிள் டென்னிஸ் போன்ற விளையாட்டுக்கள் இங்கு விளையாடப்பட்டன. களுத்துறை மாவட்ட உதைப்பந்தாட்ட சம்பியன் விருதையும் 1956இல் ஸாஹிரா வென்றது. தர்கா நகர் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கும் அறிவு விருத்திக்கும் அதிபர் ஷாபி மரிக்கார் தன்னால் முடிந்ததை எல்லாம் செய்தார். ஐம்பது மாணவர்களையும் ஆசிரியர்களையும் அழைத்துக்கொண்டு தனது தலைமையின் கீழ் 800 மைல் கொண்ட சுற்றுலா ஒன்றையும் அவர் மேற்கொண்டார்.*

*இவரது காலப்பகுதியின் ஆரம்பத்தில் தர்கா நகர் அக்பர் ஆசிரியரின் தந்தை ஏ. ஏ. ஏ. ஜிப்ரி அவர்கள் உதவி அதிபராகப் பணியாற்றினார். அதன் பின்னர் இரசாயனவியல் பட்டதாரியான எஸ். ஜி. சாமுவேல் உதவி அதிபராக இருந்தார். இவர் அரசு பொறுப்பேற்றதன் பின்னரும் அதிபர்*

சுஐப் அவர்களின் காலத்திலும் நீண்டகாலம் உப அதிபராகப் பணியாற்றினார்.

ஜனாப் ஷாபி மரிக்காரின் காலத்தில் வட பகுதியைச் சேர்ந்த திறமைமிக்க தமிழ் ஆசிரியர்கள் பலர் ஸாஹிராவில் பணிபுரிந்தனர். இவர்களுள் செல்விகளான சின்னத்தம்பி, செல்லத்துரை, சின்னத்துரை, மாணிக்கம், திரு நடராஜா, திரு கந்தையா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களோடு ஸியாத்மரிக்காரின்மகன்ஜனாப்முயீன்மரிக்கார்,ஹுஸைமத் அவர்களின் தந்தை ஜனாப் ஏ.வி.எம். ஹுஸைன் ஆகியோரும் இருந்தனர். மாவனல்லையைச் சேர்ந்த மௌலவி ஹஸன் லெப்பை அவர்கள் அரபு பாடம் கற்பித்ததோடு கல்லூரியின் தலைமை ஆசிரியராகவும் இருந்தார்.

கல்லூரியின் பிரதான கட்டடம் இஸ்லாமிய கட்டடக் கலையைப் பிரதிபலிப்பதாக அழகான தோற்றத்துடன் மிளிர்கிறது. இங்கு கல்வி கற்று வெளியேறியவர்கள் நாடு முழுவதும் உயர்ந்த நிலையில் இருக்கின்றனர். அதிபர் ஷாபி மரிக்கார் அவர்களின் காலத்தில் படித்த மாணவர்கள் நாட்டில் பல்வேறு துறைகளிலும் உயர் பதவிகளை வகித்துள்ளனர்.

ஸாஹிராக் கல்லூரியை அரசு பொறுப்பேற்றதும் அதன் புதிய அதிபராக ஏ. இஸட். ஒமர்தீன் பதவியேற்றார். 01.01.1963 முதல் ஸாஹிராக் கல்லூரியும் தர்காநகர் அல்ஹம்றா மகா வித்தியாலயமும் ஒன்றிணைக்கப்பட்டதோடு 1963-65 காலப்பகுதியில் ஸாஹிரா கல்லூரி ஐந்தாம் வகுப்பு வரை கல்வி வழங்கும் கனிஷ்ட பாடசாலையாக மாற்றப்பட்டது. அதன் தலைமை ஆசிரியராக ஜனாப் எம். எம். அபுல் ஹஸன் (ஸாலி மாஸ்டர்) கடமையாற்றினார்.

01.01.1966 முதல் ஸாஹிரா கல்லூரி மீண்டும் தரம் 9 முதல் உயர் வகுப்புக்கள் வரையுள்ள சிரேஷ்ட பாடசாலையாக மாற்றப்பட்டது. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வகுப்புகள் நடத்தப்பட்டன. ஸாஹிரா வின் அதிபராக ஜனாப் ஐ, எல், எம், சுஐப் கடமையாற்றினார். அப்போது இப்பாடசாலையில் 220 மாணவர்களும் 20 ஆசிரியர்களும் கடமையாற்றினர்.

அல்ஹாஜ் ஐ. ஏ. காதர், அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் ஆகியோர் பேருவளை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது தங்களால் முடிந்த அளவு அரசு உதவிகளை இப்பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்தனர். 13.10.1970இல் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இக் கட்டடத்திற்கான நிதியுதவியை அல்ஹாஜ் எம்.ஐ.எம் நளீம் அவர்கள் வழங்கினார்கள்.

1970 முதல் இங்கு 6ஆம் 7ஆம் 8ஆம் தரங்கள் ஆரம் பிக்கப்பட்டன. அத்தோடு இரு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் ஒன்றும் அரசினால் அமைக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டு கைத்தொழில் பயிற்சிக் கூடம், விவசாய விஞ்ஞான கூடம், வர்த்தகப் பிரிவுக்கான கட்டடம் என்பன அரச உதவியால் கட்டப்பட்டன.

1987இல் ஸாஹிரா கல்லூரி கொத்தணி தலைமைப் பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டது. அதிபர் ஐ. எல். எம். சுஐப் அவர்கள் 10.10.1987இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் தனது பதவிக் காலத்தில் கல்வி மற்றும் விளையாட்டு துறைகளுக்கு அளப்பரிய பணியாற்றியுள்ளதுடன் ஒழுக்கம் மிக்க மாணவ சமுதாயம் ஒன்றை உருவாக்கவும் பெருமுயற்சி செய்தார்.

அவரை அடுத்து அல்ஹாஜ் ஏ. டபிள்யூ. எம். அஜ்வாத் பதில் அதிபராகக் கடமை புரிந்தார். 18.9.1989இல் ஜனாப் எம். ஆர். மாலிக் அதிபராகப் பதவியேற்று நான்கு மாதங்கள் கடமை புரிந்தார். அதன் பின்னர் 1989 முதல் 1994 வரை எம். எல். ஏ. அப்துல் அஃலா அவர்களும் 1994 முதல் 2006 வரை எம். பி. எம். அலவி அவர்களும் 2007 முதல் 2011 வரை எம். ரீ. எம். முஜீபுத்தீன் அவர்களும் அதிபராகக் கடமை புரிந்தனர். அடுத்து பிரதி அதிபராக இருந்த எம். எஸ். எம். யெஸ்மின் அவர்கள் இரண்டு மாத காலம் அதிபராக இருந்தார்.

அவரைத் தொடர்ந்து 4.10.2012 வரை யு. எல். எம். ராஸிக் அவர்கள் அதிபராகப் பதவி வகித்தார். அவரது ஓய்வைத் தொடர்ந்து மீண்டும் அல்ஹாஜ் எம். எஸ். எம். யெஸ்மின் அதிபராகப் பதவி ஏற்றார்.

*17.9.2015இல் எம். ரீ. எம். ஹம்ஸா அவர்கள் அதிபராகப் பதவியேற்றார். அவர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து 21.03.2017. முதல் இன்றுவரை திருமதி எம். என். எப். நிஸ்ரின் அவர்கள் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.*

*அதிபர் ஜனாப் எம்.எல்.ஏ. அப்துல் அஃலா அவர்கள் தனது பதவிக்காலத்தில் பாடசாலையின் அபிவிருத்திக்காகவும் வளர்ச்சிக்காகவும் பெரும் முயற்சிகளை எடுத்துள்ளார். அவருடைய காலத்தில்தான் 1993இல் ஸாஹிராக் கல்லூரி தனது 50ஆவது ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடியது. 28.10.1993இல் 172வது மஹாபொல கண்காட்சி ஸாஹிராவில் ஆரம்பமாகியது.*

*ஜனாப் ஏ. பி. எம். அலவி அவர்களின் பதவிக்காலத்தில் அதிபரினதும் ஆசிரியர்களினதும் அயராத முயற்சியினால் பாடசாலையிலிருந்து விஞ்ஞானம், வணிகம், கலைத் துறைகளிலிருந்து 60 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க பாரிய சாதனை யாகும். 1997ஆம் ஆண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ஹஸன் மரிக்கார் அவர்களதும் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களினதும் ஒத்துழைப்புடன் பல லட்ச ரூபா செலவில் 4 வகுப்பறைகளை கொண்ட தற்காலிகக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.*

*அல்ஹாஜ் எம்.ரீ.எம். முஜீபுத்தீன் பதவியில் இருந்தபோது பாடசாலையின் அபிவிருத்திக்காகவும் மாணவ-மாணவிகளின் வளர்ச்சிக்காகவும் கடுமையாக உழைத்தார். 26. 9. 2008இல் மேல் மாகாண சபை முதலமைச்சர் கௌரவ ரெஜினோல்ட் குரே அவர்களின் ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் 12 வகுப்பறைகளை கொண்ட மூன்று மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.*

*நீண்டகாலமாக மதில் அமைக்கப்படாமல் இருந்த 200 அடி நீளமான பகுதியில் பதினொரு அடி உயரமுள்ள மதில் நிர்மாணிக்கும் வேலை மூன்றரை இலட்சம் ரூபா செலவில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் பழைய மாணவர்களினதும் உதவியுடன் நிறைவேற்றப்பட்டது.*

*ஸாஹிராக் கல்லூரி, களுத்துறை மாவட்டத்தில் 13 வயதுக்கு கீழ்பட்ட பிரிவில் உதை பந்தாட்டச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. முஹம்மத் அரபாத் என்ற மாணவன் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டக் குழுவில் ஸவுதி அரேபியாவுக்குச் செல்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டார். 15 வயதுக்கு உட்பட்ட பிரிவில் முகம்மது ரஹ்மத் என்ற மாணவன் இலங்கை உதைபந்தாட்ட குழு சார்பில் ஈரான் உதைபந்தாட்டக் குழுவோடு விளையாடத் தெரிவுசெய்யப்பட்டு ஈரான் பயணமானார். அதிபர் முஜீபுத்தீன் அவர்களுடைய காலப்பகுதியில் விஞ்ஞான, வணிக, கலைத் துறைகளில் 27 மாணவ மாணவிகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.*

*இவருடைய பதவிக்காலத்தில்* Zam Gems *நிறுவனத்தின் உரிமையாளரும் சமூக சேவையாளருமான தேசபந்து அல்ஹாஜ் இஸட். ஏ. எம். ரிபாய் அவர்களின் உதவியால் ஸாஹிராக்கல்லூரியில் மூன்று மாடிக்கட்டடம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்கான உதவியைப் பெற்றுக்கொள்ள அதிபரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் பெருமுயற்சி எடுத்து கல்வித் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றனர். 12.02.2012இல் அதன் நிர்மான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் திறப்பு விழா 21.01.2013இல் அதிபர் எம். எஸ். எம். யெஸ்மின் அவர்களின் காலத்தில் இடம்பெற்றது. விமர்சையாக நிகழ்ந்த இவ்விழாவில் அல்ஹாஜ் இஸட். ஏ. எம். ரிபாய் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தனது கரங்களாலேயே புதிய மூன்று மாடிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். அதிபர், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், பழைய மாணவர்கள், உலமாப் பெருமக்கள், கல்விமான்கள், ஊர் மக்கள் எனப் பலரும் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.*

*தற்காலத்தில் அதிபர் திருமதி எம். என். எப். நிஸ்ரின் அவர்களது தலைமையில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மேலும் முன்னேற்றம் அடைந்துள்ளன. 2017 முதல் 2019 வரையான காலத்தில் விஞ்ஞானம், வணிகம், விவசாயம், கலைத்துறை, இஸ்லாமிய கல்வித்துறை போன்ற துறைகளுக்கு*

ஸாஹிரா கல்லூரியிலிருந்து 36 மாணவ மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர். தரம் 1 முதல் 5 வரையான ஆரம்ப வகுப்புக்களைக் கொண்ட ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை தனியாகப் பிரிக்கப்பட்டு அதற்கு ஜனாப் எம். எஸ். எம். ஸக்வான் அதிபராகக் கடமையாற்றுகின்றார்.

# 32

## தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி

1935ஆம் ஆண்டு இலங்கையின் முதல் முஸ்லிம் பாடசாலைப் பரிசோதகரான பேருவளை மருதானையைச் சேர்ந்த ஜனாப் எம். ஏ. எல். எம். பி. முஹம்மது (பக்கீர் மாஸ்டர்) அவர்கள் மொரட்டுவை முதல் திஸ்ஸமஹாராம வரையான பிரதேச எல்லைக்குள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையொன்றை உருவாக்க வேண்டுமென்ற முனைப்போடு இருந்தார். இவ்வேளையில் தர்கா நகரைச் சேர்ந்த அல்ஹாஜ் ஐ. எல். எம். மஹ்மூத் அவர்கள் ஐந்து ஏக்கர் காணியை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்காக வழங்கியதால் தர்கா நகரில் கலாசாலை நிறுவப்பட்டது.

இன்று தேசிய கல்வியற் கல்லூரியாகச் செயற்படும் இக்கல்வி நிலையம் 01.01.1941இல் அளுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரி சேர் ராசிக் பரீத், டாக்டர் எம். சீ. எம். கலீல், ரீ. பீ. ஜாயா ஆகியோர் அரசுடன் இணைந்து செய்த அயராத முயற்சியினால் உருவாகியது.

இக்கல்லூரி 1941 முதல் 1957 வரையான 16 வருடங்களாக முஸ்லிம் ஆண்களுக்கான ஆசிரியர் பயிற்சியை வழங்கியது. அல்ஹாஜ் ஐ.எல்.எம்.மஷ்ஹூர் அவர்கள் ஸ்தாபக அதிபராக 01.11.1941 முதல் 30.12.1961 வரை சேவையாற்றியுள்ளார். 1958 முதல் பெண்களுக்குரிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையாக மாற்றப்பட்டு இன்று வரை அறுபது வருடங்களுக்கு மேலாக பெண்களுக்குரிய கல்லூரியாக இது மிளிர்கிறது.

2001ஆம் ஆண்டு தர்காநகர் தேசிய கல்வியற் கல்லூரி என்ற பெயரில் இது மேம்படுத்தப்பட்டது. இக்கல்லூரியின் முதலாவது பீடாதிபதியாக 2011 ஜூன் வரை திருமதி எம். எப். நூருல் ஹாரிஜா அவர்கள் சிறப்பாகக் கடமையாற்றினார். தேசிய கல்வியியற் கல்லூரியாக தோற்றம் பெற்ற போது 75 பயிலுனர்களும் ஆறு விரிவுரையாளர்களும் அங்கு சேவையாற்றினர்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையாக இக்கல்லூரி இயங்கிய காலத்தில் இதன் அதிபர்களாக ஐ. எல். எம். மஷ்ஹூர் அவர்களுக்குப் பின்னர், 2001இல் தேசிய கல்வியற் கல்லூரி யாக மேம்படுத்தப்படும் வரை ஜனாப் ஏ. ஏ. ஏ. ஜிப்ரி, திருமதி ஜாரியா மன்சூர், திருமதி ஹலீமா கமால்தீன், திருமதி சகூர், திருமதி அஸ்ஹாரியா நுபைல், திருமதி எம். பி. ஸக்கரியா, திருமதி சுபைதா காஸிம், ஜனாப் ஏ. எச். ஏ. வாஹித், திருமதி பௌஸியா நியாஸ் ஆகியோர் அதன் அதிபர்களாக இருந்துள்ளனர்.

இத் தேசிய கல்வியற் கல்லூரிக்கான மாணவர் சேர்ப்பு முறை முஸ்லிம் பெண்கள் 90% உம், தமிழ் பெண்கள் 10% உம் என வரையறுக்கப்பட்டுள்ளது. அதிலும் மேல் மாகாணம், தென் மாகாணம் ஆகியவற்றில் வாழும் தமிழ் இனத்தவர்களே சேர்க்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இக்கல்லூரியின் பீடாதிபதியாக டீ. அறிவழகன் பணி ஆற்றினார். மேலும் நிதி நிர்வாக உப பீடாதிபதியாக மௌலவி ஏ. ஆர். எம். ஸில்மி அவர்களும், கல்விசார் உப பீடாதிபதியாக திரு கணேஸ்வரன் அவர்களும், தொடர் கல்வித்துறை உப பீடாதிபதியாக ஜனாப் பி. ரிஸ்வி அவர்களும் கடமையாற்றினர்.

கல்லூரியின் தற்போதைய விரிவுரையாளர் குழாமில் 20 உறுப்பினர்கள் உள்ளனர். மூன்று குழுவினரும் சேர்ந்து பயிலுனர்கள் 526 பேர் உள்ளனர். இங்கு 1999 முதல் ஆசிரியர் வாண்மைத்துவப் பயிற்சி நிலையமும் இயங்கி வருகின்றது. ஏனைய கல்வியற் கல்லூரிகளைப் போலன்றி இங்கு பெரும்பாலும் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக் கால பழமையான கட்டடங்களே காணப்படுகின்றன.

# 33

# நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம்

(Najeeb Hajiar Education Center)

*தர்கா நகரில் இன்று காலத்தின் தேவையாக நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் தன்னை முன்னிருத்திக் கொண்டு சமூகப் பணிகளைச் செய்து வருகின்றது.*

*தர்கா நகரின் பிரதான வீதியிலிருந்து லோட்டஸ் வீதியில் சுமார் 250 மீட்டர் தூரத்தில் 25 பேர்ச்சஸ் நிலத்தில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டடத்தில் இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது.*

*இக்கல்வி நிறுவனம் ஆரம்பத்தில் மூன்று அம்சங்களைக் கொண்டிருந்தது.*

*1. மார்க்கக் கல்வி சம்பந்தமான சில விடயங்கள்*

*2. உலக அறிவியல் சம்பந்தப்பட்ட கல்வி ஞானத்தை வளர்ப்பதற்கான வாசிகசாலை*

*3. சமூக சேவைப் பணிகளுக்கான திட்டமிடல் மையம்.*

*சுயமாக உழைக்க ஆரம்பித்து முதன் முதலில் சிறிய அளவில் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்த நஜீப் ஹாஜியார் அவர்களுக்கு 1999ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிறைய சமூ கப்பணிகள் செய்வதற்கான வாய்ப்புக்கள் கிட்டின.*

*அதே ஆண்டில் அவர் கற்ற காலி மத்ரஸாவின் புனர்நிர்மானத்திற்கான பண உதவி, 2001இல் தர்கா நகர் தெருவுப்பள்ளி மூன்று மாடி கட்டட நிர்மாணப் பணி, 2004இல் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் புதுக் கட்டடப் பணி போன்றவற்றை, தான் அறிந்த, தன் மீது பூரண நம்பிக்கை உடைய, நன்கொடையாளர் ஒருவரின் உதவியால் செய்துமுடித்தார்.*

Najeeb Hajiar Education Center (NEC)*க்கான அடிக்கல் நாட்டு வைபவம் 17.6.2013இல் நடைபெற்றது. அதே தினமன்று அலிஃப் சர்வதேசப் பாடசாலை மண்டபத்தில்*

நஜீப் ஹாஜியாரின் வாழ்க்கைச் சரிதை அடங்கிய 'நெஞ்சம் நிறைந்த நஜீப் ஹாஜியார்' என்ற நூல் வெளியிடப்பட்டது.

இந்தக் கட்டடப் பணிகள் ஒன்றரை வருட காலத்தில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு 08.03.2015இல் அது சிறப்பாகத் திறந்துவைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவில் அபூதாபி நாட்டுத் தூதுவர், அன்றைய அமைச்சராக இருந்த திரு. ராஜித சேனாரத்ன, அல்ஹாஜ் எம். எஸ். எம். அஸ்லம் எம்.பி. உட்பட ஊர்மக்கள் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

இங்கு தொழுகைக்காக அமைக்கப்பட்டுள்ள அறையைத் தனது தாயின் பெயரிலும், குர்ஆன் மத்ரஸாவைத் தனது தந்தையின் பெயரிலும், வாசிகசாலையைத் தனது மனைவியின் பெயரிலும் அல்லாஹ்வுக்காக அர்ப்பணித்தார் நஜீப் ஹாஜியார். இந்நிறுவனத்தின் ஜனாஸா சேவை 20.04.2016இல் ஆரம்பிக்கப்பட்டது.

நஜீப் ஹாஜியார் தனது சொந்தப் பணிகளைத் தனது மூன்று புதல்வர்களான நிஹ்மதுல்லாஹ், ரஹ்மத்துல்லாஹ், ஹிதாயத்துல்லாஹ் ஆகியோருடன் இணைந்து விரிவு படுத்தினார். அத்தோடு இதனை மையமாக வைத்து நன்கொடையாளரின் உதவியோடு இன்னும் சில பணி களையும் செயல்படுத்தினார்.

NEC நிறுவனத்தின் தொடர்ச்சியான பணிகளில் சுமார் 100 சிறுவர் சிறுமியர்களுக்கான குர்ஆன் கற்றல் வகுப்பு குறிப்பிடத்தக்கது. 4 வயது முதல் 8 வயது வரையானவர்களுக்கு இந்தப் பயிற்சி மாலை நேரத்தில் வழங்கப்படுகின்றது. இரண்டு உஸ்தாத்மார்கள் இதற்காகக் கடமையாற்றுகின்றனர். வாரத்தில் ஒருநாள் அஹதியாவும் நடைபெறுகின்றது. அறிவியல் சம்பந்தமான புத்தக அறிமுகம் வாசிகசாலையில் ஒருநாள் இடம்பெறுகிறது. தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை வாசிகசாலை திறந்து வைக்கப்பட்டிருக்கும். இங்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம், அரபு ஆகிய நான்கு மொழிகளிலும் நூல்கள் உள்ளன. தமிழ், ஆங்கில, சிங்கள தினசரி பத்திரிகைகளும் உள்ளன. இங்கு ஆண் பெண் இருபாலாருக்கும் பயன்பெறக்கூடிய வகையில்

வசதி வாய்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. கல்வி கற்கும் பிள்ளைகளுக்குஅவர்களின்பாடத்திட்டத்திற்குஉதவக்கூடிய நூல்களையும் மார்க்க அறிவுடன் சம்பந்தப்பட்ட பொது அறிவு நூல்களையும் இங்கு அதிகமாகக் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலையத்தை மையமாக வைத்து பல சேவைகளும் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அதில் பிரதானமானது ஜனாஸா வாகன (அம்புலன்ஸ்) சேவை. இந்தச் சேவை களுத்துறை மாவட்டத்தின் எல்லா முஸ்லிம் ஊர்களுக்கும் வழங்கப்படுகிறது. அத்தோடு காலி மாவட்டத்தில் உள்ள துந்துவை, பனாப்பிட்டிய, பலப்பிட்டிய ஆகிய ஊர் மக்களுக்கும் இச்சேவை கிடைக்கின்றது. இதற்கென இருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த ஜனாஸா சேவை ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்களில், நஜீப் ஹாஜியார் தர்கா நகரில் ஒரு மரண வீட்டுக்குச் சென்றபோது, அந்த வீட்டு ஜனாஸா வைத்தியசாலையிலிருந்து நஜீப் ஹாஜியார் அவர்களின் ஜனாஸா சேவை வாகனத்தில் கொண்டு வரப்பட்டிருந்தது. அப்போது ஒருவர் நஜீப் ஹாஜியாரிடம் வந்து, “நீங்கள் இந்தச் சேவையை செய்கின்றீர்கள். பதினைந்து வருடங் களுக்கு முன்பு இவ்வாறான ஒரு சேவைக்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்காக நடைபெற்ற கூட்டத்துக்கு என்னையும் அழைத்திருந்தனர். பலர் அக்கூட்டத்தில் கலந்தாலோசித்த போதிலும் முயற்சி வெற்றியளிக்கவில்லை” எனக் கூறியுள்ளார். அதற்கு அவர், “அவர்களின் முயற்சி இன்று கைகூடியுள்ளது. அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்” எனப் பதிலளிததுள்ளார்.

ஒருதடவை தர்கா நகர் பெண்ணொருவரின் ஜனாஸாவை நாகொடை வைத்தியசாலையில் இருந்து ஊருக்குக் கொண்டு வரும்போது அந்தப் பெண்ணின் வீட்டில் ஜனாஸா குளிப் பாட்டுவதற்கான வசதியில்லாத காரணத்தால், இடையில் மக்கொனை ஜும்ஆ மஸ்ஜிதில் ஜனாஸாவைக் குளிப்பாட்டி ஊருக்குக் கொண்டுவரப்பட்ட செய்தி நஜீப் ஹாஜியாரின் உள்ளத்தில் வேதனையை ஏற்படுத்தியது. அவர் ஓரிரு மாதங்களில் தனது NEC நிறுவனத்தினால் தெருவுப்பள்ளி முற்றத்தில் ஜனாஸா குளிப்பாட்டுவதற்கான அறை ஒன்றைக் கட்டி இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்தார்.

ஒருநாள் அபூதாபியில் நஜீப் ஹாஜியார் தனது மனைவியுடன் காரில் பயணித்துக் கொண்டிருக்கும்போது மையவாடி ஒன்றைக் கடந்து செல்லவேண்டி ஏற்பட்டது. அப்போது அங்கு ஒரு கூடாரத்தை அவரது மனைவி கண்டு அது என்னவென நஜீப் ஹாஜியாரிடம் கேட்டார். அது பற்றிய விபரத்தை மனைவியிடம் சொன்னார் நஜீப் ஹாஜியார். இப்படியான ஒரு கூடாரத்தை தர்கா நகர் தெருவுப் பள்ளி மையவாடியிலும் வைத்தால் நல்லதுதானே என்று மனைவி கேட்டார். அதன் பிரகாரமே நஜீப் ஹாஜியார் தனது சொந்தச் செலவில் 5 இடங்களில் இவ்வாறான கூடாரங்களை வைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. தர்கா நகர் பெரிய பள்ளி, தெருவுப் பள்ளி, பேருவளை மருதானை பள்ளி, மக்கொனைப் பள்ளி, காலி சோலை ஜும்மா மஸ்ஜித் ஆகியவற்றின் மையவாடிகளிலேயே இவ்வாறான கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான இன்னும் பல கோரிக்கைகள் மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் முன் வைக்கப்பட்டுள்ளதாகவும் இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் அவைகளைச் செய்து கொடுக்க நாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தர்கா நகர் NEC உருவாக்கத்தின் பின்னர் தக்வா பள்ளி, பனாப்பிட்டி ஜும்மா பள்ளி, ஹாஜி லேன் பள்ளி, அதிகாரி கொடை பள்ளி, நூர் பள்ளி என்பன அதிக பணச் செலவில் மிக அழகாகப் புனரமைக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த பெரும் பணிகள் யாவும் நஜீப் ஹாஜியார் மீது நம்பிக்கை கொண்டுள்ள கொடைவள்ளலின் நன்கொடைகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டவை.

தனது NEC உருவாவதற்கு முன்பு நிகழ்ந்த நிகழ்வுகளை நஜீப் ஹாஜியார் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

தர்கா நகர், ஸாஹிரா கல்லூரியின் பின் புறத்தில் இருந்து சுமார் 150 மீட்டர் தூரத்தில் லோட்டஸ் வீதிக்கு அருகாமையில் NEC அமைந்திருக்கும் 25 பேர்ச்சஸ் காணி நஜீப் ஹாஜியார் அவர்களால் வாங்கப்பட்டது. 1996இல் தனது குடும்பத்தினருடன் அபுதாபியில் இருந்து ஊருக்கு வந்தபோது, சிறு வயதினரான தனது பிள்ளைகளின்

*எதிர்காலம் கருதி அவர் அக்காணியை வாங்கியுள்ளார். இதற்கான பணம் போதாமையினால் அவர் தனது மனைவிக்கு வழங்கியிருந்த நகைகளையும் விற்று இக்காணிக்குரிய பணத்தைச் செலுத்தியுள்ளார்.*

*2008இல் தனக்கென ஒரு புது வீடு கட்ட அவர் நினைத்த போது அவரது உள்ளத்தில் ஒரு பாரிய எண்ணம் உதித்தது. மஸ்ஜித் மத்ரஸாக்களோடு சம்பந்தப்பட்ட பாரிய பணிகள் அனைத்தும் ஒரு நன்கொடையாளரின் உதவியினால் அல்லவா நிறைவேறின. அந்தப் பணிகளை நிறைவேற்ற அல்லாஹ் தன்னை ஒரு உதவியாளனாகவே ஆகியுள்ளான். அல்ஹம்துலில்லாஹ். இதுபோன்ற ஒரு பணியை தானும் செய்ய வேண்டும். அப்பணி எம் ஊரில் வேறு யாராலும் மேற்கொள்ளப்படாததாக இருக்கவும் வேண்டும் என அவர் நினைத்தார்.*

*இதுபற்றி அவர் தனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் கலந்தாலோசித்தார். "நான் காணியை அல்லாஹ்வுக்கான நற்பணிகளுக்காக அர்ப்பணிக்க நினைக்கின்றேன். என் சந்ததிகளாகிய நீங்கள் உயர்ந்த நிலையில் இருக்கின்றீர்கள். நான் எனது பெற்றோரினதோ மனைவியினதோ எந்தச் சொத்துக்களையும் எனக்குரியதாக ஆக்கிக் கொள்ளவில்லை. நீங்களும் இது போன்ற சொத்துக்களை உழைப்பின் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறியபோது அவரது மனைவியும் பிள்ளைகளும் அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டதோடு ஒத்துழைப்பும் வழங்கினர்.*

NEC *நிறுவனத்தினால் செய்யப்படுகின்ற பிரத்தியேகமான பணிகள் அனைத்தும் நஜீப் ஹாஜியார் அவர்களின் சந்ததியினரின் பங்களிப்புடனேயே செய்யப்படுகின்றன.*

*2013ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக களுத்துறை மாவட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 25 முஸ்லிம் பாடசாலைகளின் மாணவ-மாணவிகள் சுமார் 100 பேர் வருடாவருடம் கௌரவிக்கப்படுகின்றனர். ஆரம்பத்தில் சில சிங்களப் பாடசாலைகளும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தன. பின்னர் அவர்களின் பங்கேற்பு குறைந்துவிட்டது. இது நஜீப்*

ஹாஜியார் கல்வி நிலையத்தால் மேற்கொள்ளப்படுகின்ற பெரும் பணியாகும்.

பொதுப் பணிகளில் தனது பிள்ளைகள் காட்டுகின்ற ஆர்வத்தை ஹாஜியார் இவ்வாறு விபரிக்கின்றார்: இந்த விடயங்கள் ஏன் எழுதப்பட வேண்டும் என்பதைப் பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில், இது போன்ற விடயங்கள் எழுதப்படுவதால் வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினர் மத்தியிலும் இவ்வாறானதொரு ஆர்வம் ஏற்பட வேண்டும் என்பதே தனது நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

2016இல் நஜீப் ஹாஜியார் அவர்கள் குடும்பத்தினருடன் தர்கா நகருக்கு வருகை தந்தபோது ழுஹர் தொழுகைக்காக தனது மூன்று புதல்வர்களுடனும் பெரிய பள்ளிவாசலுக்குச் சென்றிருந்தார். அவரது புதல்வர்கள் மலசலகூடப் பக்கம் சென்றபோது அங்குள்ள குறைகளைக் கண்டு கொண்டனர். அது அழகான கட்டடக்கலையுடன் கூடிய மஸ்ஜித். அதனைச் சூழ பச்சைப் பசேலென காட்சியளிக்கும் பூந்தோட்டம். ஆனால் மலசல கூட வசதிகள் திருப்திகரமாக இல்லை. அரபு நாடுகளில் மஸ்ஜித் மலசலகூடங்கள் சுகாதார முறைப்படி வசதிகளுடன் மிக அழகாக இருக்கும். தர்கா நகரில் பிரதான பாதையில் உள்ள பழைமை வாய்ந்த மஸ்ஜித் இது. குறிப்பாக தர்கா நகருக்கு வெளியேயிருந்து வருகை தருபவர்கள் தொழுகைக்காகத் தரிக்கும் போது ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு சிறந்த முறையில் வசதிகளை இங்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற விடயத்தை, பிள்ளைகள் நஜீப் ஹாஜியாரிடம் எடுத்துக் கூறினர். அவர் இதனைக் கொடைவள்ளலிடம் எடுத்துச் சொல்லி மிகக் குறுகிய காலத்தில் மலசலகூடப் பகுதியையும் வுளூச் செய்யும் இடத்தையும் மிக அழகாகத் திருத்தி அமைத்துக் கொடுத்தார்.

2017இல் நஜீப் ஹாஜியார் அவர்கள் தனது மகன் ஹிதாயத்துல்லாஹ்வோடு தக்வா பள்ளியின் பக்கமாகச் சென்றபோது அங்கிருந்த பள்ளிக் கட்டடத்தின் எளிமையான தோற்றத்தைக் கண்டு பெரிதும் கவலையடைந்தார். அதனை அடுத்து அப்பகுதி மக்களிடம் அதுபற்றிக் கலந்துரையாடினார். அப்பள்ளிவாசலின் நிர்வாகிகளில்

ஒருவரான ஹஸன் நவ்ஃபல் அவர்களுடன் பேசி அந்த மஸ்ஜிதின் நிர்மாணப் பணிகளை விஸ்தரிக்கும் முயற்சிகளை மேற்கொண்டார். இன்று தக்வாப் பள்ளி மிகவும் அழகாகக் காட்சி அளிக்கின்றது

தக்வாப் பள்ளி புனர்நிர்மாணம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போதுதான், பனாப்பிட்டிய ஜும்மா மஸ்ஜித் தூதுக்குழுவொன்று தர்கா நகருக்கு வருகை தந்தது. பனாப்பிட்டிய பள்ளிவாசலை புனர்நிர்மாணம் செய்து தரும்படி அக்குழுவினர் நஜீப் ஹாஜியாரிடம் கோரிக்கை விடுத்தனர். இந்த எண்ணம் சில வருடங்களாக அவர்களிடம் இருந்து வந்துள்ளது தெரியவந்தது. அந்த ஊருக்குச் சென்று நிலைமையை நேரில் அவதானித்த நஜீப் ஹாஜியார் பழைய பள்ளியை விஸ்தீரணப் படுத்தி, சகல வசதிகளுடனும் கூடியதாக விரைவில் கட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். இன்று பனாப்பிட்டிய ஜும்மா மஸ்ஜித் பனாப்பிட்டிய கிராமத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. மேலும் பலப்பிட்டிய அல்அஷ்அரீயா மத்ரஸாவில் சில புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு அவற்றை 30.12.2018இல் திறந்து வைத்தார்.

ஹாஜி லேன் மஸ்ஜித் புனர்நிர்மாணம் பற்றிக் குறிப்பிடு கையில் சிறிதாகக் கட்டப்பட்டிருந்த அந்தப் பள்ளியை பெரிதாகக் கட்டிக் கொடுக்கும்படி அவரது இளைய மகன் ஹிதாயத்துல்லாஹ் தன்னிடம் கேட்டுக்கொண்டதாக நஜீப் ஹாஜியார் சொன்னார். அவருடைய மாமனார் (இல்யாஸ்) அவர்களும் இதுபற்றி கதைத்ததாக அவர் சொன்னார். இதுவே ஹாஜி லேன் ஜமாத்தாரினதும் நிர்வாகத்தினரதும் விருப்பமாகவும் இருந்தது. இவ்வாறான நிலைமையில் நஜீப் ஹாஜியார் இப்பள்ளியை இரண்டு மாடிக் கட்டடமாகக் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். இன்று இப்பள்ளிவாசல் ஆற்றங்கரை ஓரத்திலே அழகாகக் காட்சி யளிக்கிறது.

அதிகாரிகொடை மேட்டில் அமைந்துள்ள மஸ்ஜிதுர் ரஹ்மான் அதிக செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு 2018இல் இரு மாடிக் கட்டடமாக திறந்துவைக்கப்பட்டது.

அழகுற அமைந்துள்ள இப்பள்ளியின் நிர்வாக சபை உறுப்பினராக இருந்தவரும் நஜீப் ஹாஜியாரின் நண்பரும் அண்மையில் காலம்சென்றவருமாகிய எம். எஸ். எம். முனாஸ் அவர்களும் இப்பணிக்குப் பங்களிப்புச் செய்துள்ளார். இப்பள்ளியின் புனர்நிர்மானத்திற்கு ஒத்துழைப்பை வழங்கும்படி பலதடவைகள் அவர் நஜீப் ஹாஜியார் அவர்களை வேண்டியுள்ளார். அவர் வெளிநாட்டில் தொழில் செய்யும் போது அவருடன் தொடர்பு இருந்து வந்ததாக ஹாஜியார் கூறினார். இந்தநிலையில் ஏனைய மஸ்ஜிதுகளை புனர்நிர்மாணம் செய்யும் போது மேற்கொண்ட முயற்சிகள் போன்றே இந்தப் பள்ளிக்காகவும் முயற்சித்ததனால் மிக அழகான தோற்றத்தில் அது கட்டி முடிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

வவுனியா நகரில் ஏற்கனவே சிறிய கட்டடத்தில் இயங்கி வந்த அனாதை இல்லத்தை விரிவுபடுத்துவதற்காக விசாலமான ஒரு கட்டடத்தைக் கட்டிக் கொடுக்கும் பணியை 28.03.2021இல் NEC பொறுப்பெடுத்தது. இக்கட்டடத்தில் வகுப்பறைகள் தொழுகைக்கான பிரத்தியேக இடம் ஆகியவை அடங்கியுள்ளன.

01.02.2021இல் வெலிப்பண்ணை கிராமத்தில் 30 வீடுகளுக்கு நீர் வழங்குவதற்காக NEC மூலம் ஒரு விசாலமான கிணறு கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இது 2021 ஒக்டோபர் 17ம் திகதி நஜீப் ஹாஜியார் அவர்களின் கைகளினால் பொது மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த காலத்தில் களுத்துறையில் ஒரு பகுதியில் சிறிய ஸாவியா ஒன்றினை பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த ஒரு தனவந்தர் கட்டிக்கொடுத்திருந்தார். அப்பகுதியில் சுமார் 80 குடும்பத்தினர் வசிக்கின்றனர். நீண்ட காலமாகக் கவனிக்கப்படாதிருந்த அந்த ஸாவியாக் கட்டடத்தைப் புனர்நிர்மாணம் செய்து கொடுப்பதற்கு நஜீப் ஹாஜியார் முன்சென்றார். அதற்காக 2019.11.03ம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது. ஸாவியாவின் புதிய கட்டடத்தில் இப்போது தொழுகை நடாத்தப்படுகின்றது. அதன் உத்தியோகபூர்வ திறப்பு விழா 25.12.2021 இல்

நடைபெற்றது. பிரதம அதிதியாக நஜீப் ஹாஜியார் கலந்து கொண்டு அதனைத் திறந்து வைத்தார். ஹப்புகஸ்தலாவையில் உள்ள பள்ளிவாசலொன்றுக்கும் அங்குள்ள பொது மக்களுக்கும் வழிப் போக்கர்களுக்கும் நீர் வழங்குவதற்காக 01.04.2021இல் கிணறொன்று கட்டிக் கொடுக்கப்பட்டது. கொழும்பு மருதானை போபர்ஸ் லேன் புகாரி தக்கியாவின் மூன்றாம் மாடிக் கட்டடத்தின் நிர்மாணப் பணியும் பொறுப்பேற்கப்பட்டு நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டது.

சங்கிலித் தொடர் போல NEC மூலம் நிகழ்ந்துவரும் சமூகப்பணிகள் மேலும் தொடர்வதற்கும் இதுபோன்ற பணிகளை எதிர்காலத்தில் மேலும் பலர் மேற்கொள்வதற்கும் அருள் புரிய வேண்டும் என வல்ல நாயன் அல்லாஹ்வைப் பிரார்த்திப்போம்.

# 34

# இஷா அத்துல் இஸ்லாம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்

இஷா அத்துல் இஸ்லாம் என்னும் சமய, சமூக சேவை அமைப்பு அதன் தலைவர் மர்ஹூம் அஷ்ஷேக் ஹம்ஸா ஆலிம் பின் அப்துல்லாஹ் ஆலிம் ஹாஜியார் அவர்களின் தலைமையில் பல்வேறு நலனோம்பல் திட்டங்களின் கீழ் சமூகத்திற்காக சேவையாற்றிக் கொண்டிருந்தது. இந்நிலையில் 1978ஆம் ஆண்டு மே மாதத்தில் தர்கா நகர் அல்ஹம்றா வித்தியாலயத்தில் இஷாத் தொழுகையின் பின்னர் இஷா அத்துல் இஸ்லாம் அமைப்பின் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்ற போது, அனாதைச் சிறார்களுக்கான பராமரிப்பு நிலையமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை அல்ஹாஜ் எம். எச். அப்துல் ஹலீம், முன்னைநாள் அதிபர் மர்ஹூம் எம். எம். ஏ. அலவி, மர்ஹூம் ஏ. எம். எம். ஸியாத் ஆசிரியர் ஆகியோர் முன் வைத்தனர். அதற்கு இணங்க தலைவர் அஷ்ஷேக் ஹம்ஸா ஆலிம் அவர்கள் அனாதைச் சிறுவர்களுக்கான இல்லம் ஒன்றை நிறுவுவதற்கு முடிவு செய்தார்.

*இவ்விடயம் தொடர்பாக தலைவர் அஷ்ஷேக் ஹம்ஸா ஆலிம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆரம்பக் கூட்டத்தின்போது இப்பணிக்காக மர்ஹூம் அல்ஹாஜ் எம். ஏ. பதாஹ் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவில் அதிபர் எம். எம். ஏ. அலவி, அதிபர் அல்ஹாஜ் ஐ. எல். எம். சுஐப், முன்னாள் கல்வி அதிகாரி ஏ. எல். எம். இஸ்மாயில், அல்ஹாஜ் எம். எச். அப்துல் ஹலீம், ஆசிரியர் ஏ. ஆர். எம். சமீம், ஆசிரியர் ஏ. எம். எம். ஸியாத், ஜனாப் டி. எல். எம். ஜிப்ரி, ஆசிரியர் ஜனாப் எம். எஸ். ஏ. கனி, அப்போது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக இருந்த மர்ஹூம் ஜனாப் ஏ. ஜி. ஹுஸைன் இஸ்மாயில், அல்ஹாஜ் எம். எல். எம். ஸல்மான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.*

*தர்கா நகர் பிரதான வீதியில் அமைந்திருந்த ஸலாம் ஆசிரியர் அவர்களின் வீடு வாடகைக்கு எடுக்கப்பட்டு அவ்விடத்தில் 1979ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதி பிரதி சபாநாயகர் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் அவர்களால் இஷா அத்துல் இஸ்லாம் அனாதை இல்லம் திறந்து வைக்கப்பட்டது. 16 அனாதைச் சிறுவர்கள் அன்றைய தினத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.*

*1987ஆம் ஆண்டு தர்கா நகரைச் சேர்ந்த அல்ஹாஜ் உவைஸ் ஹாஷிம் தனது தொழிற்சாலை கட்டடத்துடனிருந்த 63 பேர்ச்சஸ் காணியை இஷா அத்துல் இஸ்லாம் அனாதை இல்லத்துக்கு அன்பளிப்புச் செய்தார். கட்டடங்கள் சீரமைக் கப்பட்டு அனாதை இல்லச் சிறுவர்கள் அங்கு குடி புகுந்தனர். இதன் திறப்பு விழாவில் இயக்கத்தலைவர் அல்ஹாஜ் அஷ்ஷேக் ஹம்ஸா பின் அப்துல்லாஹ் ஆலிம், அப்போதைய அமைச்சர் அல்ஹாஜ் எம் எச். முஹம்மத், அல்ஹாஜ் உவைஸ் ஹாஷிம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.*

*இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அனாதை சிறார்களுக்கான பராமரிப்பு நிலையம் தர்கா நகர், பேருவளை, களுத்துறை மற்றும் அயல் பிரதேச ஊர்களைச் சேர்ந்த அனாதைச் சிறுவர்களை சுமார் நான்கு தசாப்தங்களாகப் பராமரித்துப் போஷித்து வந்துள்ளது. இன்று பல பௌதீக வளங்களையும்*

பெற்றுள்ள இவ்வில்லம் தன்னகத்தே உள்ள சிறார்களுக்குப் பல சேவைகளையும் வழங்கி வருகிறது.

இதன் வளர்ச்சியில் தனிநபர்களின் பொருளாதார, பௌதீக வள உதவிகளும், கல்விமான்களின் அர்ப்பணிப்பும் நன்றி உணர்வுடன் நினைவுகூரத்தக்கது. அத்துடன் கடந்த காலத்தில் இந்த நிலையத்தைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு கல்விமான்களும் தொழிலதிபர்களும் தொழில் வல்லுனர்களும் வழங்கிய ஒத்துழைப்புடன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் இந்நிறுவனத்தை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு பராமரிக்கப்படும் அனாதை மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகள் என்பவற்றின் விருத்திக்காகப் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. அத்தோடு எதிர்காலத்தில் பிள்ளைகள் வளமாக வாழ்வதற்குரிய மகிழ்ச்சிகரமான சூழலை உருவாக்கல், எதிர்கால வாழ்க்கைக் கான பயிற்சிகளைக் கொடுத்தல், தொழில் பயிற்சி வழங்குதல், சன்மார்க்க நெறிமுறைகளைப் பேணி, நற் பிரஜைகளாக வாழ வழிகாட்டல் போன்ற பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நிறுவனம் செயல்படுகின்றது. பன்முக ஆளுமை கொண்ட, நாட்டுப்பற்று மிக்க, இன ஐக்கியத்துடன் வாழக்கூடிய, இஸ்லாமிய உணர்வு மிக்க சிறார்களாக பிள்ளைகளை செம்மைப்படுத்தி அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கும் இப்பணி மிக நீண்ட தூரப் பயணமாகும்.

இந்நிறுவனம் இலங்கை பாராளுமன்றத்தின் 34/1984ம் இலக்க பாராளுமன்ற கட்டளைச் சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகவும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனமாகவும், சமூக சேவைகள் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட சமூகசேவை அமைப்பாகவும், சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சட்ட ரீதியான சிறுவர் இல்லமாகவும் திகழ்கின்றது. எனவே இந்நிறுவனம் மேற்கூறப்பட்ட அரச நிறுவனங்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்ற ஒழுங்கமைக்கப்பட்ட சட்டரீதியான ஒரு நிறுவனமாக விளங்குகிறது.

# 35

# தர்கா நகர் ஜமாஅத் கவுன்ஸில்

*தர்கா நகர் ஜமாஅத் கவுன்ஸில் தர்கா நகரில் இருபெரும் ஜும்மா மஸ்ஜிதுகளின் பணிகளுடன் ஊரின் சமூக நலன் பயக்கும் வேலைத்திட்டங்களை விரிவுபடுத்துவதற்கு உதவி யாக பெரிய பள்ளி, தெருவுப் பள்ளி நிர்வாகத்தினரால் 1972இல் உருவாக்கப்பட்டது.*

*இதற்கான முயற்சியில் குறிப்பாக அல்ஹாஜ் எம். ஏ. பத்தாஹ், ஜனாப் ஏ. ஆர். முஹம்மத் (தர்காநகர் பட்டின சபையின் முன்னாள் தலைவர்), அல்ஹாஜ் மௌலவி செய்யத் அஹ்மது ஆலிம் ஆகியோர் பெரும் பங்கேற்றனர்.*

*அன்றைய கால மஸ்ஜித் நிர்வாகிகளாக இருந்த ஜனாப் ஏ. ஆர். முஹம்மத், அல்ஹாஜ் எம். ஏ. பத்தாஹ் ஆகியோர் இது விடயமாக ஊர் ஜமாத்தார்களின் ஆலோசனையைப் பெற்று, அவர்களின் பூரண விருப்பத்துடன் ஜமாத் கவுன்ஸிலை ஆரம்பித்தனர். ஜமாத் கவுன்ஸிலின் யாப்பு, ஜனாப்களான எம்.எம்.ஏ.அலவி, எம்.ஐ.எம்.ஹாரித், டாக்டர் ஏ.எம்.அமீஸ், ஐ. எல். எம். சுஐப் ஆகியோரால் ஒரு வார காலத்தில் தயார் செய்யப்பட்டு ஊரின் எல்லா பகுதிகளையும் உள்ளடக்கிய 30 பேர்கள் கொண்ட ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது.*

*ஜமாத் கவுன்ஸிலின் நீண்டகால தனாதிகாரியாக மர்ஹூம் அல்ஹாஜ் எம். எம். ஏ. ஹாஷிம் அலவி அவர்களும், செயலாளர்களாக மர்ஹூம்களான ஏ. எல். எம். இஸ்மாயில் (கல்வி அதிகாரி), அல்ஹாஜ் ஐ. எல். எம். சுஐப் (முன்னாள் அதிபர், ஸாஹிராக் கல்லூரி) மற்றும் எம். எஸ். எம். புர்கான் ஆசிரியர் ஆகியோர் பணியாற்றினர். 1999இல் இருந்து அல்ஹாஜ் மௌலவி மஸா ஆலிம் அவர்கள் தலைவராகப் பணியாற்றுகிறார். மர்ஹூம் ஸியாத் ஆசிரியர் அவர்கள் இதன் செயலாளராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார்.*

*பிற்காலத்தில் ஜனாப் எம். இஸட். எம். நயீம் அவர்கள் சிறிது காலம் செயலாளராகப் பணியாற்றினார். பின்னர் அவ்விடத்திற்கு அல்ஹாஜ் ஏ. எம். எம். முஹிதீன்*

ஆசிரியர் தெரிவுசெய்யப்பட்டு கடந்த 20 வருட காலமாக பெரும் பணியாற்றி வருகின்றார். அல்ஹாஜ் எம். எம். அவ்பான் தனாதிகாரியாகப் பணியாற்றி வந்தார். அவரின் மறைவுக்குப் பின்னர் அல்ஹாஜ் ஏ. எச். எம். ஹனீம் அவர்கள் தனாதிகாரியாகத் தெரிவுசெய்யப்பட்டு தொடர்ந்தும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார். 2017 இல் அல்ஹாஜ் எம் எச் எம் அபான் உதவித் தனாதிகாரியாக தெரிவுசெய்யப்பட்டார்.

ஜமாத் கவுன்ஸிலின் சேவைகளை அறிந்த அல் கபாலா நிறுவனம் ஜமாத் கவுன்ஸில் ஊடாக வீடில்லாத 58 வறிய குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தது. அலிப் நிறுவனமும் ஜமாத் கவுன்ஸில் ஊடாக நாலு குடும்பங்களுக்கு வீடுகளை வழங்கியது. அல் கபாலா நிறுவனம் தொடர்ந்தும் கணவனை இழந்த குடும்பங்களுக்கு மாதாந்த உதவிப் பணமாக ஒரு தொகையை ஜமாத் கவுன்ஸில் ஊடாக வழங்கிவருகின்றது. 2013ஆம் ஆண்டளவில் மீரிப்பண்ணையில் 38 பேர்ச்சஸ் காணி வாங்கப்பட்டு 5 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. ஜமாஅத் கவுன் ஸிலின் சமூக சேவைப் பணிகளில் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையமும் அதிகளவில் பங்களிப்புச் செய்து வருகின்றது.

ஆரம்ப காலம் தொட்டே, இரு பள்ளிவாசல்களினதும் நிர்வாகத்தினருடன் இணைந்து ஜமாத் கவுன்ஸில் செய்து வரும் பணிகளில் சில:

தர்கா நகரின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுதல், ஜமாத்தார் சமர்ப்பிக்கும் முறைப்பாடுகளை விசாரித்தல், மஸ்ஜிதின் பணிகளில் ஆர்வம் காட்டுதல், ஜமாஅத்தாரின் பொது நலன்கள் மற்றும் வறிய மக்களுக்கான உதவிகள் போன்ற விடயங்களில் பங்குபற்றல், பள்ளி நிர்வாகத்தினரின் ஒத்துழைப்புடன் பைத்துல்மால் நிதி உருவாக்கப்பட்டு மஸ்ஜித் செலவுகளையும், தேவைகளின் போது சமூக நலன்களுக்காகவும் செலவு செய்தல், இந்த நிதியோடு சேர்த்து ஸகாத் பணமும் வசூலிக்கப்பட்டு ரமழான் மாதத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு சிறந்த முறையில் ஸகாத் பணம் வழங்குதல், ஜமாத் கவுன்ஸிலின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும்

*கல்விக்குழு, சமாதானக் குழு, சமூக சுகாதார குழு போன்ற பல பணிகள் ஜமாத் கவுன்ஸிலால் முன்னெடுக்கப்படுகின்றன.*

*ஜமாத் கவுன்ஸில் காரியாலயம் தெருவுப் பள்ளியின் கீழ்மாடியில் அமைந்துள்ளது. கடந்த 48 ஆண்டு காலப்பகுதியில் அது ஆற்றியுள்ள சேவைகள் அளப்பரியவை. அதில் இணைந்து பணியாற்றியவர்களில் பலர் இன்று மண்ணறைகளில் வாழ்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு ஈடேற்றத்தைக் கொடுப்பானாக. இன்றும் பலர் இப்பணிகளில் தங்களது வளத்திற்கு உட்பட்ட வகையில் சேவையாற்றி வருகின்றனர்.*

*இப் பணி தொடரவும் இப்பணிக்காக தங்களை அர்ப்பணித்தவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்வோமாக. மேலும் அவர்களுக்காக அதிகமதிகம் பிரார்த்தனையும் செய்வோம்.*

# *36*

# தர்கா நகர் பிரதேச வைத்தியசாலை

*1920இல் கிராமிய மருந்து வழங்கும் நிலையமாக ஆரம்பிக்கப்பட்டதுதான் தர்கா நகர் வைத்தியசாலை. இது நிரந்தர வைத்திய அதிகாரி இன்றி இடைக்கிடையே இயங்கி வந்துள்ளது. அளுத்கம வீதிய பெண்களுக்கான கிராமிய வைத்தியசாலை என்ற பெயரிலேயே இது ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான காணியை தர்கா நகரைச் சேர்ந்த கொடை வள்ளல் சி.எம். ஹாமித் மரிக்கார் அன்பளிப்புச் செய்துள்ளார். 1949 ஜனவரி 29ஆம் திகதி அப்போதைய பிரதமர் கௌரவ டி.எஸ். சேனாநாயக்க அவர்களுக்கு அளுத்கம வீதிய முஸ்லிம் சமூக நல கல்வி அமைப்பின் மூலம் தர்கா நகர் நலன்விரும்பிகளால் வரவேற்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த அமைப் பின் தலைவராக மர்ஹூம் ஏ. ஆர். முஹம்மத் அவர்களும் (முன்னாள் நகரபிதா), செயலாளராக அப்போதைய அளுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஐ. எல். எம்.*

மஷ்ஹூர் அவர்களும் இருந்துள்ளனர். இந்நிகழ்வு தர்கா நகர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கையின் முதலாவது பிரதமரும் அமைச்சரவை உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர். கல்வி அமைச்சர் திரு சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்கள், சுகாதார உள்ளூராட்சி அமைச்சர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்கள், தொழில் அமைச்சர் டி. பி. ஜாயா, திரு ஜே. ஆர். ஜெயவர்தன (முன்னாள் ஜனாதிபதி) உட்பட பல அரசியல் பிரமுகர்களும் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்துள்ளார்கள்.

இந்நிகழ்வு அல் ஹம்றா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அப்போது முஸ்லிம் கல்வி சமூக நல அமைப்பினால் விசேட மகஜர் ஒன்று பிரதமருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பாக அதில் தர்கா நகரில் எதிர்கால அபிவிருத்திக்கு தேவையான பல வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன. அதில் தர்கா நகர் கிராமிய வைத்தியசாலைக்கு நிரந்தர வதிவிட வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்கும் படியும் வைத்தியசாலையை ஆண் பெண் இருபாலாருக்குமென தரமுயர்த்தும் படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அத்துடன் மத்திய மருந்தகம் ஒன்றை ஸ்தாபிக்குமாறும் வேண்டப்பட்டிருந்தது. அதன் அடிப்படையிலேயே எமது கிராமிய வைத்தியசாலையில் ஆண்களுக்கான சிகிச்சை பிரிவும் ஏற்பாடு செய்யப்பட்டது. 1975இல் உப சபாநாயகராக இருந்த ஐ. ஏ. காதர் அவர்களின் முயற்சியால் பிரசவ வார்டு ஒன்றும் ஏற்பாடாகியது குறிப்பிடத்தக்கது.

அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத், அல்ஹாஜ் ஏ. எச். எம். பௌஸி ஆகியோர் சுகாதார அமைச்சர்களாக இருந்த காலப்பிரிவில் இந்த வைத்தியசாலை படிப்படியாக வளர்ச்சி கண்டு மகப்பேற்று பிரிவு, பற் சிகிச்சைப் பிரிவு என்பன ஆரம்பிக்கப்பட்டன. சுகாதார அமைச்சர் திரு நிமால் சிறிபால டி சில்வா, திரு ராஜித சேனாரத்ன

*போன்றோரும் இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திக்குப் பாரிய பணிகளை ஆற்றியுள்ளனர். திரு ராஜித சேனாரத்ன சுகாதார அமைச்சராக இருந்த போது இதனை பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்தியதோடு புதிதாக மூன்று மாடிக் கட்டடம் ஒன்றையும் பெற்றுத்தந்தார். இக்கட்டட நிர்மாணப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.*

*இவ் வைத்தியசாலையின் அபிவிருத்தியில் தர்கா நகர் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றது பிரதேச மக்களின் பங்களிப்போடு வைத்தியசாலைக்குத் தேவையான அத்தியாவசிய உபகர ணங்களை பெருமளவில் அளித்துள்ளதுடன் நன்கொடை யாளர்கள் பலர் பல அத்தியாவசியத் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளனர்.*

*புதிய மூன்று மாடிக் கட்டடம் பூர்த்தியானதும் இவ் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு, ஆண்களுக்கான பிரிவு, பெண்கள் பிரிவு, சிறுவர் பிரிவு, பற் சிகிச்சைப் பிரிவு, ஆய்வு கூடம், சிறிய அளவிலான சத்திர சிகிச்சைப் பிரிவு, தொற்றா நோயாளர் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு ஆகியவை சீராகச் செயல்பட ஆரம்பிக்கும்.*

## *37*

# தர்கா நகர் உள்ளூர் நிர்வாகம்

*தர்கா நகரின் உள்ளூர் நிர்வாகம் 1951 முதல் சுமார் 20 வருடகாலம் பட்டின சபை என்ற உள்ளூராட்சி நிர்வாகத்தின் கீழும் இன்னும்10 வருட காலம் அரசின் விசேட ஆணையாளர் நிர்வாகத்திற்குக் கீழும் இயங்கி வந்தது. 1980க்கு பிற்பட்ட காலத்திலிருந்து இன்றைய காலப்பகுதி வரை பேருவளை பிரதேசசபை என்ற நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. இது முன்னைய சில கிராம சபைகளையும் பட்டின சபைகளையும் உள்ளடக்கியது. இதன்மூலம் தர்கா நகர் தனித்துவ நிர்வாகத்தை இழந்தது. இது பேருவளை நகரசபை*

தவிர்ந்த பேருவளைத் தொகுதியின் எல்லா பிரதேசங்களையும் உள்ளடக்கியுள்ளது. இதன்மூலம் தர்கா நகர் பெரும்பான்மை பிரதிநித்துவத்தை இழந்துள்ளது.

சுதந்திரத்திற்கு முன்னர் எம் ஊர் நிர்வாகம் அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருந்தது. 1949ஆம் ஆண்டு ஜனவரி 29இல் தர்கா நகருக்கு விஜயம் செய்த அன்றைய பிரதமரும் இலங்கையின் முதலாவது பிரதமருமாகிய டி எஸ். சேனாநாயக்க அவர்களிடம் அளுத்கம வீதிய முஸ்லிம் கல்வி சமூக நல சங்கம் ஒரு கோரிக்கையை முன்வைத்தது. இவ்வமைப்பின் தலைவராக ஏ. ஆர். முஹம்மத் அவர்களும் அவரோடு ஐ. எல். எம். மஷ்ஹூர் உட்பட மற்றும் சிலரும் இருந்தனர். இவர்களின் பிரதான கோரிக்கைகளில் தர்கா நகருக்கு தனி நிர்வாக சபை ஒன்று தேவை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இம்முயற்சி 1951இல் தர்கா நகருக்கு பட்டின சபை என்ற தனி நிர்வாகத்தைப் பெற்றுக்கொடுத்தது.

1970 - 1977 காலப்பகுதியில் பேருவளைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பாராளுமன்ற உப சபா நாயகராகவும் இருந்த ஐ. ஏ. காதர் அவர்கள் எதிர்காலத்தில் பட்டின, கிராம சபைகள் மறைந்து பிரதேச சபைகள் உருவாகிவிடும் என்பதை விளங்கி 1975களில் தர்கா நகரை நகரசபையாக மாற்றும் ஒரு முயற்சியை மேற்கொண்ட போதிலும் சில காரணங்களால் அது தடைப்பட்டது.

தர்கா நகர் பட்டின சபையாக விளங்கிய போது 7 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். ஆரம்பகால பட்டின சபைத் தலைவராக நீண்ட காலம் ஜனாப் ஏ. ஆர். முஹம்மத் அவர்கள் பதவி வகித்துள்ளார். அதன்பின்னர் ஜனாப் ஏ. எல். ஏ. சத்தார், அல்ஹாஜ் ஏ. எச். எம். ஸித்தீக் ஆகியோர்கள் பட்டினசபையின் தலைவர்களாக இருந்துள்ளனர். இவர்களுடைய பதவிக்காலத்தில் தர்கா நகர் பல சேவைகளை இவர்கள் மூலம் பெற்றிருந்தது. தர்கா நகர் பட்டின சபையாக இருந்த காலத்தில் பின்வருவோர் அதன் உறுப்பினர்களாக இருந்துள்ளனர்: ஏ. ஆர். முஹம்மத், ஓ. எல். எம். நூர்தீன், எம். எம். ஸஹீர், அல்ஹாஜ் ஏ. எச். எம். ஸித்தீக், அல்ஹாஜ் அப்துல் காதர், அல்ஹாஜ் எம். எல். ஏ. வாஹித்,

தாஹிர் மரிக்கார், யு. எச். எம். உவைஸ், ஏ. எம். நயீம், ஏ. எம். ஸத்தார், டி. எல். எம் ஜிப்ரி, ஏ. ஏ. எம். இஸ்மாயில், சாஹுல் ஹமீத், ஏ. எம். இஸ்மாயில், ஜுப்லி இஸ்ஸதீன், ரீ. ஏ. வதூத், ஆல்ஹாஜ் எம். ஐ. எம். ஜமீல்.

தர்கா நகர் நிர்வாகம் பேருவளை பிரதேசசபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட போது 1991 - 1997 காலப்பகுதியில் அல்ஹாஜ் ஏ. ஆர். எம். பதியுத்தீன் பிரதேசசபைத் தலைவ ராகப் பதவி வகித்தார். இன்று பேருவளை பிரதேச சபை உறுப்பினர்களாக தர்கா நகரைச் சேர்ந்த 6 பேர் பதவி வகிக்கின்றனர். மர்ஹூம் அல்ஹாஜ் எம். எல். அப்துல் காதர் அவர்கள் பாடசாலை அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் களுத்துறை மாவட்டத்தின் மாகாணசபை உறுப்பினராக தெரிவான முதலாவது ஊரவர் ஆவார். இவரும் பல சேவைகளைத் தனது பதவிக்காலத்தில் ஊருக்காகச் செய்துள்ளார்.

தர்கா நகரில் விசேட ஆணையாளர்களாக அல்ஹாஜ் எம்.ஏ. பத்தாஹ், அல்ஹாஜ் ஐ.எல்.எம்.மஷ்ஹூர், ஜனாப் சஹாப்தீன் ஆகியவர்கள் அடுத்தடுத்து பதவி வகுத்துள்ளார்கள். இலங்கை நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த பாக்கீர் மாக்கார், ஐ ஏ காதர், இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், ராஜித்த சேனாரத்ன, அல்ஹாஜ் எம்.எஸ்.எம். அஸ்லம் ஆகியவர்களின் பதவிக்காலத்தில் தர்கா நகர் குறிப்பாக பல சேவைகளைப் பெற்றுள்ளது. சகோதர சமூகங்களின் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களின் சேவை பங்களிப்புகளும் இவ்வூருக்கு நிறைய நிகழ்ந்திருப்பதை மறுப்பதற்கில்லை.

ஒவ்வொரு நிர்வாகத்தின் பதவிக் காலத்திலும் தர்கா நகர் பலவித நன்மைகளைப் பெற்றுள்ளது. இதற்காக அரசியல்வாதிகள், கல்விமான்கள், பள்ளி நிர்வாகத்தினர், தனிநபர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். கொரோனா தொற்றுக்கு நாடு முகம் கொடுத்துள்ள இன்றைய நிலையில் எம் சமூகத்தின் அரசியல் நிலைப்பாடு ஒன்றுபட்ட அறிவியல் ரீதியான கட்டமைப்புக்கு உட்பட்டதாக அமைவதே காலத்தின் தேவையாக உள்ளது.

# 38

# நஜீப் ஹாஜியார் சிறுவர் பூங்கா

*தர்காநகர் வரலாற்றில் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தை நோக்கினால்கூட, அந்த 70 வருடகால வரலாற்றில் நிறைவு செய்யப்படாத ஒன்றே, 2019 இல் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பூங்கா.*

*இது சம்பந்தமாக நஜீப் ஹாஜியார் கூறியபோது* "Voice of Dharga Town" *இன்* Admin *ஆக இருக்கும் ஹிஸ்னி ஷஹீட், தர்கா நகரில் சிறுவர் பூங்கா ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தைக் கூறினார். அதற்கு தான் "இன்ஷா அல்லாஹ் அதற்கென 100 பேர்ச்சஸ் காணி ஒன்று தேவை. குறைந்தது 50 பேர்ச்சஸ் ஆவது இருக்க வேண்டும்" எனக் கூறியதாகத் தெரிவித்தார்.*

*பின்னர் இவ்வாறான ஒரு கருத்தை அல்ஹம்றா மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ஜனாப் நள்ரி அவர்கள் பதவியில் இருந்தபோது நஜீப் ஹாஜியாரிடம் உரையாடி அதற்குப் பொருத்தமான பாடசாலைக் காணி இருப்பதாகத் தெரிவிக்க, நஜீப் ஹாஜியார் எவ்வித மறுப்பும் இன்றி அதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்.*

*அதிபர் நள்ரி அவர்கள் அக்காணியை சிறுவர் பூங்காவிற்கு பயன்படுத்துவதற்கான அனுமதியை களுத்துறை மாவட்டக் கல்வி பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொடுத்தார். அதன் பின்னர் 10. 01. 2019இல் இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நடந்தது. நஜீப் ஹாஜியார் இதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.*

*இந்த நிலையில் நஜீப் ஹாஜியாரின் பிள்ளைகள் "வாப்பா எந்த நிதியிலிருந்து இந்தப் பணியைச் செய்யப் போகின்றீர்கள்? இதற்கு நிறையப் பணம் தேவைப்படலாமே" என்ற கேள்வியை எழுப்ப, அதற்கு அவர், "நான் அபுதாபியில் 40 வருடங்கள் பணியாற்றியவன். 33 வருடங்கள் அரச*

*ஊழியராக உயர்நிலையில் பணியாற்றினேன். 01.07.2018இல் ஓய்வு பெற்றேன். எனது ஓய்வு ஊதியப் பணம் உள்ளது. அதில் ஒரு பகுதியை இதற்காகச் செலவு செய்ய உள்ளேன்" எனக் கூறியதாகவும் பின்னர் பிள்ளைகளும் இந்த விடயம் குறித்து மகிழ்ச்சியடைந்ததாகவும் கூறினார்.*

*இந்த முயற்சியை மேற்கொண்டபோது, இதற்கான திட்டப் பணிகளை அமைப்பதில் தர்கா நகர்* Aid Foundation *உடன் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுடைய ஒத்துழைப்புடன் இந்த சிறுவர் பூங்கா நிர்மாணப் பணிகள் நான்கு மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு 18.4.2019இல் பலரின் சிறப்பான வருகைக்கு மத்தியில் சிறந்த முறையில் நஜீப் ஹாஜியார் அவர்களின் கைகளாலேயே திறந்துவைக்கப்பட்டது.*

*இன்று தினமும் பல குடும்பங்கள் மாலை நேரத்தில் தங்கள் பிள்ளைகளையும் பேரக் குழந்தைகளையும் அழைத்து வந்து அவர்களை அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள உடற்பயிற்சி விளையாட்டுக்களில் ஈடுபட வைத்து அவர்களின் மகிழ்ச்சியில் பெற்றாரும் பங்குதாரர்கள் ஆவதைக் காணலாம்.*

*இங்கு தொழுகை உணவு உண்பதற்கான வசதி என்பவற்றுடன் மலசல கூடங்களை உள்ளடக்கிய கட்டிடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.*

*நஜீப் ஹாஜியாரின் சமூகப்பணி பலவகைகளில் ஊரிலும் மாவட்டத்தின் வேறு இடங்களிலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அவை அவரின் சொந்த உழைப்பைக் கொண்டும் பிறர் உதவியைப் பெற்றுக் கொடுப்பதைக் கொண்டும் நிகழ்கின்றன. ஊரில் பிறரால் செய்யப்படாத விசேட பணிகளையும் தான் செய்யவேண்டும் என்ற கருத்து நஜீப் ஹாஜியாரிடம் இருந்து வருகின்றது. இதில்* Najeeb Hajiyar Children's Park *இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. தற்சமயம் இதனை பராமரிக்கும் பொறுப்பு அல் ஹம்றா மகா வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.*

# 39

## தர்கா நகரின் விளையாட்டுத்துறை

தர்கா நகரில் பல உதைபந்தாட்ட கழகங்கள் உள்ளன. தற்போதுள்ள கழகங்களில் இரண்டு 50 வருட வரலாற்றைக் கொண்டவை. மற்றவை ஓரிரு தசாப்தங்களுக்கு உரியவை. Y.M.S.C., Zavia S.C. ஆகிய இரண்டுமே அரைநூற்றாண்டு வரலாற்றைக் கொண்டுள்ளன.

இங்கு Zavia விளையாட்டு கழகத்திற்கு இன்னொரு வரலாறு உள்ளது. 1973இல் எம். எம். இஸ்மாயில் அவர்கள் தனது நண்பர்களுடன் சேர்ந்து ஸாவியா விளையாட்டுக் கழகத்தை உருவாக்குவதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னர், ஸாவியா வீதிக்கும் ஸாவியாவுக்கும் நெருக்கமாக உள்ள ஒரு நிலத்தில் இளைஞர்கள் இணைந்து உதைபந்தாட்டப் பயிற்சி பெற்றனர். ஸாவியா வீதிக்கும் பாஸியத்துல் ஷாதுலிய்யா ஸாவியாவுக்கும் அருகாமையில் இவர்கள் விளையாடி வந்ததால் தமது அணியையும் ஸாவியா அணியென்றே அவர்கள் அழைத்து வந்தனர்.

ஏ. ஆர். எம். பதியுத்தீன் அவர்கள் 1969இல் Y. M. S. C.யின் உருவாக்கம் முதல் நீண்ட காலமாக அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று சிறந்த முறையில் வழி நடத்தியுள்ளார். அவர் விளையாடிய காலத்தில் சிறந்ததோர் உதைபந்தாட்ட வீரராகவும் திகழ்ந்தார். இவருடைய காலத்தில் எம். முளfப்fபர் அகில இலங்கை உதைபந்தாட்ட தேசிய அணிக்குத் தெரிவானார். அதுபோல் ஸாவியா அணியிலும் ஸஹ்ரான், குல்சார், சுக்ரி, ஸனீர் போன்ற திறந்த வீரர்களும் இடம் பெற்றிருந்தனர்.

இவர்களுக்கு முன்னரும், சுதந்திரத்திற்குப் பின்னர் Dharga United என்ற ஓர் அணியும் இங்கு இருந்தது. அவர்கள் யானைக்குளம் என்ற இடத்தில் ஒரு விசாலமான புற்றரையில் விளையாடி வந்தனர். அது அன்று ஸாஹிராக் கல்லூரி மைதானத்தை விட விசாலமாக இருந்தது. அதுவும் அன்றைய காலத்தில் களுத்துறை மாவட்டத்தில் ஒரு சிறந்த அணியாக விளங்கியது. அந்த அணியில் இருந்தவர்களில் சிலர் இன்றும் உயிர் வாழ்கின்றனர்.

அந்த அணியில் இடம் பெற்றிருந்த சிறந்த வீரர்களில் நூர், நவ்மான், மர்சூக் (பதியுதீன் அவர்களின் சகோதரர்), அமீர் பைஸல் அவர்களின் சகோதரர் மர்சூக், ஷாபி, army நிஸார், திம்சார் ஏ.ஸீ.எம். நஸீர் ஆகியோரைக் குறிப்பிடலாம். இதே காலப்பகுதியில் இவ்வணிக்கு போட்டியாக ஓ. எல். எம். ஸியாத் ஒபிஸர் அவர்கள் Islamic United என்ற அணியை உருவாக்கினார். பின்னர் Three Stars, Black Diamond போன்ற அணிகளும் உதயமாகின. 1967இல் தர்கா நகர் பட்டின சபைத் தலைவராக இருந்த அல்ஹாஜ் ஏ எச் எம் சித்தீக் அவர்கள் Blue Crescent என்ற அணியை உருவாக்கினார். ஆனால் பழைய அணிகளில் இன்றுவரை நிலைத்து நிற்பவை ஸாவியா விளையாட்டுக் கழகமும் Y.M.S.C.யும் மாத்திரமே.

உதைப்பந்தாட்டம் தர்கா நகரில் செல்வாக்கு மிக்க விளையாட்டாகத் திகழ்கின்றது. பிற்காலத்தில் உருவாகிய கழகங்கள் Dharga York, United, Liverpool, Super Star, Golden Rise, Red Star, Grade Boys, Mokford என்பனவாகும். இவை இலங்கையில் முதல் தரப் போட்டிகளில் விளையாடும் அளவுக்கு தங்களை வளர்த்துக் கொண்டுள்ளன. அத்தோடு மேற்குறித்த இரு அணிகளுக்கும் கூட இன்று சவாலாக அமைந்துள்ளன.

ஜீலானி வீதியைச் சேர்ந்த இம்தியாஸ் ஹுஸைன் அவர்கள் Y.M.S.C. விளையாட்டு வீரராக இருந்த போது அகில இலங்கை பாடசாலைக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டு, தேசிய ரீதியாக அகில இலங்கை பாடசாலை அணியில் விளையாடினார். Red Star கழகம் உதைபந்தாட்டத்தில் அகில இலங்கை ரீதியில் தர்கா நகருக்கு பெருமை தேடித்தந்த அணி. 2020ஆம் ஆண்டில் அகில இலங்கை ரீதியாக அரசினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் Colombo FC உடன் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி இரண்டாம் இடத்தைப் பெற்றது. போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது. பெனால்டி கோல் அடிப்படையிலேயே இரண்டாம் இடத்தைப் பெறும் சூழ்நிலை ஏற்பட்டது. இலங்கையின் தலைசிறந்த 18 அணிகளில் ஒன்றாகவும் Red Star அணி இருந்து வருகின்றது.

தர்கா நகரின் உதைபந்தாட்டக் கழகங்கள் அனைத்தும் பேருவளை உதைபந்தாட்டக் கழகத்தில் (BFL) அங்கம் வகிக்

கின்றன. இதனூடாக அவற்றுக்கு தேசிய ரீதியில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கின்றது. 1975இல் உருவாக்கப்பட்ட BFL இன் தலைவராக 2010இல் தர்கா நகரைச் சேர்ந்த அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். பதியுத்தீன் தெரிவுசெய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து 2011இல் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். பஸ்லான் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு 2020 வரை அதனை வழி நடாத்தினார். இவர் 2015 - 2017 காலப் பகுதியில் இலங்கையின் தேசிய உதைபந்தாட்ட கட்டுப்பாட்டு அமைப்பான இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் (FFSL) பொருளாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

உதைபந்தாட்டத்தைப் போன்று கிரிக்கெட் விளையாட்டு வளர்ச்சி காணாத போதிலும் இங்கு அதிகமான கிரிக்கெட் பிரியர்கள் உள்ளனர். அவ்வப்போது அணிகளை உருவாக்கி மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும். அல் ஹாஜ் எம். ஏ. பத்தாஹ் அவர்களின் பேரனான நவீத் நவாஸ், இலங்கை அணிக்காக சில டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர். அண்மையில் 19 வயதுக்கு உட்பட்ட 50 ஓவர் உலகக்கிண்ண போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றியவர்.

இன்று தற்காப்புக் கலையாக கராத்தே பயிற்சி இலங்கையில் பிரபல்யம் பெற்று வருகின்றது. அதில் எம் சமூகத்தின் இளைஞர்கள் ஆர்வம் காட்டி வருவது வரவேற்க கூடியதே.

தேசிய அளவில் உதைபந்தாட்டத்தில் பிரகாசித்த இளைஞர்கள் சிலர் உள்ளனர். ஆனால் ஏனைய விளை யாட்டுக்களில் அகில இலங்கை ரீதியில் சாதித்தவர்களைக் காணமுடியவில்லை. அந்த அளவுக்கு எம் சமூகக் கண் ணோட்டம் குறைவாக உள்ளது. கரப்பந்தாட்டம் சில சமயங்களில் இங்கு விளையாடப்பட்டு வந்துள் ளது. சிறுவயதில் விளையாடக்கூடிய பல்வகை விளையாட்டுக்களும் ஊரிலிருந்து வந்துள்ளன. எதிர் காலத்தில் இங்கு இவை இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஊரில் நிலவுகிறது. ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கு உடற்பயிற்சி மிகவும் முக்கியமானது. சுவரிருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பது இதற்கு நன்றாகவே பொருந்தும்.

# 40

# Aid Foundation Sri Lanka

*தான் சார்ந்திருக்கும் சமூகத்தின் நலன் மட்டுமல்ல, சூழ்ந்து வாழக்கூடிய எல்லா இன மக்களினதும் கல்வி, சுகாதாரம் சார்ந்த உயர் சமூகப் பணிகளுக்காக தர்கா நகரைச் சேர்ந்த சில நண்பர்களால் ஆரம்பிக்கப்பட்டது* DTAF *என்ற சமூ கப் பணி அமைப்பு. இது அரசியல், மதம் சார்ந்த அமைப்பு அல்ல. இந்நாட்டின் சகல இன மக்களினதும் கல்வி பொருளாதாரத்துடன்கூடிய வளர்ச்சி, சமூகங்களினதும் நாட்டினதும் வளர்ச்சியாகவே கருதப்படுகின்றது. இந்த அடிப்படையை மையமாக வைத்தே இவ்வமைப்பு அரசின் நேரடி மேற்பார்வைக்கு உட்பட்டதாக கடந்த 2016 முதல் தன்னாலான சமூகப் பணிகளைச் செய்து வருகின்றது. இது தன்னுடைய பணிகளை தனது சக்திக்கு உட்பட்ட நிலையில் மேலும் விரிவுபடுத்துவதற்காக* DTAF *என்ற பெயரை* Aid Foundation Sri Lanka *என மாற்றி அமைத்துள்ளார்கள். இந்த பல்லின சமூகப் பணியைச் செய்யும் குடும்பத்தில் இணைந்து இருப்பவர்களில் அதிகமானவர்கள் தர்கா நகரைச் சேர்ந்தவர்கள். இதன் காரியாலயம் தர்கா நகர் மார்க்கெட் வீதியில் அமைந்துள்ளது.*

*ஒரு வருடத்திற்கு உட்பட்ட காலத்தில் இந்தப் பெயர் மாற்றம் சில நற்பணிகளையாவது பரந்துபட்ட நிலையில் விரிவாக்க வேண்டும் என்பதற்காகும். குறிப்பாக இவ்வமைப்பு கல்வியோடு சம்பந்தப்பட்ட வகையில் பல பாடசாலைகளுக்கு தன்னாலான பணிகளைச் செய்துள்ளது. சுகாதாரத் துறையிலும் இவர்கள் சில பணிகளை மேற்கொண்டுள்ளனர். இன்றைய கோவிட் தொற்றுக் காலப்பகுதியில் பல வகையிலும் பாதிக்கப்படடுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றனர். மிக வறுமையில் உள்ள சில குடும்பங்களுக்கு கூட காணி நிலங்களை வழங்கியுள்ளதுடன் வீட்டு திட்டங்களுக்கும் உதவியுள்ளனர்.*

Aid Foundation Sri Lanka வின் சமூகப் பணிகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது சிறந்தது எனக் கருதுகிறேன். கடந்த ஒரு வருட காலப்பகுதியில் பலரின் உதவியால் களுத்துறை மாவட்டத்தில் Covid-19 நெருக்கடிக்கு உள்ளான பல ஊர்களில் வாழும் மக்களுக்கு இன, மத வேறுபாடின்றி உணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர். தர்கா நகர் அல் ஹம்றா வித்தியாலயத்தில் 5 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் ஒரு சிகிச்சை அறையும் வைத்திய முதலுதவிகளை மேற்கொள்ள அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலைக் காணியில் அமைத்து கொடுக்கப்பட்டுள்ள நஜீப் ஹாஜியார் சிறுவர் பூங்காவிற்கான வேலைகள் இந்த நிறுவனத்தினாலேயே கண்காணிக்கப்பட்டு தற்போது அதன் நிர்வாகம் அப்பாடசாலை அதிபரினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வமைப்பு விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காகவும் தன்னாலான பணிகளைச் செய்து வருகின்றது. தர்கா நகர் ஞானிஸ்ஸர மகாவித்தியாலயத்தின் Leather ball கிரிக்கெட் விளையாட்டுக்காக விளையாட்டு உதாரணங்களை வழங்கி யுள்ளது. 2019இல் தர்கா நகரில் ரமழான் விளையாட்டுப் போட்டியும் நடத்தப்பட்டது. தர்காநகர் பாக்கீர் மாக்கார் விளையாட்டுத் திடலில் 2019, 2020 ஆம் ஆண்டுகளில் இவ்வமைப்பு ஊரின் சகல பாடசாலைகளையும் இணைத்து சுதந்திர தின நிகழ்வை நடத்தியது. இதில் ஞானிஸ்ஸர மகா வித்தியாலயம், பத்திராஜகொட வித்தியாலயம் என்பன கலந்து கொண்டதை ஒரு விசேட நிகழ்வாகக் கருதலாம். நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் உட்பட ஏனைய தனியார் கல்வி நிலைய மாணவ-மாணவிகளும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

தர்கா நகர் ஞானிஸ்ஸர பாடசாலைக்கு அதன் கல்விநிலை வளர்ச்சிக்காக தனது உதவியை வழங்கியுள்ளது. காலி மாவட்ட பனாப்பிட்டிய பாடசாலை மாணவ மாணவிகளுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களை வழங்கி உள்ளனர். 2021இல் லொக்டவுன் செய்யப்பட்ட துந்துவைப் பிரதேச மக்களுக்கு அவர்களின் 21 நாட்கள் நெருக்கடிக் கட்டத்தில் இலவச வைத்திய உதவிகளை

வழங்கியுள்ளனர். இதுபோன்ற 134 பணிகளை Aid Foundation Sri Lanka அமைப்பு தான் சார்ந்த சமூகத்தின் நலனுக்காகவும் சிங்கள-தமிழ் சமூகத்தினருக்கும் தொடர்ந்து செய்துள்ளது. இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்திலும் தனது செயல் திட்டங்களை விரிவுபடுத்துவது இவர்களின் இலக்காக உள்ளது.

Founders:

Fathihi Zawahir (Canada) AzaamNazimudeen (Qatar)

Ikram Hafeel (Malaysia) Mohamed Nowfer (Qatar)

Founder Members

Rizan Zawahir Fadi Hassan

Mohamed Munthaj - Secretary & Treasurer

Dulfan Razzak Imran Mulaffer

Mohamed Faik Zayan Zahran

Mohamed Nilam Hasmath Mohamed

Current Members of Aid Foundation Sri Lanka

Luthfan Ali – President Ahamed - Vice President

Mohamed Hisham Riskan Anwer

Aslam Nazeemudeen Mohamed Isthikam

Mohamed Faraj Mohamed Rislan

Mohamed Rusli Mohamed Nasam

Thuwam Mohamed Faisar Haider Mohamed Lafran

# *41*

# Aluthgama Development Foundation (ADF)

*தர்கா நகரில் 2014 ஜூன் மாதத்தில் ஏற்பட்ட இனரீதியான வன்முறைத் தாக்குதல்களை அடுத்து அவற்றினால் பாதிக்கப்பட்ட ஊர் மக்களின் வாழ்க்கையைச் சிறந்த முறையில் மறுசீரமைக்கும் நோக்குடனேயே* Aluthgama Development Foundation (ADF) *ஆரம்பிக்கப்பட்டது.*

*2014 ஜூன் 23ம் திகதி இந்நிறுவனம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. காலம் சென்ற பொறியிலாளர் ரஸ்மி ஹாஷிம் அவர்களே இதற்கான ஆலோசனையை முன்வைத்திருந்தார்.* ADF *என்பது அரசியல் சார்பற்ற, சமயப் பிரிவுகள் சாராத ஓர் அமைப்பாகும். "எமது மக்களின் பல்வேறுபட்ட ஆற்றல்களையும் பயன்படுத்தி கூட்டு முயற்சியின் மூலம் எமது சமூகத்தை மீளக்கட்டியெழுப்பி மேம்படுத்துவதற்கான பொதுச் செயல்தளமொன்றை அமைப்பதே"* ADF *அமைப்பின் இலக்காகும்.*

*உண்மையான இலங்கையருக்குரிய விழுமியங்களால் வளம் பெற்ற, வித்தியாசமான தொழில்வாண்மை கொண்ட, கல்வி பெற்ற சமுதாயமொன்றைக் கொண்டதான இலங்கையின் முன்மாதிரி நகரமாக தர்கா நகரை 2030ம் ஆண்டுக்குள் மாற்றுவதே* ADF *இன் தொலை நோக்காகும்.*

ADF*இன்பிரதானநோக்கம்தனதுஅங்கத்தவர்களிடமிருந்து நிதி திரட்டுவதன் மூலம் சமுதாய அபிவிருத்தயை மேற் கொள்வதோடு இந்நிதியைப் பயன்படுத்தி தர்கா நகரை சகல துறைகளிலும் அடுத்த மட்டத்திற்கு விருத்தி செய்து 2030ம் ஆண்டாகும் போது அதனை பரிபூரண மாதிரி நகரொன்றாக மாற்றியமைப்பதாகும்.*

*தற்போது செயற்பட்டுவரும் அனைத்து அமைப்புக்களினதும் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்து பொது அபிவிருத்திப் பாதையை நெறிப்படுத்தும் நோக்கோடு அது செயற்படுகிறது.*

ADF *இன் தொழிற்பாடுகள்:*

*2014ம் ஆண்டுத் தாக்குதலின் போது ஏற்பட்ட சகல சேதங்களையும் பற்றிய தரவுகளைச் சேகரித்து பொது தரவுத்-*

தளம் (Database) ஒன்றினை உருவாக்கியது. இதன் மூலம் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்ட அமைக்களுக்கு திருத்தமான, நம்பகமான தகவல்களை வழங்கக்கூடியதாக இருந்தது. இது வளங்களை வினைத்திறனுள்ள முறையில் பகிர்ந்தளிக்க உதவியது.

பலம் மிக்க தரைநிலை ஒருங்கிணைப்பு அணியொன்றை உருவாக்கி நிவாரண நிதிகளை ஒழுங்கான முறையில் பகிர்ந்தளிக்க உதவியது.

நிதி திரட்டுதல், மீள நிர்மாணித்தல், புனருத்தாரனம் வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த ஏனைய அமைப்புக்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியது.

Serendib Education Foundation (SEF), Muslim Aid, YMMA, Mercy Lanka, Insight Institute போன்ற அமைப்புக்களுடன் இணைந்து கல்வி மறுமலர்ச்சி, வாழ்வாதார விருத்தி, இளைஞர் விருத்தி நிகழ்ச்சிகள், வீட்டுத் தொழில்களுக்கான micro financing, வியாபார விருத்தி ஆலோசனை முதலிய செயற்பாடுகளில் பங்கு பற்றியது.

மகளிர் மற்றும் இளைஞர் வலுவூட்டல் மையமொன்றை அமானா தகாபுல் மற்றும் ஆயிஷா ஸித்தீக்கா கல்வி நிலையம் என்பவற்றின் பங்கேற்போடு நிறுவியது.

எமது பிரதேசத்தில் சமாதான சகவாழ்வுக்குரிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது.

ஊர்கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஊரில் CCTV கமராக்களை நிறுவியது.

வித்தியாசமான துறைகளில் உயர் கல்வி பெறும் மாணவர்களுக்கான உதவிகளை வழங்குகிறது.

**ADF ஆளுனர் சபையின் ஸ்தாபக அங்கத்தவர்கள்:**

Br. Y.I.M. Hameez (Chairman)

Br. Hussain Sadique (Founder Chairman)

Br. Ikram Fatha

Late Br. Faizal Jiffry

Br. Dr. Rumie Hashim

Br. Ilham Zain

**இந்நூலுக்குத் தேவையான தகவல்களை வழங்கி உதவி யோர்:**

*எம். ஜே. எம். ரியாஸ்*
*எம். எம். நிஸாம் ஆசிரியர்*
*எம். இஸட். எம். நயீம்*
*ஏ. சீ. எம். ஹிபால்*
*ஏ. பீ. எம். ஹஸன் நவ்பல்*
*எம். எஸ். எம். சுபுக்கி ஆசிரியர்*
*எம். எஸ். எம். ரிப்கான்*
*மௌலவி எம். இதட். எம். மஸீர்*
*ஏ. ஆர்.எம். பதியுத்தீன்*
*நஜீப் பின் அமீர் ஆலிம்*
*எம். எப். எம். பஸ்லியா, அதிபர்*
*ஏ. ஏ. எம். பாயிஸ், அதிபர்*
*எம். என். எப். நஸ்ரின், அதிபர்*
*எம். ஆர். எம். ஸில்மி, மவ்லவி*
*எம். எச். எம். அப்துல் ஹலீம்*
*மர்ஹூம், பேராசிரியர் ஏ. ஜி. ஹுசைன் இஸ்மாயில்,*
*எம். எஸ். எம். சரூக், ஆசிரியர்.*
*தர்கா நகர் ஸபா*
*எம். ஐ. எம். பாஹிம்*
*எம். ரீ. எம். பயாஸ்*
*எஸ். ஏ. அலவி பூ மவ்லானா*
*எம். இதட். எம். ஹமீஸ்*
*எம். ஜே. எம். சாஹித்தீன்*
*எம். எச். எம். அதாஹிம்*
*எம். எஸ். எம். நூர்.*
*எம். ஜே. எம். அக்பர், ஆசிரியர்*
*எம். எல். எம். லாபிர் பாஸி, ஆசிரியர்*
*ஏ. பீ. எம். சுஹைர்*
*ஏ. எம். எம். முஹிதீன், ஆசிரியர்*
*பத்தி ஸவாஹிர். (கனடா)*
*எம்.எஸ்.எம். பஸ்லான்*
*பீ.எச்.எம். ஹஸீம்*

**உஷாத்துணை நூல்கள்:**

*தர்கா நகர் - ஆசிரியர் மர்ஹூம், ஐ. எல். எம். சுஐப், அதிபர்*

*இலங்கையில் முஸ்லிம் கல்வி, ஷாபி மரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும் - ஆசிரியர் - ஏ. எம். நஹியா.*

குறிப்புக்கள்: